விஞ்ஞான இளமாணி (பொது) வெளிவாரி பட்ட கற்கை நெறி (உயிரியல் விஞ்ஞானம்)	3 வருடங்கள்	ஆங்கிலம்
விஞ்ஞான இளமாணி (பொது) வெளிவாரி பட்ட கற்கை நெறி (பௌதிக விஞ்ஞானம்) (பிரயோக விஞ்ஞான பீடம்)	3 வருடங்கள்	ஆங்கிலம்
பட்டப்பின் கற்கை நெறிகள்		
முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா	ஒரு வருடம்	ஆங்கிலம்
வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டம்	இரண்டு வருடங்கள்	ஆங்கிலம்

கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா	18 மாதங்கள்	சிங்களம்
சிறுவர் பாதுகாப்பு பட்டப்பின் டிப்ளோமா	ஒரு வருடம்	ஆங்கிலம்
விவசாய முதுமாணிப் பட்டம்	ஒரு வருடம்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் தத்துவமாணிப் பட்டம் - (முழு – நேரம்) – பி. வி. பீ.	இரண்டு வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் தத்துவமாணிப் பட்டம் - (பகுதி – நேரம்) – பி. வி. பீ.	மூன்று வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் முனைவர் பட்டம் (முழு – நேரம்) – பி. வி. பீ.	மூன்று வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் தத்துவமாணிப் பட்டம் (பகுதி – நேரம்) – பி. வி. பீ.	ஐந்து வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் தத்துவமாணிப் பட்டம் - (முழு – நேரம்) - ம. இ. வி. பீ.	இரண்டு வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் தத்துவமாணிப் பட்டம் - (பகுதி – நேரம்) – ம. இ. வி. பீ.	மூன்று வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் முனைவர் பட்டம் - (முழு – நேரம்) - ம. இ. வி. பீ.	மூன்று வருடங்கள்	ஆங்கிலம்
ஆய்வு மூலம் முனைவர் பட்டம் - (பகுதி – நேரம்) - ம. இ. வி. பீ.	நான்கு வருடங்கள்	ஆங்கிலம்

09. மீண்டெழும் செலவினங்களின் விபரங்கள்

விடயம்	2020 (ரூ.)	2021 (ரூ.)
a. தனிநபர் ஊதியங்கள்	1,739,629,220.00	1,765,944,698
b. பயணச் செலவுகள்	1,228,192.00	1,661,208
c. விநியோகம்	51,679,393.00	44,335,516
d. பராமரிப்புச் செலவுகள்	16,377,306.00	12,826,239
e. ஒப்பந்த சேவைகள்	226,290,874.00	203,297,725
f. ஏனையவை	46,829,777.00	57,159,230
மொத்தம்	**2,082,034,762.00**	**2,085,224,616**

10. மூலதன செலவினங்களின் விபரங்கள்

விடயங்கள்	2021 (ரூ.)
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு	18,237,702
நிலம்	3,639,339
உட்கட்டமைப்பு சொத்துக்கள்	1,259,177
தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	23,378,521
ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல்	8,387,958
கட்டடங்கள் & அமைப்புக்கள் கொள்வனவு	40,076,495
நூலகம் மற்றும் காலச்சுவடுகள்	620,084
ஆலை & இயந்திரம்	13,371,602
பட்டமளிப்பு விழா மேலாடை & மாலைகள்	14,700
நடந்து கொண்டிருக்கும் வேலைப்பாடுகள் & சேர்ப்புக்குரிய முற்பணங்கள்	404,124,005
மொத்தம்	**513,109,583**

11. கருத்திட்ட விபரங்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்)

பெயர் மற்றும் விபரங்கள்	கடன் / மானியம்	நிதி முகவர்	மொ.செ.ம ரூபா.
இரு சுதேச நாடுகளில் உலகளாவிய சுமையான மஞ்சள் காமாலை நோயை இல்லாதொழிக்க முயற்சி செய்தல்	மானியம்	கலிபோர்ணியா பல்கலைக்கழகம்	75,584,520
உலக சுகாதார நிறுவனம் - பொது சுகாதார வைத்திய தாதியர்கள் சுகாதார ஆராய்ச்சி பயிற்சி	மானியம்	உலக சுகாதார நிறுவனம்	506,375
உலக சுகாதார நிறுவனம் - முதியோர் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக சுகாதார சொத்துக்கள் செயற் திட்டம்	மானியம்	உலக சுகாதார நிறுவனம்	1,184,500
உலக சுகாதார நிறுவனம் - இலங்கையில் பாரம்பரிய மற்றும் சுதேச துறையின் சூழ்நிலை பகுப்பாய்வு	மானியம்	உலக சுகாதார நிறுவனம்	3,340,000
எம். சீ. எச். ஆர். யூ செயற்திட்டம்	மானியம்	எடின்பேர்க் பல்கலைக்கழகம்	18,768,000
தே. வ. ம ஆய்வு மானியம்	மானியம்	தேசிய விஞ்ஞான மன்றம்	
ஸ்ரீ ப்ரொம் - இலங்கையில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சி	மானியம்	சர்வதேச பொருளாதார கூட்டமைப்பு நிறுவனம், இத்தாலி	5,116,320
ரஜரட்ட பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் விவசாய சமூகம ஆகியவற்றுக்கு இடையே கூட்டாண்மையை வலுப்படுத்துதல்	மானியம்	யுனெஸ்கோ	4,199,959
வீ. ரீ. என் திட்டத்தின் தாக்க மதிப்பீடு குறித்த கூட்டு ஆய்வு	மானியம்	ஜேர்மனிய அபிவிருத்தி கூட்டுத்தாபனம்	1,967,500
சிறுதரப்பு விவசாய கூட்டு வணிக இணைந்த கற்கை நிகழ்ச்சித் திட்டம்	மானியம்	பதுளை மாவட்ட பசுமை இல்ல சமூகம்	2,267,155

ஜப்பானிய மொழி ஆய்வுகூட நிர்மாணம், சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்	மானியம்	ஜப்பானிய தூதரகம்	12,211,146
கல்விசார் ஆய்வுகள் - ப. மா. ஆ முனைவர் பட்டப் படிப்புக்கான மானியங்கள்	மானியம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	12,700,000
சுகாதார விருத்தி அணுகுமுறையைப் பயன்படுத்தி ஆரோக்கியத்தின் வணிக நிர்ணயங்களை முன்வைக்க மாணவர்களுக்கு அதிகாரம் அளித்தல்	மானியம்	உலக சுகாதார நிறுவனம்	1,874,800
வீட்டு அடிப்படையான முன் பிள்ளைப் பருவ பராமரிப்பு & விருத்தி தேசிய உத்தித் திட்டங்கள்	மானியம்	பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு	1,237,500
ஏ. எச். ஈ. ஏ. டீ செயற்திட்டம்	மானியம்		691,000,000
மொத்தம் (ரூ.)			**831,957,775**
பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தப்படுகின்ற ஏனைய செயற்திட்டங்கள்	மானியம்		
எக்லிப்ஸ் செயற்திட்டம்	மானியம்	கீலே பல்கலைக்கழகம் - ஐக்கிய இராச்சியம்	£ 874,103
எராஸ்மஸ்+ நிகழ்ச்சித் திட்டத்தினால் அளிக்கப்பட்ட மானியம் (201/C384/04)	மானியம்	ஐரோப்பிய ஆணைக்குழு	ஐ. ஒ. யூரோ 96,394.00
எஸ்.ரீ. ஏச். ஆர். டீ செயற்திட்டம்	மானியம்	ஆசிய அபிவிருத்தி வங்கி	US $ 24.0 மில்லியன்
ஈ. என். ஏ. சீ. ரீ. செயற்திட்டம்	மானியம்	ஐரோப்பிய ஒன்றியம்	ஐ. ஒ. யூரோ 69,875

12. கருத்திட்ட செலவின விபரங்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலங்கள்)

பெயர் மற்றும் விபரங்கள்	மொ.செ.ம ரூபா.	2020 ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூபா.	2021 ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூபா.	31.12.2021 ஆம் திகதியில் மொத்த செலவினம் ரூபா.
இரு சுதேச நாடுகளில் உலகளாவிய சுமையான மஞ்சள் காமாலை நோயை நிவர்த்தி செய்தல்	75,584,520	13,969,847	5,093,496	70,409,336
உலக சுகாதார நிறுவனம் - பொது சுகாதார வைத்திய தாதியர்கள் சுகாதார ஆராய்ச்சி பயிற்சி	506,375		-	209,550
உலக சுகாதார நிறுவனம் - முதியோர் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக சுகாதார சொத்துக்கள் செயற் திட்டம்	1,184,500	366,591	-	1,175,221
உலக சுகாதார நிறுவனம்- இலங்கையில் பாரம்பரிய மற்றும் சுதேச துறையின் சூழ்நிலை பகுப்பாய்வு	3,340,000	2,070,000	-	2,162,010
எம். சீ. எச். ஆர். யூ செயற்திட்டம் (விற்பனையாளர் ஆய்வு)	18,768,000	8,477,941	7,255,844	20,397,764
எக்லிப்ஸ் செயற்திட்டம்	£ 874,103	13,583,144	37,739,427	51,322,572
உ. சு. நி – என். என். க்யூ. எஸ் செயற்திட்டம்	1,468,000		1,381,810	1,381,810
ஸ்ரீ ப்ரொம் - இலங்கையில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சி	5,116,320	1,939,464	893,694	4,180,203
ரஜரட்ட பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் விவசாய சமூகம் இடையே கூட்டாண்மையை வலுப்படுத்துதல் (யுனெஸ்கோ)	4,199,959	2,630,980		4,083,839
வீ. ரீ. என் திட்டத்தின் தாக்க மதிப்பீடு குறித்த கூட்டு ஆய்வு	1,967,500	89,425		1,877,955
எராஸ்மஸ்+ நிகழ்ச்சித் திட்டத்தினால் அளிக்கப்பட்ட மானியம் (201/C384/04)	ஐ. ஒ. யூரோ 96,394.00	1,108,241	2,226,156	1,108,241
சிறுதரப்பு விவசாய வணிக கூட்டு இணைந்த கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் (எஸ். ஏ. பீ. பீ)	2,267,155			-
ஜப்பானிய மொழி ஆய்வுகூட நிர்மாணம், சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்	12,211,146	12,012,323	285,059	12,300,582
கல்விசார் ஆய்வுகள் - ப. மா. ஆ முனைவர் பட்டப் படிப்புக்கான மானியங்கள்	12,700,000			11,282,134
சுகாதார விருத்தி அணுகுமுறையைப் பயன்படுத்தி	1,874,800			953,730

ஆரோக்கியத்தின் வணிக நிர்ணயங்களை முன்வைக்க மாணவர்களுக்கு அதிகாரம் அளித்தல் (பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு)				
வீட்டு அடிப்படையான முன் பிள்ளைப் பருவ பராமரிப்பு & விருத்தி தேசிய உத்தித் திட்டங்கள் தயாரிப்பு	1,237,500	549,000	480,000	1,029,000
ஏ. எச். ஈ. ஏ. டீ செயற்திட்டம	691,000,000	63,888,792	366,812,215	485,271,007
எஸ்.ரீ. ஏச். ஆர். டீ செயற்திட்டம்	ஐ. அ. $ 24.0 மில்லியன்	147,000,000	304,000,000	500,900,000
ஈ. என். ஏ. சீ. ரீ. செயற்திட்டம்	ஐ. ஒ. யூரோ 69,875		464,726	464,726
மொத்தம்		**267,685,749**	**726,632,428**	**1,170,509,680**

13. நிதி முன்னேற்ற விபரங்கள் (செலவினங்கள்)

விடயம்	2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூபா.	2021 ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூபா.	சேமிப்பு/ மிகை ரூபா.
கருத்திட்டம் தவிர்ந்த மீண்டெழும் செலவினங்கள்	2,113,224,616	2,085,224,616	28,000,000
கருத்திட்டம் தவிர்ந்த மூலதன செலவினங்கள் (மேலதிக மாணவர்களை உள்வாங்குவதற்கான உ.க.வி.ம.அ செயற் திட்டத்தின் கீழ் கட்டுமாண செயற் திட்டத்துக்காக பெறப்பட்ட நிதி மற்றும் ஈட்டப்பட்ட நிதி ஆகியன உள்ளடக்கப்படுகின்றன)	470,553,012	499,607,596	(29,054,584)
கருத்திட்டம் - உள்நாட்டு செயற்திட்டம்	500,000	480,000	20,000
கருத்திட்டம் - வெளிநாட்டு நிதி மூலம்	726,152,000	726,152,428	(428)
மொத்தம்	**3,310,429,628**	**3,311,464,640**	**(1,035,012)**

14. நிதி முன்னேற்ற விபரங்கள் (ஈட்டிய வருமானம்)

வருமான மூலங்கள்	2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபா.)	2021 ஆம் ஆண்டில் சேகரித்த நிதி (ரூபா.)	பற்றாக்குறை/ மிகை
a. பட்டப் படிப்பக்கள	7,153,000	6,207,772	(945,228)
b. வெளிவாரி பட்ட கற்கைநெறிகள்			
c. டிப்ளோமா பாட நெறிகள் ஆங்கிலம்/ த.தொ.தொ			
d. பட்டப்பின் கற்கை நெறிகள்	48,500,000	69,261,421	20,761,421
e. சான்றிதழ் கற்கை நெறிகள்			
f, ஆலோசனைச் சேவைகள்			-
g. ஏனையவை (மாணவர் கட்டணங்கள் வட்டிகள் ஆகியவை…)	24,400,000	46,016,869	21,616,869
மொத்தம்	**80,053,000**	**121,486,062**	**41,433,062**

15. 2021 ஆம் வருடத்திற்கான நிதி செயல்திறன் பகுப்பாய்வு

விடயம்	பீடம்					
	விவசாயம்	பிரயோக விஞ்ஞானம்	முகாமைத்துவ கற்கைகள்	மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானம்	சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல்	தொழில்நுட்பம்
மாணவர் ஒருவருக்கான மீள் செலவினங்கள் (மீ.செ)	558,448	294,756	199,939	444,310	193,973	159,514
மாணவர் ஒருவருக்கான மூலதன செலவினங்கள் (மூ.செ)						
மொத்தம்	**558,448**	**294,756**	**199,939**	**444,310**	**193,973**	**159,514**

மாணவர் ஒருவருக்கான மீள் செலவினங்கள் (மீ.செ) = $\frac{\text{பீடத்தின் மீள் செலவினங்கள்}}{\text{பீடத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை}}$

மாணவர் ஒருவருக்கான மூலதன செலவினங்கள் (மூ.செ) = $\frac{\text{பீட மூலதன செலவினங்கள்}}{\text{பீடத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை}}$

பீடம் ஒன்றுக்கான மூலதன செலவினம் = பீட மூலதன செலவினம் + பொது மூலதன செலவினம் x $\frac{\text{பீடத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை}}{\text{பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை}}$

16. 2021 ஆம் வருடத்தில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரங்கள்

உட்கட்டமைப்பு	செலவு ரூ. (மில்லி.)
தொ. தொ. க. நி. கட்டடம்	47,855,434
தொழில்நுட்ப பீட கட்டடம் (கட்டம் II & கட்டம் III)	33,446,913
சாலியபுர பகுதியில் மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீடத்துக்கான சிகிச்சைக்கு முன்னரான கட்டடத்தை வுடிவமைத்தல், நிர்மாணம், பூர்த்தி செய்தல்	243,973,989
கணினி ஆய்வுகூட புனர் நிர்மாணம் - மு. க. பீ.	1,413,484
தரைவடிவமைப்புப் பிரிவுக்கான கழிவறை கட்டுமாணம், ரம்பாவ உத்தியோகத்தர் விடுதிக்கான கழிவுத தொட்டிகள், திறந்த வெளி அரங்கு புனரமைப்பு	3,594,109
விவசாய பீடத்தின் தாதுசேன ஆண்கள் விடுதியில் உள்ள குளியல் அறைகளுக்கான நீர் காப்பு முறைமையை அமைத்தல்	2,942,990
விவசாய பீடத்தின் ஆய்வுகூட தொகுதி மற்றும் விரிவுரை மண்டபங்கள்	736,927
மிஹிந்தலை மாணவர் விடுதிகள் வளாகத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமையை அமைத்தல்	51,336,041
முகாமைத்துவ கற்கைகள் பீட கட்டடத் தொகுதி	1,579,326
பி. வி. பீடத்தின் இரண்டாம் மாடியில் உள்ள கேட்போர் கூடத்தினை மேம்படுத்தல்	1,248,326
உத்தியோகத்தர் விடுதி – பதிவாளர்/ நிதியாளர் & ஊழியர்கள்	34,432,844
மாணவர் சிற்றுண்டிச் சாலை புனர் நிர்மாணம், இ. ர. ப.	1,463,585
சமூக மருத்துவ கற்கைத்துறைப் பிரிவினை விரிவாக்குதல்	507,232
மூன்று விடுதிகளுக்கு ஒளியியல் நார் வலையமைப்பினை வழங்குதல் & நிறுவுதல்	1,259,177

பீடங்கள், நூலக வலையமைப்பு மற்றும் கல்விசார் பிரிவுகள், நிலையங்கள் & அலகுகள் என்பவற்றின் அறிக்கைகள்

17. விவசாய பீடம்

A. அறிமுகம்

2001 ஆம் ஆண்டு இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது 17 மாணவர்களுடன் ஸ்தாபிக்கப்பட்டது. பீடமானது நீடித்து நிலைத்து நிற்கும் விவசாய முறைமையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் குறிப்பாக இலங்கையின் உலர் வலயத்தின் சூழல்தன்மைக்கு ஏற்ப உற்பத்தி செய்தலை முதன்மையாகக் கொண்டு விவசாயத்தில் விசேட பட்ட கற்கை நெறி ஒன்றை வழங்கி வருகின்றது. இப் பட்ட கற்கை நெறியானது வேறுபட்ட விவசாய முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட பாடத் தொகுதிகளை வழங்கும் எட்டு அரையாண்டுகளை கொண்டது. தற்போது, விவசாய பீடமானது விவசாய பொறியியல் மற்றும் மண் விஞ்ஞானம், விவசாய முறைமைகள், கால்நடை மற்றும் உணவு விஞ்ஞானம் என்பவற்றுடன் தாவர விஞ்ஞானம் என்னும் நான்கு கற்கைத் துறைப் பிரிவுகளைக் கொண்டது. மேலும், பீடமானது ஒரு கணினி அலகு, ஆங்கில மொழி கற்பித்தல் அலகு, விவசாயப் பண்ணை மற்றும் ஒரு நூலகம் என்பவற்றை கொண்டுள்ளது. மண் விஞ்ஞானம், தாவர விஞ்ஞானம், கால்நடை மற்றும் உணவு விஞ்ஞானம் மற்றும் புவியியல் தகவல் முறைமைகள் போன்ற ஆய்வுகூடங்கள் என்பவற்றுடன் விவசாய பொறியியல் தொழிற்கூடமும் ஒன்றிணைந்து மாணவர்களின் பகுப்பாய்வு மற்றும் ஏனைய திறன்களை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

விவசாய பீடமானது வருடாந்தம் 175 மாணவர்களை உள்ளெடுப்பதுடன் அனைத்து அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் வளாக விடுதி வசதிகளை அளித்து வருகின்றது. பீடத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கையானது தற்போது கிட்டத்தட்ட 90 ஆக காணப்படுகின்றது. இதன் பட்ட கற்கை நெறியானது அடிப்படை பாடவிதானங்களையும் மற்றும் மூன்று (03) மாத காலப்பகுதியுடனான தொழிற்துறைப் பயிற்சி நெறியை உள்ளடக்கியதான ஒரு பிரதான பாடவிதானத்தையும் கொண்டுள்ளது. அடிப்படை பாடவிதானங்கள் முதல் ஐந்து அரையாண்டுகளில் பிரிக்கப்பட்டு எல்லா மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 6 ஆம் மற்றும் 7 ஆம் அரையாண்டுகளில், மாணவர்கள் விசேட பாடவிதானங்களை அவர்களின் விருப்பின் பேரில் தெரிவு செய்ய அனுமதிக்கப்படுகின்றது. இறுதி அரையாண்டில், மாணவர்கள் ஆறு கிரடிட் புள்ளிகளை வழங்கும் சுய ஆய்வு ஒன்றினை ஆராய்ந்து அதன் விரிவான ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதுடன் தொழிற்துறைத் தொழற் பயிற்சியிலும் ஈடுபட வேண்டும்.

பீடத்தினால் வழங்கப்படும் பிரதான பாடவிதானங்கள் ஆவன;

- விவசாய உயிரியல்
- விவசாய பொருளியல் மற்றும் விரிவாக்கம்
- விவசாய முறைமைகள் மற்றும் முகாமைத்துவம்
- கால்நடை உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம்
- உணவுப் பயிர் விஞ்ஞானம்
- விவசாய பொறியியல்
- சூழல் மண் முகாமைத்துவம்
- உணவு உற்பத்தி மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்

பட்ட கற்கை நெறிக்கு மேலதிகமாக, பீடமானது விவசாய முதுமாணி பட்டப்பின் கற்கை நெறியை 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகின்றது மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விவசாயத்தில் முதுதத்துவமாணி மற்றும் கிராமிய அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா ஆகிய பட்டப்பின் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கையின் பட்டப்பின் கற்கைக்கான சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்காக பீடமானது விவசாயத்தில் கலாநிதிப் பட்டக் கற்கை நெறியை 2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. மேலும், பீடமானது விவசாய சூழலியலில் விஞ்ஞான முதுமாணி, விவசாய தொழில்நுட்பம் மற்றும் சூழல் முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணி, அறுவடைக்குப் பின்னரான மற்றும் உணவு தொழில்நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணி, தாவர

விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி மற்றும் தாவர விஞ்ஞானத்தில் முதுமாணி போன்ற பல பட்டப்பின் கற்கை நெறிகளை உரிய அனுமதி அங்கீகாரங்களுடன் அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளது.

B. அடைவுகள்

- 2021 ஆம் ஆண்டு தனது 20 ஆவது வருட நிறைவை கொண்டாடியது.
- அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூட மற்றும் விரிவுரை மண்டபங்களுடனான கட்டடத் தொகுதிக்கு (ரூ. 759 மில்லியன்) உரிய விலைமனுக்கோரல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.
- 13 ஆவது வருடாந்த ஆராய்ச்சி சிம்போசியம் இணைய வழியில் நிகழ்நிலை மூலமாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டதோடு பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டன.
- முன்மொழியப்பட்ட தத்துவமாணிப் பட்ட கற்கை நெறியானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.
- பட்டப்பின் கற்கை நெறி ஆகிய "விவசாய முதுமாணி கற்கை நெறி" இற்கான இரண்டாவது அணி மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.
- பீட வளாகத்தில் இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப காப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
- பீடத்தின் "இலங்கை விவசாயம் மற்றும் சூழல்தொகுதிகள் தொடர்பான ஆய்விதழ்" எனும் இணைய ஆய்விதழ் தே. வி. ம. இன் எஸ். எல். ஜே. ஓ. எல். இனால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.
- விரிவுரை மண்டபங்களின் வசதிகள் மேம்படுத்தப்பட்டு உள்ளன.
- 600 விரிவுரை மண்டப கதிரைகள் உயர்கல்வி வரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் திட்டத்தின் பீட செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டன
- தொழிற்துறைப் பயிற்சிகளுக்காக ஒப்பந்தங்களை மேற்கொண்டு தொழில் நிறுவனங்களுடன் கூட்டிணைப்பை ஏற்படுத்தி உள்ளது.
- கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியாளர்களுக்கான தொழிற் பயிற்சி தொடர்பாக பல தொழிற்பட்டறைகளை உயர்கல்வி வரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் திட்டத்தின் பீட செயற்திட்டத்தின் கீழ் நடாத்தியது
- "ஆந்ரோ ஆமதா" எனும் 2019/2020 ஆம் கல்வியாண்டு மாணவ அணிக்குரிய ஆங்கில இரவு நிகழ்ச்சியை வரலாற்றில் முதன்முறையாக நிகழ்நிலையில் நடாத்தியது
- ஆய்வு நோக்குடனான அபிவிருத்தியின் ஊடாக உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட உயர்கல்வி வரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் திட்டத்தின் கீழ் ரஜரட்டப் பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சூழல் வசதி (ர. ப. க. சூ. வ) எனும் பெயரில் புதிய வெளிக்கள ஆய்வுகூடம் ஒன்று நிறுவப்பட்டது.

C. தோல்விகளும் நியாயங்களும்

- நிதிப்பற்றாக்குறை காரணமாக பண்ணை வீதி அமைப்பு மேம்படுத்தல் ஆரம்பிக்கப்படாமை.
- கோவிட் - 19 தொற்றுநிலைமை காலக்கேடு காரணமாக ஆய்வுகூட மற்றும் விரிவுரை மண்டபங்களுடனான கட்டடத் தொகுதி ஒன்றை ஸ்தாபித்தலில் தாமதம் ஏற்பட்டமை
- நிதிப்பற்றாக்குறை காரணமாக பால் மற்றும் இறைச்சி பதப்படுத்தல் அலகுகளுக்கு உரிய உபகரணங்கள் பொருத்தப்படாமை.

D. எதிர்காலத் திட்டங்கள்

- விவசாயத்தில் பட்டப்பின் ஆய்வு மூல பட்ட கற்கைநெறிகளை (கலாநிதிப் பட்டம் மற்றும் முதுமாணி) அமுல்ப்படுத்துதல்.
- பீடப் பண்ணையில் கால்நடை வளர்ப்பு அலகை விரிவுபடுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளல்

- ஆய்வுகூட மற்றும் விரிவுரை மண்டபங்களுடனான கட்டடத் தொகுதி ஒன்றை தாபித்தல்.
- அனைத்து அத்தியாவசிய வசதிகளுடன் கூடிய பால் மற்றும் இறைச்சி பதப்படுத்தல் அலகுகளை அமைத்தல்.
- பீடத்திற்கு உரிய 14 ஆவது வருடாந்த ஆய்வு சிம்போசிய அமர்வினை ஒழுங்குபடுத்தல்.
- பீடத்தின் பண்ணை வளாகத்தின் உள் வீதி அமைப்பை மேம்படுத்தல்.
- பீடப் பண்ணை மற்றும் புதிய நிலம் (3 ஆம் துண்டு) என்பவற்றை சுற்றி வேலிகளை நிர்மாணித்தல்.
- பீடத்தின் சூழல் அழகினை மேம்படுத்தல்.
- பீடத்தின் மாணவர் விடுதி உணவகத்தை அமைத்தல்
- பீட நுழை வாயில் மற்றும் சுற்று மதில் (தொகுதி 1, 2 & 3) இனை மேம்படுத்தல்
- விவசாய பீடத்திற்கான நிர்வாக கட்டடத் தொகுதியை அமைத்தல்
- பீட வளாகத்தின் உள் வீதி அமைப்பை மேம்படுத்தல் (தொகுதி 2 & 3)
- விற்பனை நிலையத்தை மேம்படுத்தல்
- துறைப் பிரிவின் கட்டடத் தொகுதி மற்றும் கேட்போர் கூடம் என்பவற்றிற்கான வலையமைப்பை மேற்கொள்ளல் (இணையம் & தொலைபேசி) விவசாய பீடத்தின் பீடாதிபதி, கல்வி சார் உத்தியோகத்தர்கள், உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர், பண்ணை முகாமையாளர், மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான தங்குமிடங்களை அமைத்தல்
- மின்னல் காப்பு மற்றும் தீ அணைப்பு வசதிகளை அமைத்தல்
- சூரிய படலத்தை பொருத்துதல்

18. பிரயோக விஞ்ஞான பீடம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகமானது (இ. ர. ப) 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட 896/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் அநுராதபுர நிர்வாக மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்த மாணவர்களை முன்னேற்றுவதற்காக மூன்று வருட பட்ட கற்கை நெறியை வழங்குவதை உடனடி நோக்காகக் கொண்டு, பொல்கொல்ல பிரதேசத்தில் இருந்த மத்திய மாகாணத்துடன் இணைந்த பல்கலைக்கழக கல்லூரியை இணைத்து பீடமானது 1997 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி அன்று 3 வருட பட்ட கற்கைநெறியை 102 மாணவர்களைக் கொண்ட அணியுடன் கால்கோள் செய்யப்பட்டு 1998 ஆம் ஆண்டில் அம் மாணவர்கள் பட்டம் பெற்றனர். 1997 ஆம் ஆண்டில் பதிவு செய்தவர்களை முதலாவது மாணவ அணியாக பட்ட கற்கை நெறியை மேற்கொள்ள ப. மா. ஆ இனால் அனுப்பப்பட்டது.

பொல்கொல்ல பிரதேசத்தில் கிட்டத்தட்ட 10 வருடங்கள் இயங்கிய பின்னர் இறுதியில் பீடமானது மிஹிந்தலையிலுள்ள பிரதான வளாகத்தில் 2006 ஆம் ஆண்டு தை மாதம் 16 ஆம் திகதி அன்று கட்டம் I கட்டடத் தொகுதி நிர்மாணப் பூர்த்தியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் கட்டம் II கட்டடத் தொகுதி மற்றும் நிர்வாகப் பிரிவுக் கட்டடத் தொகுதியுடனான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டது. இழைய வளர்ப்பு மற்றும் நீர் வளர்ப்புக் கள ஆய்வு கூடம் ஆகிய இரு புதிய ஆய்வு கூடங்கள் 2013 ஆம் ஆண்டில் தேசத்தின் மகுடம் செயற்திட்டத்தில் பெறப்பட்ட மானியத்தின் கீழ் நிறுவப்பட்டன. ஒரு புதிய பௌதிகவியல் ஆய்வு கூடம் மற்றும் விரிவுரை மண்டபங்கள் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு மற்றும் கணினியியல் கற்கைத் துறைப் பிரிவு என பெயரிடப்பட்ட இரு புதிய கற்கைத் துறைப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. அவற்றுக்கு மேலாக 2020 ஆம் ஆண்டில் பீடத்தில் இரசாயனவியல் கற்கைத் துறைப் பிரிவு புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.

பீடம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பௌதிக விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவு ஆனது இரசாயனவியல், பௌதிகவியல், தூய கணிதவியல், பிரயோக கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் ஆகிய கற்கைத் துறை விடயங்களில் பாடத் தொகுதிகளை வழங்கி வருகின்றது.

கீழே தரப்பட்டுள்ள பட்ட கற்கை நெறிகள் இக் கற்கைத் துறைப் பிரிவினால் வழங்கப்படுகின்றன.
பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி பட்டம்
பிரயோக விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி பட்டம்
தொழிற்துறை கணிதத்தில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம்
இரசாயனவியல் மற்றும் பௌதிகவியலில் (கூட்டுப் பிரதான) விஞ்ஞானமாணி பட்டம்
இரசாயனவியலில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம்

உயிரியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவு ஆனது வெவ்வேறு துறைகளை ஒன்றிணைப்பதை நோக்காகக் கொண்டிருப்பதுடன் கீழே தரப்பட்டுள்ள பட்ட கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது.
பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி பட்டம்
பிரயோக உயிரியலில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் (உயிர்ப் பல்வகைமைக் காப்புத் துறையில் விசேடத்துவம்)
பிரயோக உயிரியலில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் (மீன்பிடியியல் மற்றும் நீர்வளர்ப்பு முகாமைத்துவத் துறையில் விசேடத்துவம்)
நுண்ணுயிரியலில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் (2021 ஆம் ஆண்டில் இருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது)
உயிரியல் மற்றும் பௌதிகவியலில் (கூட்டுப் பிரதான) விஞ்ஞானமாணி பட்டம்

தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் (த. தொ) மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி பட்டம் ஆகிய பட்ட கற்கை நெறிகள் கல்வி உலகு மற்றும் த. தொ. தொழிற்துறை ஆகியவற்றின் தற்போதைய போக்கு மற்றும் தேவைப்பாட்டிற்கு ஏற்ற வகையில் கணினியியல் கற்கைத் துறைப் பிரிவினால் வழங்கப்படுகின்றது. இக் கற்கைத் துறைப் பிரிவு ஆனது மற்றைய பட்ட கற்கை நெறிகளின் பாட விதானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கணினியியல் விஞ்ஞானத் துறையில் அடங்கும் பாடத் தொகுதிகளை வழங்குவதன் மூலமாக மற்றைய பட்ட கற்கை நெறிகளுக்கும் சேவையாற்றி வருகின்றது. கல்விசார் நடவடிக்கைகள் தவிர கணினியியல் கற்கைத் துறைப் பிரிவானது பீடத்தின் பல த. தொ. மற்றும் கணினியியல் சார்ந்த செயற்பாடுகளுக்கு தொழினுட்ப ரீதியாக ஆதரவை வழங்கி வருகின்றது.

சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவானது சுகாதார விருத்தியில் (கௌரவ) விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறி மற்றும் சுகாதார விருத்தியில் விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறி ஆகிய பட்ட கற்கை நெறிகளை வழங்குவதன் மூலமாக ஒரு பரந்த சுகாதார விருத்தி ஈடுபாடுகள் ஊடாக மக்களின் சிறந்த வாழ்க்கை முறையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் திறமையான பட்டதாரிகள் மூலமாக நாட்டின் சுகாதார விருத்தியை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

இரசாயனவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவானது இரசாயனத்தில் (கௌரவ) விஞ்ஞானமாணி எனும் பெயரில் பட்ட கற்கை நெறியை வழங்கி வருகின்றது.

B. அடைவுகள்

கோவிட் - 19 நோய்த் தொற்றுக் காலக்கேடான நிலைமைக்கு மத்தியிலும் பீடமானது கற்றல் நடவடிக்கைகளை மாற்றுப் பொறிமுறைகளாகிய நிகழ்நிலை விரிவுரைகள் & பரீட்சைகள் ஆகியவற்றை பூர்த்தி செய்வதற்கு முகாமை செய்தது. மற்றும் செய்முறைகள் மட்டுப்படுத்தப்பட்ட வேலைகள் மூலமாக தொடர்ந்தன. பின்வரும் தொழிற் பயிற்சிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- மன்னார் பிரதேசத்தில் தொழிற் பயிற்சி நிகழ்வு (மீன்பிடி மற்றும் நீர் வளர்ப்பு)
- ஹட்டன் சமவெளி மற்றும் ஆற்றுப் படுக்கைப் பிரதேசத்தில் தொழிற் பயிற்சி நிகழ்வு (வன பாபாதுகாப்பு)

எவ்வாறாயினும் கற்பித்தல், தொடர் மதிப்பீடுகள் மற்றும் அரையாண்டு இறுதிப் பரீட்சைகள் இணைய வழி மூலமாக நடாத்தப்பட்டன.

பாட விதானங்கள்

- நுண்ணுயிரியலில் கௌரவ விஞ்ஞானமாணி பட்ட கற்கை நெறி (2021 ஆம் ஆண்டில் இருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது)
- தொழிற்துறை கணிதத்தில் கௌரவ விஞ்ஞானமாணி பட்ட கற்கை நெறியானது 2 + 2 கற்கை நெறியாக வழங்கப்பட மூதவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது.
- எமது புதிய பாட விதானத்தில் புதிய பாட குறியீட்டு இலக்கங்களுடன் புள்ளிவிபரவியலை புதிய பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.
- புள்ளிவிபரவியல் மற்றும் கணிதவியல் ஆகிய துறைகளின் பாட விதானத்தின் மீள்திருத்திய ஆவணங்கள் மூதவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதோடு அதன் உறுதிப்படுத்தலை எதிர்பார்க்கின்றது. அத்துடன் இவ் மீள் திருத்தத்தை ப. மா. ஆ. இன் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பப்பட வேண்டியுள்ளது.

பட்டப்பின் கற்கை அலகை நிறுவியமை

பட்டப்பின் கற்கை அலகானது பட்டப்பின் பட்ட கற்கை நெறிகள் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் ஆகியவற்றை வெவ்வேறு துறைகளில் உயிர் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம்,

சுகாதார விருத்தியும் சுகாதார விஞ்ஞானமும் மற்றும் கணிதவியலும் கணினியியலும் எனும் தனித்தனியான கற்கை சபைகளின் கீழ் வழங்கும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

பட்டப்பின் பட்ட கற்கை நெறிகளான முதுதத்துவமாணி பட்டம் மற்றும் கலாநிதிப் பட்டம் ஆகியவற்றுக்கான துணைச் சட்டங்கள் பல்கலைக்கழகத்தின் பாட விதான விருத்திக் குழு மற்றும் அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மூதவை ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியின் பாடவிதானம் மீள்திருத்தப்பட்டதோடு மீளாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

சிறுவர் பாதுகாப்பில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கான துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

பீடம் - தொழில் நிறுவனங்கள் ஒன்றிணைப்பு அலகை நிறுவியமை (பீ. தொ. நி. ஒ. அ)

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் ஒரு வலுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக – தொழிற்துறை நிறுவனங்கள் ஒன்றிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்வதற்கு புதிய பீ. தொ. நி. ஒ. அ ஆனது முன்மொழியப்பட்டு உள்ளது. பீ. தொ. நி. ஒ. அ ஆனது நாட்டின் விருத்திக்காக சம்பந்தப்பட்ட சிறப்புத் தேர்ச்சி மற்றும் அறிவு சார்ந்த விடயங்களில் வளங்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்துறை நிறுவனங்களுக்கு பங்களிப்பு செய்யும் மற்றும் பல துறைகளில் ஆய்வு நோக்கங்களின் ஊடாக புத்தாக்கத்துக்கான புதிய வாய்ப்புக்களை உருவாக்கும். இந்த விடயத்தில் பல்கலைக்கழகத்தின் கண்டுபிடிப்பை நோக்காகக் கொண்ட கலாசாரத்தை புத்தாக்க நோக்குடைய சூழலைக் கொண்ட தொழிற்துறை நிறுவனங்களுடன் பீடம் மற்றும் தொழிற்துறை நிறுவனங்களின் ஒன்றிணைப்பு ஊடாக சுகாதாரம், நீர், சக்தி, தூய்மையான வளி உள்ளடங்கலாக அழுத்தத்தை ஏற்படுத்தும் சமூக பிரச்சினைகள்/ சவால்கள் ஆகியவற்றுக்கு தீர்வுகளை வழங்குகின்ற வலுவுடைய ஒரு மூலமான ஆய்வு முனைவாக இது தொழிற்படும் மற்றும் இது பொருளாதார போட்டித்தன்மையை மேம்படுத்தும்.

சுகாதார விருத்தியில் குறுங்கால கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தல்

வருகைதரு இணைப்பாளர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் ஆகியோர்களுக்காக சுகாதார விருத்தியில் குறுங்கால கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு வார, இரு வார மற்றும் ஒரு மாத கால அளவுகளைக் கொண்ட 03 குறுங்கால கற்கை நெறிகள் ஆகும்.

சர்வதேச கூட்டிணைப்புக்கள்

- சுவீடன் நாட்டு கோதென்பேர்க் பல்கலைக்கழகத்தின் சால்க்ரீன்ஸ்கா கற்கைத் துறைப் பிரிவினால் வழங்கப்படும் உலக சுகாதார நிகழ்ச்சித்திட்ட முதுமாணி பட்ட கற்கை நெறி மாணவி செல்வி. சர்ற்று சுசன்னா லற்றில்லா 03.11.2021 ஆம் திகதியில் இருந்து 16.01.2022 ஆம் திகதி வரையான 10 வார கால தொழிற்துறைப் பயிற்சியை சுகாதார கற்கைத் துறைப் பிரிவில் பூர்த்தி செய்துள்ளார்.

- சிட்னிப் பல்கலைக்கழகத்தின் பொதுச்சுகாதார கற்கைத் துறைப் பிரிவன் உலக சுகாதார நிகழ்ச்சித்திட்ட முதுமாணி பட்ட கற்கை நெறி மாணவி செல்வி. கிறிஸ்ரீன் ஜோய்ஸ் அவூர் 6 வார கால தொழிற்துறைப் பயிற்சி ஒன்றை சுகாதார கற்கைத் துறைப் பிரிவில் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார்.

கௌரவ வருகை தரு பேராசிரியர் ஒருவர் நியமனம்

ஒரு சிரேஷ்ட உளவியல்துறை நிபுணர் மற்றும் சுகாதார விருத்தி கற்கை நெறி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு ஆலோசகர் ஆகிய பேராசிரியர். தியனாத் சமரசிங்க அவர்கள் சுகாதார கற்கைத் துறைப் பிரிவின் ஒரு கௌரவ வருகை தரு பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நடாத்தப்பட்ட ஆய்வுகள்

- பௌதிகவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவினால் உள்ளக மற்றும் வெளியக ஆய்வு மேற்பார்வையாளர்களின் மேற்பார்வையின் கீழ் தொழிற்துறைக் கணிதவியல் பட்ட கற்கை நெறியின் இறுதி வருட பட்டதாரி மாணவர்களின் எட்டு ஆய்வுச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- கண்டி தேசிய வைத்தியசாலையுடன் ஒன்றிணைந்து கலாநிதி. (திருமதி.) பீ. கே. பிறேமச்சந்த்ர நீடித்த சிறுநீரக நோயின் அறியப்படாத நோய்க் காரணிக்கு காரணமாகிய புரதத்தை நோயின் ஆரம்ப நிலையிலேயே தெரிந்து கொள்ள உயிர்குறியீட்டு தரவுத்தளம் மற்றும் புரதத்தை கண்டுபிடிப்பதற்கான கருவி அமைப்புத் தொகுதியை கண்டுபிடித்தல் - உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட மானியம்.
- பௌதிகவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவினால் மேலே குறிப்பிடப்பட்ட பட்டதாரி மாணவர்களின் ஆய்வுச் செயற்திட்டங்களில் ஒன்றின் ஆய்வுப் பத்திரிகை 2021 ஆம் ஆண்டில் சர்வதேச ஆய்விதழ் ஒன்றில் வெளியிடப்பட்டு உள்ளது.
- பௌதிகவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவினால் எட்டு ஆய்வுச் சுருக்கப் பத்திரிகைகள் சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆராய்ச்சி மாநாடுகளில் வெளியிடப்பட்டு உள்ளன மற்றும் எட்டு ஆய்வுப் பிரசுரங்கள் குறிப்பிட்ட குறியீட்டு எண்களைக் கொண்ட ஆய்விதழ்கள், இணைய ஆய்விதழ்கள் மற்றும் ஏனைய ஆய்விதழ்கள் ஆகியவற்றில் வெளியிடப்பட்டு உள்ளன .
- சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு ஆனது சிறுவர்களைப் பாதுகாப்போம் எனும் அரச சார்பற்ற நிறுவனத்துடன் ஒன்றிணைந்து வீடுகளில் முன்பருவ சிறுவர் பாதுகாப்பு மற்றும் விருத்தி தொடர்பாக ஒரு ஆய்வுச் செயற்திட்டத்தை (எச். பி. ஈ. சீ. சீ. டீ) பூர்த்தி செய்துள்ளது. இந்த ஆய்வுச் செயற்திட்டம் செயல் நடவடிக்கை தீர்வு சார்ந்த அணுகுமுறையை பயன்படுத்தி இருந்தது மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் தேயிலைப் பெருந் தோட்டம் ஒன்றின் தெரிவு செய்யப்பட்ட நான்கு பிரிவுகளில் இந்த ஆய்வுச் செயற்திட்டத்தை நடாத்தி உள்ளது.
- சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றிணைந்து சமூக உறுப்பினர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட போசணைகள் சார்ந்த அம்சங்கள் தொடர்பாக சமூகம் சார்ந்த சுகாதார விருத்தியின் தலையீடுகளின் அனுகூலங்களை மதிப்பிடும் நோக்குடன் ஆய்வுச் செயற்திட்டம் ஒன்றை பூர்த்தி செய்துள்ளது.
- சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவின் விரிவுரையாளர்கள் 07 ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் 04 மாநாட்டு முன்வைப்புக்கள் ஆகியவற்றை 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளியிட்டு உள்ளனர்.
- உயிரியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவு உத்தியோகத்தர்கள் நுண்ணுயிரியல், தாவரவியல், சூழலியல் மற்றும் மீன்பிடி மற்றும் நீர்வளர்ப்பு ஆகிய பிரதான துறைகளில் 24 ஆய்வுத் தொடர்பாடல்களில் 09 உள்நாட்டு ஆய்விதழ் மற்றும் அமர்வுகளில் பிரசுரிக்கப்பட்டு உள்ள அதே வேளையில் 15 ஆய்வுகள் சர்வதேச ஆய்விதழ் மற்றும் அமர்வுகளில் பிரசுரிக்கப்பட்டு உள்ளன.
- இரசாயனவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவு 05 ஆய்வுப் பிரசுரங்களை மேற்கோள் காட்டி குறிப்பிடப்பட்ட குறியீட்டு எண்களைக் கொண்ட ஆய்விதழ்கள் மற்றும் 16 ஆய்வுச் சுருக்கங்கள் ஆகியன வெளியிடப்பட்டு உள்ளன.
- கணினியியல் கற்கைத் துறைப் பிரிவினால் விரிவுரையாளர்களிடம் இருந்து ஏழு ஆய்வுப் பிரசுரங்களும் மாணவர்களிடம் இருந்து ஏழு ஆய்வுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டு உள்ளன.

நடாத்தப்பட்ட செயற் திட்டங்கள்

- சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு மாத்தறை மாவட்டத்தில் உள்ள 03 சுகாதார மருத்துவ அலுவலர் பகுதிகள்: கொடபொல, பஸ்கொட மற்றும் மொரவக்கை ஆகிய இடங்களில் 24 பொதுச் சுகாதார தாதியர்கள் (பொ. சு. தா) வட்டாரங்களில் சிறுவர்களைப் பாதுகாப்போம் அமைப்புடன் ஒன்றிணைந்து 'சமூக ஒன்றிய மட்டத்தில் சமூக மற்றும் நடத்தை மாற்றங்கள் தொடர்பாடல்/ சுகாதார மற்றும் போசணை விருத்தி செயற்பாடுகள்: குழந்தை மற்றும் இளம் சிறார்களின் உணவு ஊட்டல் மற்றும் சுகாதாரத்துடன் போசணை விருத்தியில் ஆண்களின் பங்களிப்பை அதிகரித்தல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்துதல்' எனும் தலைப்பில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்துள்ளது (2020-2021).
- சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு அலவ்வ சுகாதார மருத்துவ அலுவலர் பிரதேசத்தில் 'கோவிட் - 19 நோய்த் தொற்று நிலையை எதிர்கொள்ளலுக்குரிய சுகாதார வாழ்க்கை

அணுகுமுறையின் ஊடாக சமூக ஈடுபாடு' எனும் தலைப்பில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்துள்ளது (2020-2021).

- சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார தூதரகத்துடன் ஒன்றிணைந்து "தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் பருவமடைந்தவர்களின் சுகாதார வாழ்க்கையை விருத்தி செய்தல்" எனும் தலைப்பில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்துள்ளது (2020-2021).

கிடைக்கப் பெற்ற மானியங்கள்

- *ஸ்வீடிஷ் லின்னேயஸ் - பால்ம் மானியம் 2021*

சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு 1.7 மில்லியன் இலங்கை ரூபா மதிப்புள்ள ஒரு போட்டி மிகுந்த மானியமாகிய ஸ்வீடிஷ் லின்னேயஸ் - பால்ம் மானியம் 2021 இனை கொதென்பேர்க் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு ஆகியவற்றுக்கு இடையே கற்கை நெறிகளை பரிமாற்றிக் கொள்வதற்காக பெற்றுக் கொண்டமை.

- *பல்கலைக்கழக ஆய்வு மானியம்*

சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவின் திரு. சீ. பீ. செனவிரத்ன மற்றும் திருமதி. கே. ஜீ. பீ. எச். கந்தேகெதர ஆகிய இரு உத்தியோகத்தர்கள் 2021 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக ஆய்வு மானியத்தை பெற்றுக் கொண்டனர்.

- விஞ்ஞான ஆய்வு நோக்கு மானியங்கள் - தே. ஆ. பே. மானிய இல. 20-028, பிரதான ஆய்வாளர்: பேராசிரியர். எச். எம். ஏ. எம் சீ. ஹேரத், செயற்திட்ட தலைப்பு: சூழலில் உள்ள நச்சுப் பதார்த்தங்களை கண்டறிய புதிய அச்சிடக் கூடிய உணரிகளை கண்டுபிடித்தல், அனுமதிக்கப்பட்ட மானிய நிதி: ரூ. 5,000,000.00

- விஞ்ஞான ஆய்வு நோக்கு மானியங்கள் - தே. ஆ. பே. மானிய இல. 20-039, பிரதான ஆய்வாளர்: கலாநிதி. சுசித்திரா ஏ. செனவிரத்ன, செயற்திட்ட தலைப்பு: நாட்டில் கிடைக்கக் கூடிய மீள் புதுப்பிக்கத்தக்க வளங்களில் இருந்து நுண்ணிய சூழல் நேயம் மிக்க பல்பகுதியங்கள் மற்றும் பல்பகுதிய நனோ கடடமைப்புக்கள், அனுமதிக்கப்பட்ட மானிய நிதி: ரூ. 4,000,000.00

கிடைக்கப் பெற்ற விருதுகள்

- *தேசிய விஞ்ஞான செயற்திட்ட விருது 2021*

சுகாதார கற்கைத் துறைப் பிரிவின் ஒரு பட்டதாரி மாணவன் ஆகிய திரு. பீ. ஆர். பி. விமுக்தி தனன்ஜய 2021 ஆம் ஆண்டின் திறன் விருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு இராஜாங்க அமைச்சின் தேசிய விஞ்ஞான செயற்திட்டத்தின் முதல் பத்து இறுதித் தகுதியாளர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

- *துணை வேந்தர் விருதுகள் 2021*

இரசாயனவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவு சுவீகரித்துக் கொண்ட விருதுகள்

- பிரயோக விஞ்ஞான பீடத்தில் உயரிய சராசரி எச்- குறியீட்டு சுட்டியைக் கொண்ட கற்கைத் துறைப் பிரிவு
- பிரயோக விஞ்ஞான பீடத்தில் உயரிய சராசரி மேற்கோள் காட்டப்பட்ட ஆய்வுகளைக் கொண்ட கற்கைத் துறைப் பிரிவு
- பிரயோக விஞ்ஞான பீடத்தில் உயரிய சராசரி எச்- குறியீட்டு சுட்டியைக் கொண்டிருக்கும் ஆய்வாளர் - 1 ஆம் இடம் - பேராசிரியர். எச். எம். ஏ. எம் சீ. ஹேரத்
- பிரயோக விஞ்ஞான பீடத்தில் அதிக எண்ணிக்கையான மேற்கோள் காட்டப்பட்ட ஆய்வுகளைக் கொண்ட ஆய்வாளர் -1 ஆம் இடம் - பேராசிரியர். எச். எம். ஏ. எம் சீ. ஹேரத்
- பிரயோக விஞ்ஞான பீடத்தில் அதிக எண்ணிக்கையான ஆய்வுகளை குறியீட்டு எண்களைக் கொண்ட ஆய்விதழ்களில் வெளியிட்ட ஆய்வாளர் - 1 ஆம் இடம் - பேராசிரியர். எச். எம். ஏ. எம் சீ. ஹேரத்
- பிரயோக விஞ்ஞான பீடத்தில் அதிக எண்ணிக்கையான ஆய்வுகளை குறியீட்டு எண்களைக் கொண்ட ஆய்விதழ்களில் வெளியிட்ட ஆய்வாளர் - 3 ஆம் இடம் - கலாநிதி. என். பீ. ஜயரத்ன
- பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிறந்து விளங்கும் சிரேஷ்ட ஆய்வாளர் - பேராசிரியர். எச். எம். ஏ. எம் சீ. ஹேரத்

- *சிறந்த சிரேஷ்ட ஆய்வாளர் விருது 2019* பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட ஆய்வாளர்களில் சிறந்து விளங்குபவருக்கான தங்கப் பதக்கம் - பேராசிரியர். எச். எம். ஏ. எம் சீ. ஹேரத் (2021 ஆம் ஆண்டில் விருது வழங்கப்பட்டது)
- *சிறந்த இளம் ஆய்வாளர் விருது 2019* பிரயோக விஞ்ஞான பீடத்தின் இளம் ஆய்வாளர்களில் சிறந்து விளங்குபவருக்கான தங்கப் பதக்கம் - கலாநிதி. என். பீ. ஜயரத்ன (2021 ஆம் ஆண்டில் விருது வழங்கப்பட்டது)

தொழிற் பட்டறைகள் மற்றும் தொழிற் பயிற்சிகள்

சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு ஆனது 2021 ஆம் ஆண்டில் 03 தொழிற்பட்டறைகளை நிகழ்த்தியது; 1. பாலியல் ரீதியான வன்முறைகள் 2. புகையிலை மற்றும் மது பாவனை தடுப்பு மற்றும் 3. வேலைத்தள சுகாதாரம், அத்துடன் 03 தொழிற் பயிற்சிகளையும் நிகழ்த்தியது; 1. சுகாதார விருத்தி 2. போதைப் பொருள் பாவனை தடுப்பு மற்றும் 3. சமூக சுகாதாரம்

பொது ஜன ஊடகங்களுக்கான பங்களிப்பு

சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவு உத்தியோகத்தர்கள் சுகாதாரம் மற்றும் சிறந்த வாழ்க்கை, குடும்ப நலன், சிறுவர் நலன் மற்றும் புகையிலை மற்றும் மது பாவனை தடுப்பு என்பன தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் 02 தொலைக்காட்சி மற்றும் 03 வானொலி நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

C. தோல்விகளும் நியாயங்களும்

- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை கல்வி சார்ந்த மற்றும் ஆய்வு சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களின் சுமூகமான போக்கை தீவிரமாக குழப்பம் அடையச் செய்ததன் விளைவாக அதிகமான கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நிறுத்தவும் மற்றும் மாற்றியமைக்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆண்டின் அதிகமான காலப்பகுதியில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இல்லாமை மற்றும் போதிய வசதிகள் இன்மை ஆகிய காரணங்களினாலும் கூடவே இம் மாற்றுவழி மேற்கொள்ளப்பட்டதாகும்.
- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமையினால் பல்கலைக்கழகத்தில் வருடத்தின் அதிகமான காலத்தில் மாணவர்கள் இல்லாமை காரணமாக அதிளவான திட்டமிடப்பபட்ட குறிப்பிட்ட காலத்தில் நடாத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுத்தப்பட அல்லது மாற்றித் திட்டம் இடப்பட வேண்டி ஏற்பட்டது.
- பல வெளிக்கள விஜயங்கள் கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காலக்கேடு காரணமாக மீள திட்டமிடப்பட்டது
  (a) தொழிற்துறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முறையாக திட்டமிடப்பட முடியாமல் போனது.
  (b) கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறைகளில் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை காரணமாக முறையாக விரிவுரைகளை நடாத்துவதில் சில இடர்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது.
  (c) கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காலக்கேடு காரணமாக நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களை தொடர்பு கொள்வது கடினமாக இருந்தமையால் பௌதிகவியல், உயிரியல், இரசாயனவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பாட விதானங்களை மீள் திருத்தம் செய்ய முடியாமல் போனது.
- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காலக்கேடு காரணமாக குறிப்பிட்ட பரீட்சைகள் பிற்போடப்பட்டன. எனினும் இணைய வழியில் பரீட்சைகளை நடாத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் வெற்றிகரமாக பரீட்சைகள் நடாத்தி முடிக்கப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டுக்கான சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் இலக்குகள் கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காலக்கேடு காரணமாக அடைய முடியவில்லை. எனினும் கற்கைத் துறைப் பிரிவு கூடியளவு முயற்சி எடுத்து மாற்றி அமைத்ததுடன் அந்த இலக்குகளை அமுல்ப்படுத்தியது.

D. எதிர்காலத் திட்டங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் ஊடாக பட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்

- சமூகத்திற்கு அறிவு மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை கொண்டு செல்வதற்காக தொழிற் பட்டறைகளை நடாத்துதல்
- மாணவர்களின் அறிவு மற்றும் ஆளுமையை விருத்தி செய்வதற்காக மீன்பிடி மற்றும் நீர் வளர்ப்பு, நுண்ணுயிரியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய துறைகளில் தொழிற் பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அதற்கான சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பட்டதாரி மாணவர்களின் ஆய்வு மற்றும் முன்வைக்கும் திறனை வளர்ப்பதற்காக ஏனைய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மாணவர் ஆராய்ச்சி சிம்போசிய அமர்வுகளை நடாத்த ஏற்பாடு செய்தல்
- வட மத்திய மாகாணத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் போன்றோருக்கான பாடசாலைகளில் கல்வியின் தரத்தை முன்னேற்றும் பொருட்டு தொழிற் பட்டறைகளை நடாத்துதல்
- பாட அலகு தயாரிப்பு, வலைத்தளம் உருவாக்குதல் மற்றும் ஆய்வுத் திறன்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்காக தொழிற் பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்
- ஆய்வு கூடத்தின் தொழிற்பாட்டு தர நிலைகளை விருத்தி செய்வதற்காக ஆய்வு கூட உத்தியோகத்தர்களுக்கு தொழிற் பட்டறைகளை ஒழுங்குபடுத்துதல்
- இளைய உயிரியலாளர்கள் சங்கத்தை மீள செயற்பாட்டுக்கு கொண்டு வருதல்
- தொழிற்துறைக் கணிதவியல் பட்ட மாணவர்களை தொழிற்துறை நிறுவனங்களில் தொழிற் பயிற்சிக்கு அனுப்ப முறையான நேரத் திட்டத்தை தயாரித்தல்
- பொதுப் பட்ட மாணவர்களையும் தொழிற்துறை நிறுவனங்களில் தொழிற் பயிற்சிக்கு அனுப்ப திட்டம் இடப்பட்டு உள்ளது
- புதுமுக மாணவர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்
- த. தொ. தொ. மாணவர்களுக்கான வெளிக்கள விஜயங்கள் மற்றும் தொழிற்பட்டறைகளை ஒழுங்குபடுத்துதல்
- அடுத்த ஆண்டுக்கான கல்விசார் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

பாட விதான அறிமுகம் / மீளாய்வு செய்தல்

○ பிரயோக விஞ்ஞான பட்ட கற்கை நெறி (உயிரியல் பாடத் தொகுதிகள்) மற்றும் பிரயோக உயிரியலில் கௌரவ பட்ட கற்கை நெறி

○ பௌதிகவியலில் கௌரவ விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறியை நோக்காகக் கொண்ட பௌதிகவியல் பாடத் திட்டம்

○ இரசாயனவியல் கௌரவ விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறி

○ புதிய சூழல் விஞ்ஞான கௌரவ விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறி

○ கணினி விஞ்ஞான பாடத் துறையை ஆரம்பித்தல்

உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் மற்றும் இரசாயன விஞ்ஞானம் ஆகிய கற்கைத் துறைப் பிரிவுகளினால் வழங்கப்படுகின்ற பட்டக் கற்கை நெறிகளுக்கான மீளாய்வைப் பூர்த்தி செய்தல்

புதிய அபிவிருத்திகள்

- கணிதவியலில் புதிய கௌரவ விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நெறி ஒன்றை ஆரம்பித்தல்
- கணினியியல் கற்கைத் துறைப் பிரிவுக்கான புதிய பாட விதானத்தை அமுல்ப்படுத்துதல்
- சூழல் விஞ்ஞான கௌரவ விஞ்ஞானமாணி எனும் புதிய பட்ட கற்கை நெறியை அறிமுகப்படுத்தல் மற்றும் அதற்கான பாட விதானத்தை தயாரிப்பதை பூர்த்தி செய்தல்
- எதிர்காலத்தில் சுகாதார விருத்தியில் டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பித்தல்

- கணிதவியல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றுக்கான கற்கைத் துறைப் பிரிவு/ அலகினை நிறுவுதல்

பட்டப்பின் கற்கைகள்

- சிறுவர் பாதுகாப்பில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்காக தயாரிக்கப்பட்ட துணைச் சட்டத்திற்கு அங்கீகாரத்தை பெறுதல்
- வெவ்வேறான துறைகளில் வெவ்வேறான பட்டப்பின் கற்கை நெறிகளை (விஞ்ஞான முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்ட கற்கைகள்) அறிமுகப்படுத்தல்
- இரசாயனவியலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டப்பின் கற்கை நெறிக்கான பாட விதானத்தை தயாரிப்பதை ஆரம்பித்தல் மற்றும் அறிமுகப்படுத்தல்

உட்கட்டமைப்பு விருத்திகள்

- பசுமைப் பல்கலைக்கழக கொள்கையை உருவாக்குதல்
  - பீடத்துக்கான தகவல் முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல்
  - சூரிய படலத்தை பொருத்துதல்
- வலுவிழந்தோருக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- திறனுடன் கூடிய மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய மாணவர்களினை உருவாக்கும் பொருட்டு இரசாயனவியல் விஞ்ஞான கற்கைத் துறைப் பிரிவின் ஆய்வு கூட உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்
- "கணினியியல் ஆய்வுக்கான நிலையம் (சீ. 2 ஆர்.)" இனை ஆரம்பித்து வைத்தல்
- தகவல் தொழில்நுட்பம் & கணினி விஞ்ஞானத் துறை மாணவர்களின் கற்றலை வசதிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு தேவையான பௌதிக வளங்களை மேம்படுத்தல்
- அதிகளவான மாணவர்களின் உள்வாங்கலை வசதிப்படுத்தும் பொருட்டு சுகாதார விருத்தி கற்கைத் துறைப் பிரிவின் தற்போதைய கட்டடத் தொகுதியை விரிவுபடுத்தல்
- புதிய இரசாயனவியல் ஆய்வு கூடத்தை புனரமைத்தல் மற்றும் வாகன தரிப்பிடம் மற்றும் விரிவுரை மண்டபத் தொகுதிகள் (கட்டம் II) ஆகியவற்றின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல்

19. முகாமைத்துவ கற்கைகள் பீடம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடமானது (மு. க. பீ) முகாமைத்துவ கற்கைகளில் சிறந்து விளங்கும் ஒரு மையமாக செயற்படுகின்றது. இந்த பீடமானது இளமாணிப் பட்ட மற்றும் பட்டப்பின் கற்கைகள் ஆகிய இரு மட்டங்களிலும் கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது. இது பட்டப் படிப்பை மேற்கொள்ளும் ஏறத்தாழ 2000 உள்வாரி பட்டதாரி மாணவர்களும் 2400 வெளிவாரி பட்டதாரி மாணவர்களும் மற்றும் கிட்டத்தட்ட 150 பட்டப்பின் பட்டதாரி மாணவர்களும் உள்ளடங்கலாக 4500 க்கும் மேலான மாணவர்களை கொண்டுள்ளது. இப்பீடமானது கணக்கியலும் நிதியியலும், வணிக முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், தகவல் முறைமை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்பவற்றுடன் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் எனும் ஆறு கற்கைத் துறைப் பிரிவுகளின் மூலமாக பின்வரும் உள்வாரி பட்ட கற்கை நெறிகளை வழங்குகின்றது.

- கணக்கியல் மற்றும் நிதியியல் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- வணிக முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- மனித வள முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- தகவல் முறைமை கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்

அத்துடன் மேலும், பட்டப்பின் கற்கைநெறியான வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்ட கற்கைநெறி மற்றும் வெளிவாரி பட்ட கற்கைநெறி ஆகிய வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்ட கற்கைநெறி ஆகியவையும் இப் பீடத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. அதே வேளை, இந்த பீடமானது ஒரு கலாநிதிப் பட்டக் கற்கை நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளதோடு, அது ப. மா. ஆ இனால் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் பணி நோக்கு முகாமைத்துவத்தில் தரமான கல்வியையும் செய்முறை திறன்களுடன் கூடிய தலைமைத்துவத்தையும் வழங்குதல் மற்றும் மாறிவரும் சூழலை கருத்திற் கொண்டு ஆய்வுகளை நடாத்துதல் என்பதாகும்.

பீடத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் ஆவன,

- மாணவர்களுக்கு வணிகம் மற்றும் முகாமைத்துவ கல்வியை வணிக நிறுவனங்களுக்கு உதவுதல் மற்றும் விருத்தி செய்தல் என்பவற்றுக்காக வழங்குதல்,
- வளர்ந்து வரும் தொழில் நிறுவனங்கள்/வணிக முதலீட்டாளர்களினால் எதிர்பார்க்கப்படும் அத்தியாவசியமான திறன்கள் மற்றும் அறிவை பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் மற்றும் வேகமாக அபிவிருத்தி அடைந்துவரும் வணிகச் சூழலில் தொழிற்தகைமை உடையவர்களாக அவர்களை ஆக்குதல்,
- வணிக உலகில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை புரிந்து கொள்வதற்கும் அவர்களின் வருங்கால தொழிலை மேம்படுத்துவதற்கும் போதுமான கொள்கை மற்றும் செய்முறை அறிவு போன்றவற்றை வழங்குதல்,
- அவர்களின் குறித்த துறைகளுடன் சம்பந்தப்பட்ட படைப்புச் சிந்தனைகள், பிரச்சினைகளை தீர்த்தல், தொடர்பாடல், மற்றும் ஆய்வு திறன்கள் ஆகியவற்றில் அவர்களின் முழுமையான ஆளுமையை வளர்ப்பதற்கு மாணவர்களை ஊக்குவித்தல், மற்றும்
- வசதிகள் கிடைக்கும் இடங்களிலும் மற்றும் கிடைக்கும் போதும் ஒழுக்கமுறைகளை பின்பற்ற மாணவர்களுக்கு பாரிய உதவியை அளித்தல்.

B. 2021 ஆம் ஆண்டில் பீடத்தின் அடைவுகள்

- கீழ் குறிப்படப்பட்டுள்ள பட்ட கற்கை நெறிக்கான பாட விதான மீள் திருத்தம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.
  - சந்தை முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்
- உயர்கல்வி வரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின்மானியத்தின் கீழ் 04 கற்கைத் துறைப் பிரிவு வள நிலையங்களை நிறுவியது
- வணிக முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு ஆகியவற்றின் கல்விசார் உத்தியோகத்தர்களின் வழிகாட்டலழன் கீழ் பட்டதாரி மாணவர்களினால் 31 சமூகம் சார்ந்த செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன
- பீட ஆராய்ச்சி சிம்போசிய அமர்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது – முகாமைத்துத் துறையில் 4 ஆவது தேசிய ஆராய்ச்சி சிம்போசிய அமர்வு - என். ஆர். எஸ். எம். 2021
- 2021 ஆம் ஆண்டின் சுற்றுலா நாள் நிகழ்வுகளை வெற்றிகரமாக நடாத்தியது
- 2021 ஆம் ஆண்டில் பீடத்தின் சிறந்த ஆய்வு விருதினை அறிமுகப்படுத்தியது
- பல்கலைக்கழகத்தின் 1 ஆவது ஆய்வு விருது வழங்கும் வைபவத்தில் நான்கு கல்விசார் உத்தியோகத்தர்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்
- கல்வி "வட மத்திய மாகாணத்தை பாதுகாப்போம்" நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உள்ளது மற்றும் உயர்தர மாணவர்களையும் பாடசாலை ஆசிரியர்களையும் நோக்காகக் கொண்டு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி உள்ளது
- முகாமைத்துவ விடயங்கள் ஆய்விதழில் இரு தொகுதி வெளியீடுகள் வெளியிடப்பட்டன
  - கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன
  - பி. ஐ. ரீ. எஸ். ஏ – தொகுதி 33
  - உறுமய சஞ்சிகை – தொகுதி 03
  - வர்ணா சஞ்சிகை – தொகுதி 02

C. தோல்விகளும் நியாயங்களும்

- பல நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகள் என்பவற்றை கோவிட் 19 நோய்த் தொற்றுநிலை காலக்கேடு காரணமாக நடாத்தமுடியவில்லை.
- கோவிட் 19 நோய்த் தொற்றுநிலை காலக்கேடு காரணமாக பீடத்தின் கட்டட நிர்மாண வேலைகள் தாமதம் அடைந்தன.
- நிதி வளப் பற்றாக்குறையினால் பல செயற்பாடுகள் பிற்போடப்பட்டன.

D. எதிர்காலத் திட்டங்கள்

- கழே தரப்பட்டுள்ள நிறுவன அமைப்புக்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டது
  a. மக்கள் வங்கி
  b. எச் - செனிட் வணிக தீர்வுகள் பீ. எல். சீ
  c. பட்டய பணியாளர் முகாமைத்துவ நிறுவனம்
  d. இலங்கை பிஸ்கட் கம்பனி வரையறுக்கப்பட்டது
  e. ஜே. ஏ. ரீ. ஹோல்டிங்
  f. ப்ராண்டிக்ஸ் ஆடைத் தொழிலகம்
  g. எல். ஓ. எல். சீ ஹோல்டிங் (தனி.) வரையறுக்கப்பட்டது
  h. அட்வென்ரா ஹோல்டிங் (தனி.) வரையறுக்கப்பட்டது
  i. பட்டய கணக்காளர்கள் நிறுவனம் (ஐ. சீ. ஏ)
  j. எபிக் லங்கா (தனி.) வரையறுக்கப்பட்டது
  k. மொரிசன் லங்கா (தனி.) வரையறுக்கப்பட்டது
  l. மித்தா ஸ்ரீலங்கா
  m. எம். ஏ. எஸ் ஆடைத் தொழிலகம்

n. ஆர். கே. எல். எஸ். ஒன்றிணைப்பாளர்கள்

- கீழே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் சர்வதேச கூட்டிணைப்பை விருத்தி செய்தல்
  a. ஆசிய பசுபிக் பல்கலைக்கழகம் - டாக்கா, பங்களாதேஷ்
  b. ப்ரேடா பல்கலைக்கழகம் - தெதர்லாந்து
  c. நோயல் தொழில்நுட்ப நிறுவனம் - சுவீடன்
  d. அஜீங்யா டீ. வை பாடில் பல்கலைக்கழகம் - பூன், இந்தியா

- வணிக அமைப்புக்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளல்
- மனிதவள முகாமைத்துவ மாணவர்களுக்கு உளவியல் மற்றும் ஆலோசனை வழங்கல் சான்றிதழ் கற்கை நெறி ஒன்றை புதிதாக அறிமுகப்படுத்தல்
- தொழில் வணிக வழிபாட்டல் டிப்லோ டிப்ளோமா கற்கை நெறி ஒன்றினை அறிமுகப்படுத்தல்
- மனித வள முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி ஒன்றினை அறிமுகப்படுத்தல்
- முகாமைத்துவ விடயங்கள் தொடர்பான ஆய்விதழுக்கான குறியீட்டு எண்ணைப் பெறுதல்
- ஒரு புதிய முனைவர் பட்டத்தை ஆரம்பித்தல்
- பீடத்தின் பழைய கட்டடத்தின் விரிவாககல் செயற்திட்டத்தின் கட்டுமாண வேலைகளை ஆரம்பித்தல்
- நிறைவேற்று வி. நி. முதுமாணிப் பட்டத்தை அறிமுகப்படுத்தல்
- பட்டதாரி மாணவர்களுக்கான போட்டிகளை நடாத்துதல்
  a. ∴பியெஸ்ரா வினாடி வினாப் போட்டி 2022
  b. தொழில்நுட்ப கண்டுபிடிப்பு (டீ. ஓ. ரீ 2K22)
  c. ஆர். யூ. ஐ. இசட் - ஜீ 2022 விளையாட்டுப் போட்டி
  d. படத்துணுக்கு கண் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பட வடிவமைப்பு போட்டி
  e. பி. ஐ. ரீ குறியீடு வீ. 4.0 பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான குறியீடு இடுகைப் போட்டி
- கீழே குறிப்பட்ட மாணவர் சஞ்சிகைகளை வெளியிட ஆரம்பித்தல்.
  a. வணிக துடிப்பு
  b. வோயேஜ்
  c. எச். ஆர் க்லிம்மர்
  d. சுற்றுலா & விருந்தோம்பல் தொழில் நிறுவனங்களின் உள்நோக்கு: ஆய்வு வெளியீடுகள்

20. மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக (இ. ர. ப) மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம் (ம. ம. இ. வி. பீ) ஆனது 2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் பதினைந்து கல்வித் துறைப் பிரிவுகள் மற்றும் 3 கல்வி அலகுகள் என்பவற்றை கொண்டது. நாட்டின் மூன்றாவது பெரிய வைத்தியசாலையான அனுராதபுர போதனா வைத்தியசாலை (அ. போ. வை) ஆனது பீடத்தின் பிரதான போதனா வைத்தியசாலையாக காணப்படுகின்றது. அ.போ.வை ஆனது நவீன இனங்காணல் மற்றும் முகாமைத்துவ வசதிகளுடன் கூடிய பிரதான சிகிச்சைப் பிரிவுகளுக்கான பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அலகுகளைக் கொண்டுள்ளது. அனைத்து சிகிச்சைத் துறைகளினது உத்தியோகத்தர்கள் அ.போ.வை இல் ஆலோசகர்களாக சேவையை வழங்கி வருகின்றனர். சமூக நடைமுறை பகுதியானது ஒரு சமூக - பொருளாதார ரீதியாக வேறுபட்ட மக்களைக் கொண்டுள்ளது, இது முதன்மை மற்றும் தடுப்பு பராமரிப்பில் விரிவான பயிற்சியை செயல்படுத்துகிறது. ம. ம. இ. வி. பீ வழங்கும் சமூக பராமரிப்பு சேவைகளில் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைகள், வெளிக்கள சிகிச்சைகள், சுகாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் தாய்வழி மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் ஆகியவை அடங்கும், குறிப்பாக சிறுவர் ஊட்டச்சத்து குறைபாட்டைத் தவிர்ப்பது மற்றும் தாய்வழி மூலமான நோய்களை கண்காணிப்பதனை மேம்படுத்துவது தொடர்பானது. மாணவர்கள் தங்கள் முழு திறனை அடைவதற்கு வழி வகுப்பதன் மூலம், நிறுவனத்தின் தரத்தை உயர்த்த பீடம் தொடர்ந்து பாடுபடுகிறது. பீடத்தின் குறுகிய வரலாற்று காலப்பகுதி முழுவதும் எங்கள் இளங்கலை பட்டதாரிகள் பொதுவான தகுதி வரிசையில் உயர் பதவிகளைப் பெற்றுள்ளனர் மற்றும் பல்வேறு பட்டப்பின் கற்கை நெறிப் படிப்புகளில் சிறந்து விளங்கினர்.

B. அடைவுகள்

ஆட்சேர்ப்பு

சிரேஷ்ட விரிவுரையாளர்கள்

- வைத்தியக் கலாநிதி. கே. எம். எஸ். எஸ். ரத்னசிறி, சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II, குழந்தை மருத்துவவியல் துறைப் பிரிவு
- வைத்தியக் கலாநிதி. எச். பி. டீ. ஜீவந்த, சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II, உடற்கூற்றியல் கற்கைத் துறைப் பிரிவு

பதவியுயர்வு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - I

- வைத்தியக் கலாநிதி. எஸ். பீ. விக்ரகமே - உடலியல் துறைப் பிரிவு
- வைத்தியக் கலாநிதி. எஸ். பீ. ஏ. எஸ். சேனாதீர– உயிர் இரசாயனவியல் துறைப் பிரிவு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II

- வைத்தியக் கலாநிதி. வை. பீ. ஜே. என் வர்ணசேகர (2020 ஆம் ஆண்டிற்கு பிற்திகதி இடப்பட்டது) - சமூக மருத்துவ துறைப் பிரிவு
- வைத்திய கலாநிதி எம். ஜீ. ஆர். எஸ். எஸ். குணத்திலக்க(2020 ஆம் ஆண்டிற்கு பிற்திகதி இடப்பட்டது) - நுண்ணுயிரியல் துறைப் பிரிவு
- வைத்திய கலாநிதி ஏ. எம். எம். வீ. குமாரி - உடலியல் துறைப் பிரிவு
- வைத்திய கலாநிதி ஜீ. எஸ். அமரசிங்க (2020 ஆம் ஆண்டிற்கு பிற்திகதி இடப்பட்டது) - சமூக மருத்துவ துறைப் பிரிவு

பட்டப்பின் பட்ட கற்கை நெறி பூர்த்தி

கலாநிதிப் பட்டம்

- வைத்தியக் கலாநிதி. வை. பீ. ஜே. என் வர்ணசேகர, தலைவர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II, சமூக மருத்துவ துறைப் பிரிவு

முதுதத்துவமாணி

- வைத்தியக் கலாநிதி. ஜே. எம். டீ. டீ. ஜயசுந்தர, விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை), நுண்ணுயிரியல் துறைப் பிரிவு

முதுமாணி

- வைத்தியக் கலாநிதி. ஆர். எம். எஸ். ஐ. ராஜபக்ச, விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை), உடலியல் துறைப் பிரிவு – நனோ விஞ்ஞான மற்றும் நனோ தொழில்நுட்ப முதுமாணி

டிப்ளோமா

- வைத்தியக் கலாநிதி. ஜே. எம். டீ. டீ. ஜயசுந்தர, விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை), நுண்ணுயிரியல் துறைப் பிரிவு – மருத்துவ நுண்ணுயிரியலில் பட்டப்பின் டிப்ளோமா

(a.) ஆய்வுகள், புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகளின் விபரம்:

விடயம்	பிரசுரிக்கப்பட்டவை
a. ஆய்வு வெளியீடுகள் (சுருக்க ஆய்வறிக்கைகள் + முழுமையான ஆய்வறிக்கைகள்) எண்ணிக்கை	(80+87)=167
b. புத்தாக்கங்களின் எண்ணிக்கை	1
c. ஆய்விதழ்களின் எண்ணிக்கை	2
d. புத்தகங்களின் எண்ணிக்கை	1
e. ஆய்விதழ் கட்டுரைகளின் எண்ணிக்கை	80

(b.) கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள் மற்றும் சிம்போசியங்களின் விபரம்:

விடயம்	திட்டமிடப்பட்டவை	நடாத்தப்பட்டவை
a. பட்டப்பின் பட்ட கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	3	3
b. பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	-	-
c. இளமாணிப் பட்ட கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	10	10
d. பட்டப்பின் கற்கை நெறிகளுடன் தொடர்பானவை	1	1
e. சுகாதார சேவைகள் மற்றும் பராமரிப்பு தரநிலைகளை மேம்படுத்தல் தொடர்பானவை (மருத்துவ கற்கைத் துறைப் பிரிவு / சமூக மருத்துவ கற்கைத் துறைப் பிரிவு)	3	5

(c.) பெறப்பட்ட விருதுகளின் விபரம்:

விடயம்	விருதுகளின் எண்ணிக்கை	கல்விசார் உத்தியோகத்தர்களினால் பெறப்பட்டவை	மாணவர்களினால் பெறப்பட்டவை
a. உள்நாடடு விருதுகள்	15	6	-
b. தேசிய விருதுகள்	2	2	6
c. சர்வதேச விருதுகள்	1	1	-
d. ஏனையவை	1	1	-

C. தோல்விகளும் நியாயங்களும்

- தரமான கல்விசார் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல் முக்கியமான சவால்களில் ஒன்றாகக் காணப்பட்டு வருகின்றது. வருடத்தில் இரு தடவைகள் விளம்பரம் செய்யப்பட்ட போதும் எங்களால் கல்விசார் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாமல் உள்ளது. சுகாதார அமைச்சுக்கும் பல்கலைக்கழக வளங்களுக்கும் இடையே உள்ள இடைவெளி மற்றும் பீடத்தின் அமைவிடம் ஆகியன மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீடத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பெரிய தடையாக அடையாளம் காணப்பட்டு உள்ளது.

- ஆய்வு செயற்பாடுகளின் வெற்றி விளைவுகள் மிகச் சிறப்பாகக் காணப்பட்ட போதிலும் பல்கலைக்கழகத்தினால் கிடைக்கும் குறைந்தளவான நிதி உதவிகள், கல்விசார் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக கல்விசார் உத்தியோகத்தர்கள் கற்பித்தல் செயற்பாடுகளினால் அதிக வேலைச் சுமையைக் கொண்டிருத்தல் மற்றும் ஒரு திறன் வாய்ந்த தொழினுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் இன்மை ஆகியன காரணமாக முழுமையான எம்மால் ஆகக்கூடிய சாத்தியப்பாடுகளை அடைய முடியாமல் போயுள்ளது.
- திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் அதிகமானவற்றை கோவிட் - 19 நோய்த் தொற்று நிலை காலக்கேடு காரணமாக நடாத்தப்பட முடியாமல் போனது.

D. எதிர்காலத் திட்டங்கள்

- பசுமைப் பல்கலைக்கழக கொள்கையை அமுல்ப்படுத்தல்.
- பீட உத்தியோகத்தர்களுக்கான வாகன தரிப்படம் அமைத்தல்.
- பீடத்தின் முழு வளாக நிலத்தையும் தரைவடிவமைப்பு செய்தல்
- பீடத்தின் பிரதான உணவகத்தின் கூரையை புனரமைத்தல்.
- மாணவர் விடுதிக்கான உயிர் வேலியை அமைத்தல்.
- பயன்படுத்தப்படாத சிறிய விரிவுரை மண்டபத்தை புனரமைத்தல்.
- நுரையீரல் தொழிற்படு ஆய்வு கூடம் உன்றை உருவாக்கல் மற்றும் சமூகத்தினருக்கு சேவையை வழங்க ஆரம்பித்தல்.
- குடும்ப மருத்துவ பட்டதாரி மாணவர்களுக்கான சிகிச்சைப் பயிற்சிகளை 2022 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தல்.
- மனித மரபணுவியல் அலகினை அமைத்தல்.

21. சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம்

A. அறிமுகம்

சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஆனது 1995 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோதே நிறுவப்பட்டது. தற்போது இப் பீடம் கிட்டத்தட்ட 1795 மாணவர் தொகையை கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 549 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு உள்வாங்கப்பட்டனர். சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஆனது 7 கற்கைத் துறைப் பிரிவுகளை கொண்டுள்ளது. இப் பீடம் ஒவ்வொன்றும் அவற்றினது பிரத்தியேகமான கீழே குறிப்பிடப்பட்ட கலைமாணி (பொது) மற்றும் கலைமாணி (சிறப்பு) பட்ட கற்கைநெறிகளை வழங்குகின்றது.

1. கலைமாணி பட்டம்
2. கலைமாணி (கௌரவ) பட்டம்

- தொல்பொருள் மற்றும் மரபுரிமை முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு
  - தொல்பொருள் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவத்தில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- ஆங்கில மொழி கற்பித்தல் கற்கைத் துறைப் பிரிவு
- சூழல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு
  - சூழல் முகாமைத்துவத்தில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- மானிடவியல் கற்கைத் துறைப் பிரிவு
  - வரலாற்றில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- மொழியியல் கற்கைத் துறைப் பிரிவு
  - சிங்கள மொழியில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- சமூக விஞ்ஞானங்கள் கற்கைத் துறைப் பிரிவு
  - சமூகவியலில் கௌரவ கலைமாணிப் பட்டம்
- பொருளியியல் கற்கைத் துறைப் பிரிவு
  - பொருளியியலில் கௌரவ கலைமாணிப் பட்டம்

பட்டதாரி மாணவர்கள் பின்வரும் விளைவுகளை மேற்குறிப்பட்ட கற்கை நெறிகளின் ஊடாக அடைவார்கள்.

I. உள்நாட்டு மற்றும் சர்வதேச சமூக மற்றும் கலாசார திறன்களை முறையாக இனங்காணுதல் மற்றும் தேவைக்கேற்ப அவற்றை மாற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு நல்ல அறிவு, திறன்கள் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

II. பௌதிக மற்றும் ஆன்மீகத் தேவைகளுக்கு இடையிலான உள்ளார்ந்த உள்ளக - உறவைப் பற்றிய அவர்களின் கருத்தை வளர்ப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் ஒரு சீரான கல்வியைக் கொண்டிருத்தல்.

A. அடைவுகள்

தொல்பொருள் மற்றும் மரபுரிமை முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு

- தொல்பொருள் மற்றும் மரபுரிமை முகாமைத்துவத்தின் கலைமாணிப் பட்ட கற்கை நெறி மற்றும் கௌரவ கலைமாணிப் பட்ட கற்கை நெறி ஆகிய இரண்டினதும் செயன்முறைக் கையேடுகளுக்கு உரிய கற்பித்தல் திட்டங்களை தயாரித்து உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் இருந்து கற்கைத் துறைப் பிரிவின் கல்விசார் உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர்களின் அடைவுகளை பாராட்டி ஒரு வெகுமதிகள் வழங்கும் பொறிமுறையை ஒழுங்குபடுத்தி உள்ளது.

- "பள்ளிப்பொத்தான கலாசார தரைவடிவமைப்பு" என பள்ளிப்பொத்தான எனும் இடத்தில் பெருங்கற் புதை குழி பற்றிய ஆராய்ச்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அப் புத்தக வெளியீடு ஒரு நிகழ்நிலை வைபவமாக நடைபெற்றதோடு ஆராய்ச்சிக் குழுவினால் அவ்வெளியீடு சம்பந்தமாக ஒரு கலந்துரையாடல் அமர்வையும் ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தது.
- தொல்பொருள் மற்றும் மரபுரிமை கற்கைகள் ஆய்விதழ் தொகுதி 06; வெளியீடு I, II & III மற்றும் 'புரவேத' ஆய்விதழ் ஆகியன உள்ளடங்கலாக கற்கைத் துறைப் பிரிவுக்கான ஆய்விதழை வெளியிட்டது.

சூழல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவு

- சூழல் முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவில் இருந்து 100 இற்கும் மேலதிகமான மாணவர்கள் ஜேர்மனிய நாட்டின் பேர்லின் நகர கோன்ராட் அடினேயர் ஸ்ரிப்ரங் (கே. ஏ. எஸ்) இனால் ஒழுங்குபடுத்தப்பட்ட "காலநிலை நெருக்கடி மற்றும் கோவிட் நோய் நிலைமையின் தீவிரத்தன்மை காணப்படும் காலங்களில் நகரங்களின் நீடித்து நிலைத்தல் மற்றும் மீண்டெழுதல்" எனும் கே. ஏ. எஸ் வலுவான நகரங்கள் மாநாட்டில் பங்குபற்றியமை
- உலக வங்கி - உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தல் செயற் திட்ட மானியத்தின் கீழ் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்தின் ஏனைய கற்கைத் துறைப் பிரிவுகளுடன் ஒன்றிணைந்து சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை தொடர்பான செயற்திட்டத்தை நடாத்தியது.
- அயன மண்டல சூழல் எனும் கற்கைத் துறைப் பிரிவின் ஆய்விதழின் வெளியீடு II இனை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

பொருளியல் கற்கைத் துறைப் பிரிவு

- சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்தின் பொருளியல் கற்கைத் துறைப் பிரிவில் கௌரவ மற்றும் பொது இளமாணிப் பட்ட கற்கை நெறிகளின் பட்டதாரி மாணவர்களுக்கு பொருளாதார பகுப்பாய்வுகளுக்கான வசதிகளை பொருளாதார அளவீட்டு ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது.
- இக் கற்கைத் துறைப் பிரிவில் தரவுப் பகுப்பாய்வு அலகு மற்றும் வணிக காப்பகம் ஆகியன நிறுவப்பட்டு உள்ளது.
- பொருளாதார மீளாய்வு ரஜரட்ட ஆய்விதழ் எனும் கற்கைத் துறைப் பிரிவின் ஆய்விதழின் வெளியீடு 01, கொள்கைச் சுருக்கங்கள் 2020 வெளியீடு 01 மற்றும் ஆய்வுச் சுருக்கங்களின் சேர்க்கை வெளியீடு 01 ஆகியன ஆரம்பித்து வெளியிடப்பட்டன
- சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை நிறுவனங்களின் கூட்டுறவுச் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றில் குறுங்கால கற்கை நெறிகளை தயாரித்து செய்துள்ளது.

மானிடவியல் கற்கைத் துறைப் பிரிவு

- வரலாறு மற்றும் பொது ஊடக தொடர்பாடலில் கலைமாணி (கௌரவ) பட்டம் மற்றும் கலைமாணி பட்டம் ஆகிய கற்கை நெறிகளின் பாடவிதானங்களுக்கான செய்முறைக் கையேடுகளை தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.
- பாடவிதான மீள்பார்வைக் குழுவுக்கு கல்வியில் முதுமாணிப் பட்ட கற்கை நெறிக்கான முன்மொழிவை சமர்ப்பித்தல்
- *சங்கீத்தர* ஊடக சஞ்சிகையை வெளியிட்டு வைத்தல் - 01 ஆவது தொகுதி வெளியீடு மானிடவியல் கற்கைத் துறைப் பிரிவினால் வெளியிடப்பட்ட இணையவழி சஞ்சிகை ஆகும்.
- மானிடவியல் கற்கை ஆய்விதழில் இரு தொகுதி வெளியீடுகள் வெளியிடப்பட்டன.மற்றும் *சங்கீத்தர* ஊடக சஞ்சிகை - 02 ஆவது தொகுதி பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.

B. தோல்விகளும் நியாயங்களும்

- தொல்பொருளியல் மற்றும் மரபுரிமை முகாமைத்துவ கற்கைத் துறைப் பிரிவினால் முன் - நவீன இலங்கையின் மட்பாண்ட தொழில்நுட்பங்கள் மற்றும் கற் கருவிகள் தொழில் நுட்பங்கள் தொடர்பாக ஒரு நாள் தொழிற் பட்டறை நடாத்தப்பட்டது.

- மானிடவியல் கற்கைத் துறைப் பிரிவினால் பொதுஜன தொடர்பாடல் துறையில் பட்டப்பின் டிப்ளோமா, முதுகலைமாணி, முதுதத்துவமாணி மற்றும் கலாநிதி பட்ட கற்கை நெறிகளை விருத்தி செய்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

C. எதிர்காலத் திட்டங்கள்

- பொது மற்றும் கௌரவ பட்ட கற்கை நெறிகளுக்கு த. தொ. கட்டாய பாடத் தொகுதிகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவினை நிறுவுதல்
- உலக வங்கி மற்றும் ப. மா. ஆ இன் மானிடவியலுக்கான த. தொ செயற்திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து 60 கணனிகளைக் கொண்ட புதிய த. தொ ஆய்வுகூடம் ஒன்றை ஸ்தாபித்தல்.
- பீடத்தின் அனைத்து கற்கைத் துறைப் பிரிவுகளும் மாணவர்களுக்கான தொழிற்துறைத் தொழிற் பயிற்சிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கையொப்பமிடல்
- கற்கைத் துறைப் பிரிவுகளின் 02 ஆவது ஆய்வுச் சிம்போசியம் நடாத்த திட்டம் இடப்பட்டு உள்ளன.

22. தொழில்நுட்ப பீடம்

A. அறிமுகம்

தொழில்நுட்ப பீடமானது இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் (இ. ர. ப) 6 ஆவது பீடமாக 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. தொழில்நுட்ப பீடத்தை நிறுவுவதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகள் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறுவனத்தின் ஒட்டுமொத்த தற்போதைய கல்வி கட்டமைப்பை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டது. இந்த ஆரம்ப கட்ட முயற்சியின் மூலம், பிற இலங்கை பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது அவற்றுக்குச் சமமான அளவு மற்றும் நோக்கம் கொண்ட, போதியளவு விரிவான கல்வி கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்று நம்பப்பட்டது.

தொழில்நுட்ப பீடமானது ஒவ்வொன்றும் அவற்றுக்குரிய பட்ட கற்கை நெறிகளை பிரதானமாகக் கொண்டுள்ள 5 கற்கைத் துறைப் பிரிவுகளை கொண்டது: 1 – உயிர்ச் செயன்முறைத் தொழில்நுட்பம் (உ.செ.தொ), 2 – மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் (மி.இ.தொ), 3 – உணவுத் தொழில்நுட்பம் (உ.தொ), 4 – தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (த.தொ.தொ), 5 – சடப்பொருள் தொழில்நுட்பம் (ச.தொ). அனைத்து பட்ட கற்கை நெறிகளும் 4 வருட கால எல்லையைக் கொண்ட இலங்கை தகுதி கட்டமைப்பு தரநிலை 6 க்கு அமைவானதாகும். க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவின் கீழ் தோற்றிய மாணவர்கள் இந்த கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவதுடன் ஆரம்பத்தில் உயிர்முறைமைத் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் & தொடர்பாடல் தொழில் நுட்பம் ஆகிய குழுக்களாக பிரிக்கப்படுவர். உயிர்முறைமைத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப மாணவர்கள் அவர்களது இரண்டாம் வருடத்தில் முறையே உயிர்முறைமை மற்றும் உணவு, மற்றும் மின்னியல் & இலத்திரனியல் மற்றும் சடப்பொருள் தொழில்நுட்பம், அவர்களது விருப்பத் தெரிவு, கற்றல் திறமைகள் மற்றும் வளங்களின் கிடைப்பனவு மற்றும் தொழிற்சந்தைக் கேள்வி என்பவற்றுக்கு இணங்க பிரிக்கப்படுவர்.

நாட்டில் தற்போது வழங்கப்படுகின்ற பட்ட கற்கை நெறிகளுடன் ஒப்பிடும் போது தொழில்நுட்ப பட்ட கற்கை நெறிகளானது அதிக வேலை வாய்ப்புக்கள் பெரிதும் நேரடித் திறமைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கூடியவை ஆகும். பாடவிதானத்தின் ஆரம்பத்திலிருந்தே அதனுடன் தொழிற்துறை நிறுவனங்களின் தொடர்புகள் மற்றும் இணைப்புக்கள் என்பன ஒன்றிணைக்கப்படுகின்றன. இது அனைத்து பட்ட கற்கை நெறி மாணவர்களும் இறுதி அரையாண்டுகள் சிலவற்றில், தொழிற் கற்கைத் துறைப் பிரிவு இடுகைகள் மற்றும் ஒரு அரையாண்டு கால ஆய்வு செயற்திட்டம் என்பவற்றை தொடர வேண்டும் எனும் முக்கிய கொள்கையைக் கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் (ப. மா. ஆ) இருந்து பெறப்படும் நிதிக்கு மேலாக, பீடமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ஆ. அ. வ) இருந்தும் உட்கட்டமைப்பு மற்றும் மனித வள விருத்திக்காக நிதி உதவியைப் பெறுகின்றது. இந்த பீடமானது இன்று வரை க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பிரிவில் கல்வி கற்ற மாணவர்களை இன்று வரைக்கும் ஐந்து அணிகளில் உள்வாங்கியதுடன் அதி சிரேஷ்ட மாணவர்கள் அவர்களின் அனைத்துப் பரீட்சைகளையும் பூர்த்தி செய்து உள்ளதுடன் தமது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பீடமானது தற்போது ஐந்து அணிகளையும் சேர்த்து 1177 மாணவர் தொகையை கொண்டிருக்கும் அதேவேளை 37 நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் 9 தற்காலிக உத்தியோகத்தர்கள் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

B. அடைவுகள்

சடப்பொருட்கள் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவின் பொறியியல் வேலைத்தளம் மற்றும் மாபிள் முன்னோடி வேலைத்தளம் ஆகியவற்றின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இவை பீடத்திற்கு 2021

ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கையளிக்கப்பபட்டது. பொறியியல் வேலைத்தளம் ஆனது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் மனித வள அபிவிருத்தி செயற் திட்டத்தின் (எஸ். ரீ. எச். ஆர். டீ) கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நவீன உபகரணங்களினால் வசதிப்படுத்தப்பட்டு உள்ளது. கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காலக்கேடு காரணமாக தாமதம் காணப்பட்ட போதிலும், கட்டம் II மற்றும் கட்டம் III கட்டடத் தொகுதி நிர்மாணச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எஸ். ரீ. எச். ஆர். டீ செயற் திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் 2021 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. ஆய்வுகூட கட்டடத் தொகுதி 18 மாத காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது மற்றும் முழுச் செயற் திட்டமும் 30 மாத காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தொழில்நுட்ப பீடத்தின் முதலாவது அணியாகிய 15/16 கல்வியாண்டுக்கான உள்வாங்கபட்ட அணி அவர்களது கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கொண்டனர் அத்துடன் அவர்கள் 2022 ஆம் ஆண்டு நிகழும் பட்டமளிப்பு விழாவில் பட்டத்தை பெற்றுக் கொள்வர். 16/17 கல்வியாண்டுக்கான அணி அவர்களது தொழிற்துறைப் பயிற்சியைப் பூர்த்தி செய்து கொண்டதுடன் இப் பீடம் இதன் 5 ஆவது மாணவ அணியாகிய 19/20 கல்வியாண்டுக்கான அணியை நிகழ்நிலை ஆரம்ப கால்கோள் விழாவுடன் உள்வாங்கியுள்ளது. அதிகமான கவ்விச் செயற்பாடுகள் நிகழ்நிலையில் நடாத்தப்பட்ட வேளையில் இப் பீடமானது மாணவர்களை செய்முறை வகுப்புக்களுக்காக பல்கலைக்கழகத்திற்கு கொண்டுவர ஆரம்பித்தது. இப் பீடமானது அனைத்து மாணவ அணியினருக்கும் முதல் முறையாக இணைய வழியில் பரீட்சைகளை பல பிரிவுகளாக நடாத்தியது. ஒரு தனியான துணைச் சட்டம் இணைய வழிமூல பரீட்சைகளுக்காக தயாரிக்கப்பட்டது.

இப் பீடமானது கோவிட் 19 நோய்த் தொற்று நிலைக் காலக்கேட்டை எதிர் கொள்ள இலங்கை நாணயப் பெறுமதியில் 25 மில்லியன் ரூபா மேலதிக தொகையை ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து அரும்பாடுபட்டு பெற்றுக் கொண்டது. இப் பீடமானது இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளை அனைத்து பீடங்களிலும் மேம்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் மற்றும் வை-பை இணைய வசதிகளை மாணவ விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கும் இந்த நிதியைப் பயன்படுத்திக் கொண்டது.

உயிர்ச்செய்முறை தொழில்நுட்ப (உ. செ. தொ) கற்கைத் துறைப் பிரிவு ஒராகிள் நிறுவனத்திடம் இருந்து உயரிய செயற்பாட்டு கணினியியல் செயற் திட்டங்களை 100, 000 $ டொலர்கள் பெறுமதி வாய்ந்த ஒரு போட்டிக்குரிய ஆய்வு மானியத்தை தக்க வைத்துக் கொண்டது. இக் கற்கைத் துறைப் பிரிவின் ஆய்வாளர்கள் 18 விஞ்ஞான ஆய்வுப் பத்திரிகைகள், 1 சர்வதேச புத்தக பாகங்கள் மற்றும் 5 ஆய்வுச் சுருக்கப் பத்திரிகைகள் ஆகியவற்றை வெளியிட்டு உள்ளனர். இக் கற்கைத் துறைப் பிரிவு அநுராதபுரத்தில் உள்ள மதவாச்சி சுகாதார மருத்துவ அலுவலர் வட்டாரத்தில் இருந்து 15 சமூக உறுப்பினர்கள், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து 30 பட்டதாரி மாணவர்கள் மற்றும் பட்டம் பெற்ற மாணவர்கள் மற்றும் 'சர்வோதயா' அரச சார்பற்ற நிறுவனத்தில் (அ. சா. நி) இருந்து 15 சமூக வழிப்படுத்தப்பட்ட சுகாதார காப்பு நலன் விரும்பிகளைக் (சீ. டீ. எச். சீ. வீ) கொண்ட குழுவினருக்காக 2021 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 24 ஆம் திகதி முதல் மார்கழி மாதம் 24 ஆம் திகதி வரை 3 மாத கால நிகழ்நிலை தொழிற்பட்டறை ஒன்றை நடாத்தியது. காணொளி மாநாட்டு காட்சிப்படுத்தல் தொழில்நுட்ப பொறிமுறை மூலமாக 2021 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 8 ஆம் திகதி அன்று மு. ப. 10.00 முதல் மு. ப. 10.30 மணி (இலங்கை நேரம்/ மு.ப 4.30 கி. இ. நே) வரை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் உலக நுளம்புகள் ஒழிப்புத் திட்ட (உ. நு. தி.) நிகழ்வு 2021 ஆம் ஆண்டின் திறந்த அழைப்பு தொடர்பாக அறிமுக இணையவழிக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இக் கற்கைத் துறைப் பிரிவு எஸ். ரீ. எச். ஆர். டீ செயற் திட்டத்தின் மூலமாக பல முக்கியமான உபகரணங்களை கொள்வனவு செய்து கொண்டு உள்ளது.

A. ஒளியுணரி உடனான யூ. பீ. எல். சீ.
B. டிஜிற்றல் ப. ச. தா உபகரணம்
C. கையுறைப் பெட்டி தொழில்த் தளம்

D. ஒருமிய துகளாக்கி
E. நனோ துகள்

மின்னியல் & இலத்திரனியல் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு ஆனது கற்பித்தல் மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக பல உயரிய உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளது. ஒரு நியூமற்றிக் பயிற்சியாளர் வழிகாட்டி, ஒரு இயந்திர மனித கையின் நிலைகள், மின் இயந்திரங்கள் மற்றும் இயக்குவிப்பாளர்கள் மற்றும் தொலைத் தொடர்பு பயிற்சியாளர்கள் வழிகாட்டி ஆகியன அவற்றுள் சிலவாகும். இக் கற்கைத் துறைப் பிரிவு ஒரு சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஒரு தலைமை ஆலோசகர் ஆகியோரை மின்னியல் & இலத்திரனியல் பாட விதானத்தை அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு அமைவாக மீளாய்வு செய்வதற்கு ஆட்சேர்ப்பு செய்துள்ளது.

இக் கற்கைத் துறைப் பிரிவு ஐ. ஈ. எஸ். எல் இன் உறுதிப்படுத்தல் அங்கீகாரத்துக்காக சுய மதிப்பீட்டு அறிக்கையை பூர்த்தி செய்துள்ளதுடன் உறுதிப்படுத்தல் ஆலோசகரிடம் இவ் அறிக்கையைச் சமர்ப்பித்தும் உள்ளது.

த. தொ. தொ. கற்கைத் துறைப் பிரிவு ஆனது வெவ்வேறு துறைகளில் வெற்றி அடைந்து உள்ளது. இக் கற்கைத் துறைப் பிரிவு புதிய ஐ. ஓ. ரீ. உபகரணத்தை மற்றும் கணினி வலையமைப்புக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளது. இந்த நவீன உபகரணங்களுடன் மாணவர்கள் செய்முறைகளில் கைத் தேர்ச்சி பெறமுடியும். மாணவர்கள் த. தொ. தொழிற்துறை நிறுவனங்கள் தொடர்பாக ஒரு தொழிற்பட்டறையை ஒழுங்குபடுத்தியதுடன் அது தொழிற்துறை நிபுணர் ஒருவரினால் நடாத்தப்பட்டது. இக் கற்கைத் துறைப் பிரிவின் பாட விதான மீளாய்வு இரு ஆலோசகர்களுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாடவிதான மீளாய்வின் ஒரு பாகமாக விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் வெளிப் பங்குதாரர்கள் ஆகியோருடன் இக் கற்கைத் துறைப் பிரிவு அமர்வுகளை நடாத்தியது. அவ்வாறே பாடவிதானத்தை சீ. எஸ். எஸ். எல் வழிகாட்டிக்கு அமைய பாடவிதானத்தை விருத்தி செய்தது. தொழிற்துறை மற்றும் கல்வித் தர நிலைகள் என்பவற்றுக்கு அமைய பாடவிதானத்தை மாற்றி அமைக்கப்பட்டது. அத்துடன், விரிவுரையாளர்கள் மற்றும் செய்முறைப் பயிற்சியாளர்கள் ஆகியோருடன் கற்கைத் துறைப் பிரிவின் விருத்தி தொடர்பான அவர்களின் கருத்துக்களை வெளிக் கொண்டு வருவதற்கும் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள பாட விதானத்தின் ஒரு பாகமாகவும் ஒரு அமர்வை நடாத்தியது.

உணவு தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு ஆனது சில முக்கிய உபகரணங்களை எஸ். ரீ. எச். ஆர். டீ செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்துள்ளது. அவற்றுள் உள்ளடங்குவன: மேற்பரப்பின் தன்மை பகுப்பாய்வு இயந்திரம், ஒளி முறிவுமானி, பாகுநிலைமானி, நீர் செயற்பாட்டுமானி, மருந்தக குளிரூட்டி, மிகை குளிரூட்டி மற்றும் கலவை இயந்திரம். அத்துடன் இக் கற்கைத் துறைப் பிரிவின் உடைய கல்விசார் உத்தியோகத்தர்கள் 2020 ஆம் ஆண்டின் ஆய்விதழ்க் கட்டுரைகளை பிரசுரித்து உள்ளனர்.

இலங்கை ரஜரட்ட பல்ககைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான ச. சிம்.்.ப். ர. ப எனும் வருடாந்த ஆய்வுச் சிம்போசிய அமர்வை தொழில்நுட்ப பீடம் ஏற்பாடு செய்து நடாத்தியது. ச. சிம்.்.ப். ர. ப எனும் பெயரானது தொழில்நுட்ப பீடத்தினால் முன்மொழியப்பட்டது மற்றும் பல்கலைக்கழகம் அப் பெயரை இந்த வருடத்தில் இருந்து தொடர்ந்து பயன்படுத்துவதற்கு தீர்மானித்து உள்ளது. கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காலக்கேடு காரணமாக இச் சிம்போசிய அமர்வானது நிகழ்நிலை முறையில் நடாத்தப்பட்டது மற்றும் அழைக்கப்பட்ட பேச்சாளர்கள் மற்றும் ஒரு பரந்துபட்ட விசேடத்துவ நிணர்களை உள்ளடக்கிய பல இணைய வழிக் கருத்தரங்குகள் என பல புகழ்பெற்ற உலக நிபுணர்கள் பங்குபற்றியிருந்தனர். பல்கலைக்கழகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள விருத்தி செயற்திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதி உதவி பெறப்பட்டது.

தொழில்நுட்ப பீடம் பல்கலைக்கழகத்தில் முதன்முறையாக ஆய்வு விருது வழங்கும் நிகழ்வை பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆய்வாளர்களை கௌரவிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தியது. 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் பொருட்டு இதே நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் முந்நைய நாள் உபவேந்தர்களை கௌரவிப்பதற்கும் தீர்மானம் எடுக்கபட்டு இருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர், பல்கலைக்கழக வேந்தர் மற்றும் உப வேந்தர் ஆகியோர்கள் பிரதம விருந்தினர்களாக பங்குபற்றி இருந்தனர். இந்த நிகழ்விற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள விருத்தி செயற்திட்டம் மூலம் நிதி உதவி வழங்கப்பட்டது.

C. தோல்விகளும் நியாயங்களும்

பல தோல்விகள் கோவிட் 19 நோய்த் தொற்று நிலைக் காலக்கேடு காரணமாக ஏற்பட்டுள்ளன. இவ் ஆண்டின் அதிகமான காலப்பகுதியில் மாணவர்கள் வீடுகளிலேயே இருந்தனர். ஆகையால் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் இணைய வழி முறைமைக்கு முழுமையாக மாற்றப்பட்டது.

இவ் வருட காலப் பகுதியல் போதிய கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இல்லாத. அவற்றில் உள்ளடங்குவன

- அன்றாட கடமைகளில் தாமதம்
- முறையான வள முகாமைத்துவம் இன்மை
- பரிசோதனை செயன்முறைகளை உரிய நேரத்தில் நடாத்த ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் கிடைக்காமை
- கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களது அதிகளவான நேரத்தை கல்விசார் செயற்பாடுகளுக்குப் பதிலாக நிர்வாக மற்றும் கல்விசாரா கடமைகளில் செலவு செய்கின்றமை.
- கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக செய்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்பட முடியாமை

  புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடமாக இருப்பதால், தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் அதிக வேலைப்பளுவை சமாளிப்பதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். உத்தியோகத்தர் பற்றாக்குறைக்கு மேலதிகமாக பீடமானது ஆய்வுகூடம் மற்றும் அலுவலகம் என்பவற்றில் இடப்பற்றாக்குறை நிகழ்கின்றது. இதுவும் பல்வேறு தோல்விகளுக்கு காரணமாக அமைகின்றது. அவையாவன:
- கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு சரியான இடவசதி இன்மை
- விரிவுரை மண்டபங்களின் ஒழுங்குபடுத்தல்களில் ஏனைய பீடங்களுடனான குழப்பங்கள் காரணமாக விரிவுரைகள் இறுதி நிமிடத்தில் நிறுத்தப்படுதல்.
- கோரப்பட்ட வெற்றிடங்கள் அனுமதிக்கப்படாமை காரணமாக உத்தியோகத்தர்களுக்கு மேலதிக வேலைச்சுமை.

  பீடமானது மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் அதிகரிக்கும் மாணவர் எண்ணிக்கையை உள்வாங்குவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றது.
- முழு மிஹிந்தலை வளாகமும் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டதால் விடுதி வசதிகள் மிகப் பாரியளவில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம் ஒன்றாக உள்ளது.
- போதிய சிற்றுண்டிச்சாலை வசதிகள் இல்லாமையால் நீண்ட வரிசை காரணமாக மாணவர்கள் தமக்குரிய உணவுகளை உரிய நேரத்தில் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், அதனால் கல்விசார் செயற்பாடுகளில் தாமதம் ஏற்படுகின்றது.
- விரிவுரைகள், செய்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றை உரிய நேரத்தில் முடிப்பதற்காக பின்னிரவு வரை நடாத்தப்பட வேண்டியதாக உள்ளது. மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பின்னிரவுகளில் பயணிப்பதில் முறையான பயண வசதிகள் இன்மையால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

D. எதிர்காலத் திட்டங்கள்

உட்கட்டமைப்பு விருத்தி

கட்டடத் தொகுதிகள் நிர்மாணம்

- ப. மா. ஆ. இனால் நிதி வழங்கப்பட்ட கட்டம் II மற்றும் கட்டம் III கட்டடத் தொகுதி: இந்த மாடிக் கட்டடத் தொகுதியை 2022 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வகையில் பூர்த்தி செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது.
- ஆ. அ. வ இன் நிதி உதவியின் கீழான கட்டடத் தொகுதி: 2021 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது மற்றும் ஆய்வு கூடத் தொகுதியை 2023 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் பூர்த்தி செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது. அத்துடன் முழு செயற்திட்டமும் 2024 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் பூர்த்தி செய்யப்படும்.

பாடவிதான மேம்பாடு

- அனைத்து கற்கைத் துறைப் பிரிவுகளினதும் பாடவிதான மீள்திருத்தங்கள் இறுதி நிலையை அடைந்து உள்ளதோடு 2022 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யப்படும்.
- அனைத்து பட்ட கற்கை நெறிகளுக்குமான சுய மதிப்பீட்டு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஆலோசகர்களின் விமர்சனங்களும் பெறப்பட்டது.
- வணிக காப்பு நிலையங்களை நிறுவுதல்
- வருடாந்த பங்குதாரர் ஒன்றுகூடல் மற்றும் தொழிற்துறை ஆலோசனை ஒன்றுகூடல்கள் ஆகியவற்றை ஒழுங்கமைத்தல்
- பட்டப்பின் பட்ட கற்கை நெறிகளை ஆரம்பித்தல்

மனித வள விருத்தி

- தொழில்நுட்ப பட்ட கற்கை நெறிகளுடன் தொடர்பான கற்கைத் துறைப் பிரிவுகளில் விசேடத்துவம் அடைந்தவர்களை பீட அங்கத்தவர்களாக உள்வாங்கல்
- ஆ. அ. வ நிதி உதவியுடன் தகுதிகாண் நிலையிலுள்ள விரிவுரையாளர்களை அவர்களது பட்டப்பின் பயிற்சி நெறிகளுக்காக அனுப்பி வைத்தல்
- கிடைக்கக்கூடிய நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான தொழிற்பட்டறைகள் நடாத்துவதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் பீடத்துக்கு அழைக்கப்படுவதுடன் கல்விசார் உத்தியோத்தர்களுக்கு பயிற்சி அளித்தல்
- எஸ். ரீ. எச். ஆர். டீ. செயற்திட்டத்தின் ஊடாக பீடத்தின் கல்வி சார் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர்களுக்காக பல குறுங்கால தொழிற் பயிற்சிகளை ஒழுங்குபடுத்துதல்

23. நூலக வலையமைப்பு

A. அறிமுகம்

நூலக வரலாறு

1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 07 ஆம் திகதிய இல 896/2 வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 16.08.1978 ஆம் திகதிய பல்கலைக்கழக சட்டம் என்பவற்றுக்கு அமைய மத்திய, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களின் இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளின் வளங்களை ஒன்றிணைத்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் ஆனது 1996 ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை ஆனது 1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ஆம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. ரஜரட்ட பல்கலைக்கழக நூலகத்தின் முதலாவது நூலகர் பேராசியர். பியதாச ரணசிங்கவும் (1996-1998), அடுத்ததாக திரு. கபில ஜயலால் சிறிசேனவும், பின்னர் திரு. காமினி டீ சில்வா (1999-2007) ஆகியோர்களும் பதவி வகித்தனர். அதன் பின்னர் திருமதி. ஹேமா விஜேதுங்க (ஓய்வு விடுப்பு நியமிப்பு - 2007-2009) என்பவரும் திருமதி ஏ.எஸ் சிரிவர்த்தன அவர்கள் தற்போதைய நூலகராக 2013 ஆம் ஆண்டு முதல் இன்று வரை கடமை புரிகின்றார்.

நூலக விபரக்குறிப்பு

ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் நூலகம் ஆனது அறிவைப் பெறுவதில் நிறுவனத்தின் இதயமாகவும் மற்றும் அறிவைப் பரப்பும் பரந்து விரிந்த விருட்சமாகவும் உள்ளது. இந்த நூலகமானது பட்டதாரி மாணவர்கள், பட்டப்பின் பட்டதாரி மாணவர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய பல்கலைக்கழக பயனர்கள் சமூகத்திற்கு சேவையை வழங்கி வருகின்றது. மேலும், நூலகமானது ஆய்வாளர்கள் மற்றும் இப் பிரதேசத்தில் உள்ள வெளிச்சமூகம் என்பவற்றுக்கு சேவை அளித்து வருகின்றது.

பீட நூலகங்கள்

இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை ஆனது பிரதான நூலகம் மற்றும் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ள ஏனைய நான்கு பீட நூலகங்களினையும் உள்ளடக்குகின்றது. பிரதான நூலகம், பிரயோக விஞ்ஞான பீட மற்றும் தொழில்நுட்ப பீட நூலகங்கள் மிஹிந்தலையில் அமைந்திருப்பதோடு அதன் மூலம் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம், முகாமைத்துவ கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் என்பவற்றிற்கு தொடர்ந்து சேவை அளித்து வருகின்றது. புளியங்குளத்தில் உள்ள நூலகம் விவசாய பீடத்திற்கு சேவையாற்றுவதோடு, சாலியபுரவில் அமைந்துள்ள நூலகம் ஆனது மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீடத்திற்கும் சேவையாற்றி வருகின்றது. வைத்திய சிகிச்சை நூலகம் ஆனது அநுராதபரத்தில் உள்ள போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ளது.

நூலக அலுவலர்கள்

நூலகம் தற்போது கல்விசார் நூலக உத்தியோகத்தர்கள் (07), நிர்வாக உத்தியோகத்தர் (01), நூலக கல்விசார் உதவி உத்தியோகத்தர் (01), சமதர உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் (38) ஆகிய அலுவலர்களைக் கொண்டுள்ளது.

நூலக சேர்க்கைகள்

பிரதான நூலகத்தில் பாடப்புத்தகங்கள், ஆய்வு இதழ்கள், சஞ்சிகைகள், புதினப் பத்திரிகைகள், அரச ஆவணங்கள், விசேட தொகுப்புக்கள், உசாத்துணை நூல்கள், கடந்தகால செயற்திட்ட அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் இலத்திரனியல் வளங்கள் ஆகியன காணப்படுகின்றன. இவை அனைத்தும் பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு

சேர்க்கப்படுகின்றவை ஆகும். நூலக வளங்கள் ஆனது அச்சு மற்றும் இலத்திரனியல் வடிவங்களில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

நூலகமானது கொன்சல் ஊடாக மருத்துவம், விவசாயம், பிரயோக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், கணிணி விஞ்ஞானம் மற்றும் முகாமைத்தும் என சம்பந்தப்பட்ட துறைகளில் முழுமையான ஆய்விதழ்களை பார்வையிடக் கூடியவாறு இணையத்தள ஆய்விதழ் தரவுகளை தரவு மையத்தின் மூலம் வழங்குகின்றது. நூலகம் ஆனது பல தற்போதைய ஆய்விதழ்களினை பாவனைக்கு பதிவு செய்துள்ளதுடன், பயனர்கள் அவர்களது தற்காலப் போக்குக்கு ஏற்ப நடைமுறை சார்ந்த அறிவுகளை வளர்த்துக் கொள்வதை நோக்காகக் கொண்டது. இப் புத்தக தொகுப்புக்கள் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலும் பிரதானமாகக் கற்பிக்கப்படும் பாடவிதானங்கள் மற்றும் வேறுபட்ட விடயத் துறைகளிலான பாடப் புத்தகங்கள் என்பவற்றை கொண்டுள்ளது.

பிரதான நூலகம்	பிரயோக விஞ்ஞான பீட நூலகம்	விவசாய பீட நூலகம்	மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீட நூலகம்	தொழில்நுட்ப பீட நூலகம்	மொத்தம்
83430	14039	15229	10666	1708	125072

அட்டவணை 01: 31-12-2021 ஆம் திகதியில் உள்ளவாறான கிடைக்கக்கூடிய புத்தகங்களின் (பிரதிகள்) எண்ணிக்கை

கிடைக்கக்கூடிய இலத்திரனியல் - ஆதாரங்கள் மற்றும் தரவுத்தளங்கள்

இலங்கையின் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நிதியளிக்கப்பட்ட கொன்சால் (இலங்கையின் கல்விசார் நூலகங்களின் கூட்டமைப்பு) மூலம் பெறப்பட்ட தரவுத்தளங்கள் (அதாவது எமரால்டு தரவுத்தளம்/ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம்/ ரெய்லர் மற்றும் ப்.்.ராசின்ஸிஸ்) காணப்படுகின்றன. பல்கலைக்கழக ஹினாரி தரவுத் தளத்தையும் பதிவு செய்து கொண்டு சேவை வழங்குகின்றது.

நூலகத்தின் பிரதான சேவைகள்

புத்தகம் வழங்கும் வசதிகள், உசாத்துணை குறிப்பு வசதிகள் மற்றும் இடை - நூலக கடன் முறைமைகள், தற்போதைய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், தகவல் எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டங்கள், பயனர் கல்வி நிகழ்ச்சித் திட்டம், தொழிற் பட்டறைகள் மற்றும் நூலக வலைத்தள பராமரிப்பு ஆகியவை நூலகத்தின் முக்கிய சேவைகளில் அடங்கும். இணைய வழி ஆதாரங்களுக்கான பயனுள்ள முகவரி இணைப்புகள் நூலக வலைத்தளத்தின் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. நூலக ஆவணப் பட்டியல்களை இணையத்தள பொது அணுகல் பட்டியல்கள் (ஓ. பீ. ஏ. சீ) மூலம் பார்வை இடக் கூடியதாக அமையும். பல்கலைக்கழகத்தின் நிறுவன ஆவண களஞ்சியம் ஆனது நூலகத்தால் பராமரிக்கப்படும். பயனர்கள் இன்ட்ராநெட் வலையமைப்பு மூலம் இணைய வழிமூலமாக கடந்த கால வினாத்தாள் சேகரிப்பை அணுகலாம். நூலகம் வட மத்திய மாகாணத்திற்கான சமூக மேம்பாட்டு சேவையை வழங்குகிறது. (எ.கா.: பாடசாலை மற்றும் பொது நூலக கட்டிடம் என்பவற்றை பயனுள்ள முறையில் மறுசீரமைத்தல், புத்தக நன்கொடை அளித்தல் செயற்பாடு, பாடசாலை மற்றும் பொது நூலக ஊழியர்கள் ஆகியோருக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்ச்சித் திட்டம்)

- **31-12-2021 ஆம் திகதியில் உள்ளவாறான நூலகத்தின் அங்கத்தவர்கள்**

	பிரதான நூலகம்	பிரயோக விஞ்ஞான பீட நூலகம்	விவசாய பீட நூலகம்	மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீட நூலகம்	தொழில்நுட்ப பீட நூலகம்	மொத்தம்
பட்டதாரி மாணவர்கள்	6117	1418	1119	1789	1014	11457
பட்டப்பின் பயிலுனர்கள்	00	00	00	00	00	00
கல்விசார் உத்தியோகத்தர்கள்	384	109	81	48	11	633
தற்காலிக கல்விசார் உத்தியோகத்தர்கள்	37	63	60	00	14	174
நிர்வாக உத்தியோகத்தர்கள்	22	01	05	06	00	34
கல்விசாரா உத்தியோகத்தர்கள்	408	29	59	55	03	588

- **தன்னியக்க நூலக வசதியை அளித்தல்**

நூலகம் தற்போதுள்ள நூலக தரவுத் தள முகாமை முறைமையினை திறந்த மூல மென்பொருளான "கோஹா" மூலமாக வெற்றிகரமாக மாற்றியுள்ளது. ரஜரட்டைப் பல்கலைக்கழக நூலக அமைப்பு ஆனது அனுப்புதல், வரிசைப்படுத்துதல், வரவு செலவுத் திட்ட அணுகல், புள்ளிவிபரங்கள் பெறுதல், ஆலோசனைகளை வழங்குதல் ஆகியவற்றுக்காகவும் மற்றும் பயனர்கள் நூலக அட்டவணை இணைய வழிச் சேவைகளைத் தேடுவதற்காகவும் "கோஹா" இனைப் பயன்படுத்துகிறது. சமீபத்திய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நூலகத்தினால் பயனர் சமூகத்திற்கு தொலைநிலை அணுகலை வழங்க முடிந்து உள்ளது.

- **ஒரு நிறுவன களஞ்சியம் (நி. க.)**

நிறுவன நூலக களஞ்சியமானது நிறுவனத்தின் ஆய்வு வெளியீடுகளின் நிகழ்நிலை சேகரிப்பாக உள்ளது. இந் நூலக களஞ்சியமானது பாவனை மற்றும் ரஜரட்டப் பல்கலைக்கழக ஆய்வு வெளிப்பாடுகளை அதிகரிப்பதற்கும் மற்றும் உசாத்துணைப் பயன்பாட்டு வீதத்தையும் பல்கலைக்கழகத்தின தரநிலையையும் அதிகரிப்பதற்கும் மிக இன்றியமையாததாக உள்ளது. தற்போது நூலகமானது 2250 க்கும் அதிகமான வெளியீடுகளினைக் (சுருக்க ஆய்வுகள் மற்றும் விரிவான ஆய்வுக் கட்டுரைகள்) கொண்டுள்ளது.

- **இன்ட்ராநெட் அணுகல் மூலமான தகவல் ஆதாரங்கள் - கடந்த கால வினாத்தாள்கள்**

பயனர்களுக்கான தகவல்களைப் பெற கடந்த கால ஆவணங்களுக்கு இன்ட்ராநெட் அணுகலை நூலகம் வழங்குகிறது. அவர்கள் தங்கள் தகவல் தேவைகளை பூர்த்தி செய்ய மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பயனர் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப கடந்த கால ஆவணங்களைத் தேடவும் முடியும்.

- **எஸ். டி. ஐ / சி. ஏ. எஸ் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி ஆதரவு சேவை**

தகவல் சேவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பரவல் (எஸ். டி. ஐ) என்பதைப் பயன்படுத்தி பயனர்கள் தங்களது குறிப்பிட்ட தகவல் தேவைகளுக்கான பிரத்தியேகமான தகவல்களைப் பெறலாம். தற்போதைய விழிப்புணர்வு சேவைகள் பயனர்களுக்கு புதிய தலைப்புகள் மற்றும் அவர்களின் குறிப்பிட்ட ஆராய்ச்சி தேவைகள் பற்றிய தகவல்களை மின்னஞ்சல் வழியாக, வாய்மொழியாக மற்றும் அறிவிப்புகள் மூலம் தெரிவிக்கும். நூலகம் ஆனது பயனர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும், அவர்களின் ஆராய்ச்சி பணிகள் மற்றும் நடப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களை மின்னஞ்சல்கள் மற்றும் பிற வழிகள் வழியாக பெற்றுக் கொள்வதற்கும் ஆதரித்து வருகின்றது.

- **ஒலி, ஒளி வள சேவை மற்றும் வை.ஃபை அணுகல்**

பிரதான நூலகத்தின் இலத்திரனியல் வடிவ வள அலகு இலத்திரனியல் தரவுத்தளங்கள், இணையம் மற்றும் இறுவட்டு / டிவிடி சேகரிப்புக்கான அணுகலை வழங்குகிறது. இது குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையான கணினிகளைக் கொண்டுள்ளது மற்றும் பயனர்கள் பதிவிறக்கம் செய்து தகவல்களைப் பகிரக் கூடியதாகவும் உள்ளது. அவர்கள் முழு உரை அறிவார்ந்த கட்டுரைகளையும் கட்டணம் இன்றி இலவசமாக அணுகலாம். இது நூலகத்தில் உள்ள அனைத்து இலத்திரனியல் வடிவ ஆவணங்களுக்கும் எளிதான அணுகலை வழங்குகிறது. நூலக கட்டிடத்தின் வை.ஃபை இணைப்பு பகுதியுடன் மையமாக உள்ளது, மேலும் இது மாணவர்களின் மடிக்கணினிகள், ஐ-பேட்கள், ஸ்மார்ட் போன்கள் மற்றும் எடுத்துச் செல்லக் கூடிய சாதனங்களை இணைத்து இலத்திரனியல் தகவல்களை அணுக அனுமதிக்கிறது.

- **நகலெடுக்கும் வசதிகள் (தனியார்)**

நூலகம் பயனர்களுக்கு நகலெடுக்கும் வசதிகளை வழங்குகிறது. ஆய்வறிக்கை மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் தவிர அனைத்து பொருட்களும் பயனர்களால் நகலெடுக்கப்படக் கூடியதாக உள்ளது. ஸ்கேனிங் மற்றும் புத்தக பிணைப்பும் அவர்களால் வழங்கப்படுகின்றன.

- **செய்தி கிளிப்பிங் சேவை**

தொடர்ச்சியான விடயங்களுக்கான நூலக கிளிப்பிங் தொகுப்பை நூலகம் பராமரிக்கிறது. அந்தக் கட்டுரைகளை ஸ்கேன் செய்வதன் மூலம் அவற்றை டிஜிட்டல் காப்பகமாக மாற்ற நூலகம் திட்டமிட்டது. இது புதுப்பித்த தகவல்களை உள்ளடக்கியது மற்றும் பயனர்கள் அந்த சேவையின் மூலம் தகவல்களைப் பகிரவும், பதிவிறக்கவும் முடியும்.

B. அடைவுகள்

- **பயனர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஆறு அறிமுக நிகழ்ச்சிகள் முகாமைத்துவ கற்கைகள் பீடம், விவசாய பீடம், மருத்துவ பீடம், சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் என்பவற்றின் மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது. முப்பத்து மூன்று (33) நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் கோவிட் - 19 நோய்த் தொற்று நிலை காலக்கேடு காரணமாக காணொளி மாநாட்டு தொழில்நுட்பத்தின் மூலமாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- **இணைய வழியில் ஆவணங்களை வழங்கும் சேவை**

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நூலகத் தொகுதி ஆனது கோவிட் - 19 நோய்த் தொற்று நிலை காலக்கேடு காரணமாக இணைய வழியில் ஆவணங்களை வழங்கும் சேவையை ஆரம்பித்து வைத்துள்ளது. கோரப்படுகின்ற நூலக ஆவணங்கள் மின்னஞ்சல் மூலமாக நூலக பயனர்களுக்கு அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை நோய்த் தொற்று நிலை காலக்கேட்டுக்கு இடையிலும் பேணும் பொருட்டு அனுப்பி வைத்திருக்கின்றது. நூலகம் 4000 ஆவணங்களை இவ் வருடம் முழுவதும் வழங்கி உள்ளது.

- **இணைய வழி பயனர் பதிவுச் சேவை**

கோவிட் - 19 நோய்த் தொற்று நிலை காரணமாக நூலகமானது இணையவழி பயனர் பதிவுச் சேவைகளை அறிமுகப்படுத்தி உள்ளது மற்றும் நாம் 2019 ஆம் வருட முகாமைத்துவ மாணவர்கள் உள்வாங்கலினை இணைய வழி மூலமாக வெற்றிகரமாக பதிவு செய்து கொண்டோம்.

- **இணைய வழி விடுவிப்பு பரிந்துரை**

நூலகம் ஆனது கோவிட் - 19 நோய்த் தொற்று நிலை காரணமாக மாணவர் விடுவிப்புக்கான பரிந்துரை வழங்கும் சேவையை இணையவழி மூலம் அறிமுகப்படுத்தி உள்ளது. அத்துடன் நாம் 2014/ 2015 ஆம் வருட முகாமைத்துவ மாணவர்களின் விடுவிப்புச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முடித்து உள்ளோம்.

- **காலக்கேடான காலப்பகுதியில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்**

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காலக்கேடான காலப்பகுதியில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களின் திறன்கள் மற்றும் ஆளுமையை விருத்தி செய்தல்.

- **சமூக வெளிக்கள செயற்பாடுகள்**

பொது நூலகர்கள், பொது நூலக சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை நூலகர்கள், பிரிவேனாக்களின் நூலகர்கள் ஆகியோர்களுக்கான நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தொழிற்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தினால் காலக்கிரமத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டது. நூலக விழிப்புணர்வு அமர்வுகள் பொது நூலகர்கள் மற்றும் பாடசாலை நூலகர்கள் ஆகியோர்களுக்காக நடாத்தப்பட்டது.

- **கடந்த கால வினாத்தாள்களை இணைய வழி மூலம் வழங்கும் சேவை**

மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் கடந்த கடந்த கால வினாத்தாள்கள் பல்கலைக்கழக கற்றல் முகாமை முறைமையில் (க. மு. மு) பதிவிடப்பட்டு உள்ளது.

C. தோல்விகளும் நியாயங்களும்

1. இணைய வழி வளங்களின் பற்றாக்குறை
2. இணையவழிச் சேவைகளை வழங்க த. தொ. உபகரணங்கள் போதிய அளவில் இன்மை.
3. தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ள போதிய பணம் இல்லாமை
4. தொற்று நோய் நிலை காரணமாக பயனர்களின் மேலதிக வாசிப்புப் பழக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது.

D. எதிர்காலத் திட்டங்கள்

- **இலத்திரனியல் வடிவ நூலகம்**

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நூலகத் தொகுதி ஆனது இலத்திரனியல் வடிவ புத்தகப் பாகங்களை உள்ளகத்தில் சேர்த்து வைக்கும் இலத்திரனியல் வடிவ நூலகம் ஒன்றை அமைக்கும் திட்டம் ஒன்றை வைத்துள்ளதுடன் அதை உள்ளக இணைய வலையமைப்பின் ஊடாக அணுக முடியும். இந்த முன்மொழியப்பட்ட இலத்திரனியல் வடிவ நூலகம் ஆனது டீ வெளி திறந்த - மூலங்கள் மென்பொருளினைப் பயன்படுத்தி அமுல்ப்படுத்த முடியும் அத்துடன் அதை உள்ளக இணைய வலையமைப்பின் ஊடாக அணுக முடியும். அதனுடாக மாணவர்கள் இணைய வழிச் சேவை மூலமாக பெறும் அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இலத்திரனியல் வடிவ நூலகம் ஊடாக இலத்திரனியல் வடிவ ஆவணங்களை அணுகக் கூடியதாக இருப்பதால் நூலக உத்தியோகத்தர்களும் அதன் மூலம் பயன் பெறக் கூடியதாக இருக்கும்.

- **எழுத்துத் திருட்டு பரிசோதித்தல் மென்பொருள் சேவைப் பங்களிப்பு**

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நூலகத் தொகுதி ஆனது ‘‘ரெனிற்றின்’’ எழுத்துத் திருட்டு பரிசோதித்தல் மென்பொருளை அறிவுச் சந்தையில் நிலவும் இதன் தீவிரமான பங்களிப்பு மற்றும் கல்விச் சமூகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் என்பவற்றை கருத்திற் கொண்டு அறிமுகம் செய்வதற்கு

திட்டமிட்டுள்ளது. நாம் இதன் ஆரம்ப கட்டமாக ஒவ்வொரு கல்விசார் உத்தியோகத்த அங்கத்தவருக்கும் அறிவுறுத்துனர் கணக்கை உருவாக்க திட்டம் இட்டு உள்ளோம் மற்றும் "இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்துக்கான எழுத்துத் திருட்டு கொள்கை" இனைத் தயாரிக்கவும் திட்டம் இட்டு உள்ளோம்.

- **இதழ் தொகுப்பு அலகை நிறுவுதல்**

நூலகமானது பல்கலைக்கழக சமூகத்தின் ஆய்வுச் செயற்பாடுகளை வசதிப்படுத்தும் பொருட்டு நூலக வளாகத்தில் இதழ் தொகுப்பு அலகு ஒன்றினை ஸ்தாபிப்பதற்கு திட்டம் இட்டுள்ளது.

- **உள்ளக தொழிற் பயிற்சிகள்**

நூலக உத்தியோகத்தர்களுக்கான உள்ளக தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டம் இட்டுள்ளது. வளவாளராக நூலகத்தின் கல்விசார் உத்தியோகத்தர் காணப்படுவர்.

- **மாணவர்களுக்கான தொலைநிலை அணுகல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்**

நூலக முறைமை ஆனது அனைத்து மாணவர்களுக்கும் தொலைநிலை அணுகல் வசதியை ஏற்படுத்தும் பொருட்டு நிகழ்நிலை கணக்குகளை அளிப்பதற்கு திட்டம் இட்டுள்ளது. தொலைநிலை அணுகல் பயனர் இரகசிய கணக்கு விபரங்கள் மூலமாக தனிப்பட்ட முறையில் நூலக தரவுத்தளத்தினை மாணவர்கள் தொலை நிலையில் அணுக முடியும்.

- **சீ. எஸ். ஆர். நிலையத்தை நிறுவுதல்**

நூலகம் ஆனது பிரதான நூல்நிலையத்தில் சீ. எஸ். ஆர் நிலையம் ஒன்றினை ஸ்தாபிக்க உள்ளது. சீ. எஸ். ஆர். செயற்பாடுகளை நடாத்துவதற்கு தகவல்களை சேகரித்தல் மற்றும் பேணிப் பாதுகாத்தல் என்பதே சீ. எஸ். ஆர் நிலையத்தின் பிரதான நோக்கமாகும்.

E. 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை

01. இணைய வழி நூலக சேவைகள் கோவிட் 19 நோய்த் தொற்று நிலைமைக் காலக்கேடான நாட்களில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சேவையை இணைய முறை கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கு வழங்கி இருந்தது. (இலத்திரனியல் வளங்களை வழங்கும் சேவை/ இணைய வழியல் பதிவு மேற்கொள்ளும் சேவை/ இணைய வழியில் பட்டம் பெற்றோரை விடுவிப்புக்கான பரிந்துரை/ இலத்திரனியல் வடிவ கடந்த கால வினாப்பத்திரங்களை விநியோகிக்கும் சேவை/ ஓ. பீ. ஏ. சீ/ நிறுவன களஞ்சியம்)

02. நூலகமானது டிஜிட்டல் பதாகைகளை மாணவர்களை தற்போதைய நடைமுறைகள், புதிய வருகைகள், தற்போதைய விடயங்கள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகள், மேலதிக புதிய தகவல்கள் மற்றும் சமீபத்திய தகவல்கள் ஆகியவற்றை பற்றி மாணவர்களை விழிப்படையச் செய்வதற்காக காட்சிப்படுத்தி வருகின்றது. அதன் மூலமாக மாணவர்கள் அன்றாட நாட்களுக்குரிய விடயங்களை கற்றுக் கொள்ளவும் மற்றும் தேடிக் கொள்ளவும் முடியும்.

04. நூலகம் நூலகங்களுக்கு இடையில் கடன் முறைமையை வழங்கி வருகின்றது.

05. நூலக வளாகத்தினுள் வை.ஃபை வசதியை நூலகம் வழங்கி வருகின்றது.

06. இலத்திரனியல் வடிவ வளங்களை இலகுவாக அணுகும் வகையில் கல்விசார் உத்தியோகத்த அங்கத்தவர்களுக்கு தொலைநிலை அணுகல் வசதிகளை வழங்கி வருகின்றது.

24. உடற்கல்வித் துறைப் பிரிவு

A. அறிமுகம்

உடற்கல்வி துறைப் பிரிவானது பல்வேறுபட்ட விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை பல்கலைக்கழக மாணவர் சமூகத்திற்கு வழங்கி வருகின்றது. இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் விளையாட்டு திறன்களை முன்னேற்றி மேம்படுத்துதல், அவர்களது குழு மற்றும் தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்குதல் மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைப்பாணிக்கு வழக்கப்படுத்தல் என்பன உடற்கல்வி துறைப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

B. அடைவுகள்

இத் துறைப் பிரிவின் மேற்கூறிய இலக்குகளை அடைவதற்காக, துறையானது ஏனைய வருடங்களில் பல செயற்பாடுகளையும் நிகழ்ச்சி திட்டங்களையும் ஒழுங்குபடுத்தி நடாத்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் கோவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக எந்தவொரு விளையாட்டுச் நெயற்பாடுகளையும் நடாத்த முடியாமல் காணப்பட்டது. எனினும் எமது மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கராத்தே & சதுரங்க (நிகழ்நிலை) வெற்றிக் கிண்ண போட்டிகளில் பங்குபற்றி உள்ளது.

2021 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான நிகழ்நிலை கராத்தே வெற்றிக் கிண்ண போட்டிகள்

2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வெற்றிக் கிண்ண் போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 01 ஆவது நிகழ்நிலை கராத்தே போட்டி கார்த்திகை மாதம் 18 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதி வரை நடைபெற்றது. இது இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தினால் தலைமை வகிக்கப்பட்டது (இ. ப. வி. ச).

இந்த வெற்றிக் கிண்ண போட்டியில் இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 07 ஆண் மற்றும் 04 பெண் விளையாட்டு வீரர்கள் பங்குபற்றி இருந்தனர்.

பெண்களுக்கான கராத்தே வெற்றிக் கிண்ண போட்டியில் “சிரேஷ்ட வருட பெண்கள் கராத்தே மட்டம் 04 பிரிவு” இல் இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் செல்வி. என். பீ. ஜயலத் (முகாமைத்துவ கற்கைகள் பீடம்) மாணவி தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார். எமது கராத்தே பெண்கள் அணி இந்த சுற்றுப் போட்டியில் 3 ஆவது வெற்றி நிலையை தக்க வைத்துக் கொண்டது.

2021 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான நிகழ்நிலை சதுரங்க வெற்றிக் கிண்ண போட்டிகள்

2021 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வெற்றிக் கிண்ண போட்டிகளில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை சதுரங்க கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 01 ஆவது நிகழ்நிலை சதுரங்க போட்டி 2021 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 06 ஆம் மற்றும் 07 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இந் நிகழ்வு 14 பல்கலைக்கழகத்தில் இருந்தும் 28 அணிகளின் (14 ஆண்கள் மற்றும் 14 பெண்கள்) பங்குபற்றலுடன் நடைபெற்றது. எமது பல்கலைக்கழக அணியினால் வெற்றியை சுவீகரிக்க முடியவில்லை. ஆனாலும், சிறந்த முறையில் செயற்பட்டு சிறப்பாக விளையாடி இருந்தனர்.

பல்கலைக்கழக விளையாட்டுக்களுக்கான சர்வதேச நாள் – 2021

சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டு நாள் உத்தியோக பூர்வமாக ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனத்தால் 2016 ஆம் ஆண்டில் இருந்து அங்கீகரிக்கப்பட்டது. இலங்கையில் இரண்டாவது முறையாக இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம் சர்வதேச

பல்கலைக்கழக விளையாட்டு நாளினை கொண்டாடுவதற்காக 2021 ஆண்டின் புரட்டாதி மாதம் 19 ஆம் & 20 ஆம் திகதிகளில் நிகழ்வொன்றினை நிகழ்நிலை மூலமாக நடாத்தியது.

இந் நிகழ்வானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சந்தன உடவத்த அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தினைப பிரதிநிதித்துவப்படுத்தி பல்கலைக்கழகத்தில் இருந்து 70 ஆண் மற்றும் பெண் பட்டதாரி மாணவர்கள் அங்கத்துவர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினர்.

பல்கலைக்கழகங்களில் உடற்கல்வி மற்றும் விளையாட்டு பற்றிய ஒரு அறிமுக நிகழ்வு முகாமைத்துவ கற்கைகள் பீடம், தொழில்நுட்ப பீடம் மற்றும் விவசாய பீடம் ஆகியவற்றின் முதலாம் வருட மாணவர்களுக்கு இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் நடாத்தப்பட்டது.

திரு. எம். வீ. எஸ். சுபஷான (முகாமைத்துவ கற்கைகள் பீடம்) மற்றும் செல்வி. ஈ. டபிள்யூ. எம். எம். விதாரனகே (தொழில்நுட்ப பீடம்) ஆகியோர் இல்கை தேசிய ஒலிம்பிக் சபைக் குழுவினால் நடாத்தப்பட்ட ஒலிம்பிக் கல்வி அமர்வில் பங்குபற்றி இருந்தனர்.

ஏனைய செய்திகள்

- உடற்கல்வித் துறைப் பிரிவின் பணிப்பாளர் ஆகிய திரு. எஸ். யூ. விஜேசிங்க இலங்கை பல்கலைக்கழகங்களுக்கான விளையாட்டு அமைப்பின் 2021 ஆம் ஆண்டுக்கான உபதலைவராக இ. ப. வி. அ இன் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டார்.
- திருமதி. எஸ் கே. ரணசிங்க - உடற்கல்வித் துறைப் பிரிவின் பயிற்றுவிப்பாளர் இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பெண்கள் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. ஏ. ரி. பீ. குமார - உடற்கல்வித் துறைப் பிரிவின் பயிற்றுவிப்பாளர் இலங்கை துடுப்பாட்டத்தின் நிகழ்நிலையில் 20 ஆம் திகதி வைகாசி மாதம் 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற 60 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குபற்றினார்.
- இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 2021 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ஆம் திகதி அன்று நடைபெற்றது அத்துடன் திரு. எஸ். ஜீ. எஸ். விக்ரமநாயக்க & திரு. ஏ. ரீ. பீ. குமார ஆகியோர் மேற்கூறப்பட்ட ஒன்றுகூடலில் பங்குபற்றியிருந்தனர்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இந்த ஆண்டில் நடாத்தப்பட்ட இரண்டு விளையாட்டு மற்றும் உடற்கல்விக்கான நிலைத்து நிற்றலை உறுதிப்படுத்தும் குழு ஒன்றுகூடலில் பங்குபற்றியிருந்தனர்.

C. தோல்விகளும் நியாயங்களும்

- கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காரணமாக 2021 ஆம் ஆண்டில் எந்தவொரு விளையாட்டு நிகழ்வுகளையும் பூரணமாக நடாத்த முடியவில்லை.
- பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான எந்த வித சுற்றுப் போட்டிகளையோ அல்லது அழைப்பின் பேரிலான சுற்றுப் போட்டிகளையோ ஒழுங்குபடுத்தப்பட முடியவில்லை.
- இவ் வருடமும் ஜிம்னாசியத்தின் கட்டம் iiஐ இனைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனமை.

D. எதிர்காலத் திட்டங்கள்

- 2022 ஆம் ஆண்டில், இரண்டு உள்ளக சுற்றுப் போட்டிகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது
- 2022 ஆம் ஆண்டில், ஜிம்னாசியத்தின் கட்டம் iii இனைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

25. தொழில் வழிகாட்டல் அலகு

A. அறிமுகம்

பணிப்பாளர்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ஐ , கலாநிதி (செல்வி). எச். ஓ. விஜேவர்த்தன

தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள்

திருமதி. ஏ. மங்கலிக்கா திஸ்ஸாநாயக்க – AS 2 (II)
திரு. ஜே. டீ. ரத்னாயக்க – AS 2 (II)

தொழில் வழிகாட்டல் ஒருங்கிணைப்பாளர்கள்

தொழில் வழிகாட்டல் அலகு மற்றும் பீடங்கள் ஆகியவற்றுக்கு இடையே தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக ஐந்து தொழில் வழிகாட்டல் ஒருங்கிணைப்பாளர்கள் ஒவ்வொரு பீடத்தில் இருந்தும் நியமிக்கப்பட்டு உள்ளனர். தொழில் வழிகாட்டல் அலகில் ஒரு முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக வேலை உதவியாளர் ஆகியோர்கள் அலகின் உதவி உத்தியோகத்தர்களாக காணப்படுகின்றனர்.

B. அடைவுகள்

01. "கனிமடல" எனும் தலைப்பில் தொழிற்பட்டறை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகினால் "கனிமடல" எனும் தலைப்பில் தொழிற்பட்டறை ஒன்று இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களுக்காக 2021 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் 19 ஆம், 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 12.00 மணி வரை அலுவலர் விருத்தி நிலையத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இவ் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களாகிய திருமதி. ஏ. எம். திஸாநாயக்க மற்றும் திரு ஜே. டீ. ரத்னாயக்க ஆகியோர்களினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

02. "தொழிற்துறை சிறப்பு வல்லுநர்" எனும் தலைப்பில் நிகழ்நிலைக் கருத்தரங்கு

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகினால் 20 நிகழ்நிலைக் கருத்தரங்குகள் (காணொளி மாநாட்டுத் தளத்தின் மூலமாக) வெவ்வேறு தொழிற்துறை நிறுனங்களில் இருந்து சிறப்பு வல்லுநர்களை கொண்டு வந்து வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

03. "பட்டதாரி மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள்" எனும் தலைப்பில் நிகழ்ச்சித் திட்டங்கள்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகினால் "பட்டதாரி மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன்கள்" என்பது தொடர்பாக 10 நிகழ்ச்சித் திட்டங்கள் காணொளி மாநாடு மூலமாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. அத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் திருமதி. ஏ. எம். திஸாநாயக்க அவர்களினால் நடாத்தப்பட்டது.

04. "கற்றல் திறன்கள்" எனும் தலைப்பில் நிகழ்வு

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு ஆனது முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் பட்டதாரி மாணவர்களுக்கு "கற்றல் திறன்கள்" எனும் தலைப்பில் இரு நிகழ்ச்சித் திட்டங்களை காணொளி மாநாடு மூலமாக வெற்றிகரமாக நடாத்தியது. இவ் அலகின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திரு ஜாலிய ரத்னாயக்க அவர்களினால் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது.

05. சமூக கழகங்களை ஆரம்பித்து வைத்தல்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களுக்காக இரு சமூக கழகங்களை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துள்ளது. காவேல் கழகம் ஆனது பட்டதாரி மாணவர்களின் பொதுப் பேச்சுத் திறன்களை வளர்க்கும் நோக்குடன் ஆரம்பித்து

வைக்கப்பட்டது. நோட்டாரக் கழகம் ஆனது பட்டதாரி மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களை வளர்ப்பதற்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

06. தொழில் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகின் தொழில் ஆலோசகர்கள் விவசாய பீடத்தின் தொழில் விருத்தி கற்கை பாடத் தொகுதிகளில் 3 நிகழ்ச்சிகளை காணொளி மாநாட்டின் மூலமாக நடாத்தினர்.

07. தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளின் சுருக்கம் - 2021

நிகழ்வுகள்	நிகழ்வுகளின் எண்ணிக்கை
விடுதி நிகழ்வுகள் (வாழ்க்கைக்கான திறன் / திருமண வாழ்க்கைக்கான திறன்)	10
சுய விபரக் கோவை எழுதுதல் மற்றும் நேர்முகத் தேர்வை எதிர் கொள்ளல்	03
தொழில் துறை வல்லுநர்களின் இணைய வழிக் கருத்தரங்குகள்	20
தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு நிகழ்வுகள்	07
கற்றல் தொழில்நுட்பங்கள் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள்	02
கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கு தொழில் - வாழ்க்கை சமநிலை நிகழ்ச்சி	03
சமூக கழகங்களின் கூட்டங்கள்	07
ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்	14
தொழில் ஆலோசனைகள் மற்றும் ஆலோசனை அமர்வுகள்	538

08. தனிநபர்/ தொழில் வழிகாட்டல் ஆலோசனை அமர்வுகள் மற்றும் ஆலோசனை அமர்வுகள் தொடர்பான விபரங்கள்

	மாணவர்கள்	தொலைபேசி ஊடாக மாணவர்கள்	ஏனையவர்கள்	மொத்தம்
தை	02	10	04	16
மாசி	03	11	03	17
பங்குனி	01	22	05	28
சித்திரை	-	25	11	36
வைகாசி	-	27	05	32
ஆனி	-	34	01	35
ஆடி	-	31	17	48
ஆவணி	01	59	20	80
புரட்டாதி	-	64	26	90
ஐப்பசி	-	31	18	49
கார்த்திகை	-	51	09	60
மார்கழி	03	30	14	47
மொத்தம்				**538**

C. தோல்விகளும் நியாயங்களும்

நாட்டின் நொய்த் தொற்று நிலைக் காலக்கேடு சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டு இருந்தது. அனைத்து திறன் விருத்தி தொழிற் பயிற்சிகள் மற்றும் தொழிற் பட்டறைகள் மற்றும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன திட்டமிட்ட வகையில் நடாத்தப்பட முடியாமல்

போனது அத்துடன் தொழில் வழிகாட்டல் அலகின் அனைத்துச் சேவைகளும் காணொளி மாநாடு மற்றும் தொலைபேசி தொடர்பாடல்களிள் மூலமாக நடாத்தப்பட்டன.

D. தொழில் வழிகாட்டல் எதிர்காலத் திட்டங்கள் - 2022

தொடர் இல	நிகழ்வின் பெயர்	நிகழ்வு விபரம்	தினங்கள்
01	விடுதி நிகழ்ச்சி பட்டதாரி - "மாணவர்களுக்கான வாழ்க்கை திறன்"	மென்திறன் மற்றும் ஆளுமை விருத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான – 20 நிகழ்வுகள்	வருடம் முழுவதும்
02	நாடக மருத்துவ தொழிற் பட்டறைகள்	முன்வைக்கும் திறன் விருத்தி மற்றும் மன அழுத்தத்தில் இருந்து விடுபடல் - 03	புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை 2022
03	தனியான தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்	தொழில் வழிகாட்டல் தீர்வுகளை மாற்றி அமைத்து வழங்குதல்	வருடம் முழுவதும்
04	மென்திறன்கள் விருத்தி தொழிற்பயிற்சி	மென்திறன் விருத்தி - 04	மாசி, பங்குனி, வைகாசி, ஆவணி 2022
05	தொழிற்துறை நிபுணர்களின் இணைய வழி கருத்தரங்கு தொடர்கள்	தொழில்துறைக்கு வெளிப்படுத்தல்	வருடம் முழுவதும்
06	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	தை, 2022
07	முகாமைத்துவ கற்கைகள் பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	பங்குனி, 2022
08	பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	வைகாசி, 2022
09	விவசாய பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	கார்த்திகை, 2022

10	தொழில்நுட்ப பீடத்துக்கான நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளல், சுய விபரக் கோவை மற்றும் தொழில் விண்ணப்பங்களுக்கான சுய குறிப்பு என்பவற்றை எழுதுதல்	இறுதி வருட மாணவர்களின் நேர்முகத் தேர்வுக்கான திறன்களை மேம்படுத்தல்	ஆவணி, 2022
11	விவசாய பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	தை, 2022
12	தொழில்நுட்ப பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	பங்குனி, 2022
13	பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	வைகாசி, 2022
14	முகாமைத்துவ கற்கைகள் பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	ஆடி, 2022
15	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்துக்கான பேச்சு வன்மை நிகழ்வு	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	ஐப்பசி, 2022
16	விவசாய பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	தனிநபர் ஆளுமை விருத்தி	கார்த்திகை, 2022
17	தொழில்நுட்ப பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	தனிநபர் ஆளுமை விருத்தி	ஆவணி, 2022
18	பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	தனிநபர் ஆளுமை விருத்தி	ஆடி, 2022
19	முகாமைத்துவ கற்கைகள் பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	தனிநபர் ஆளுமை விருத்தி	வைகாசி, 2022
20	சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்துக்கான ஆளுமை விருத்தி நிகழ்வு	தனிநபர் ஆளுமை விருத்தி	மாசி, 2022
21	தொழில் வாண்மை மற்றும் தொழில் முயற்சியாண்மை திறன்களை விருத்தி செய்கின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்	தொழில் முயற்சியாண்மை திறன்களை விருத்தி செய்தல் - 06 நிகழ்ச்சித் திட்டங்கள்	தை, பங்குனி, ஆனி, ஆவணி, ஐப்பசி, மார்கழி 2022
22	தொ. வ. அ. தொழில் வலைத்தள விருத்தி மற்றும் தொழிற்பாடு	தொழில் வழிகாட்டல் தொடர்பான தகவல் பரிமாற்றம்	வருடம் முழுவதும்
23	தொ. வ. அ இனால் நடாத்தப்பட்ட கற்கை நெறிகள்	தொழில் வழிகாட்டல் அறிவு மற்றும் திறன் விருத்தி	வருடம் முழுவதும்
24	காவேல் கழகம்	பொதுப் பேச்சுத் திறன் விருத்தி	வருடம் முழுவதும்
25	றோட்டராக் கழகம்	தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்தல்	வருடம் முழுவதும்
26	எ.ஃப். ஓ. எஸ். எஸ் கழகம்	தொழில்நுட்ப எழுத்தறிவை விருத்தி செய்தல்	வருடம் முழுவதும்
27	ஏ. ஐ. ஈ. எஸ். ஏ. சீ. கழகம்	தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்தல்	வருடம் முழுவதும்

26. தொலை மற்றும் தொடர் கல்விக்கான நிலையம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம் மிஹிந்தலையிலே இலங்கையின் புராதன தலைநகரமான அநுராதபுரத்தின் கிழக்குப் பகுதியல் இருந்து கிட்டத்தட்ட 20 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இப் பல்கலைக்கழகம் விவசாய பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், முகாமைத்துவ கற்கைகள் பீடம், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீடம், சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகிய பெயர்களில் ஆறு பீடங்களைக் கொண்டுள்ளது. விவசாய பீடம் புளியங்குளத்திலும் மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞான பீடம் சாலியபுரவிலும் அமைந்திருப்பதுடன் ஏனைய பீடங்கள், அலகுகள் மற்றும் நிலையங்கள் என்பன மிஹிந்தலையில் உள்ள பிரதான வளாகத்தில் அமைந்துள்ளது. கற்றல் வாய்ப்புக்களை அளிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப. மா. ஆ) மற்றும் உயர்கல்வி அமைச்சு என்பன ஏற்ப பரந்த அளவிலான மாணவர்களுக்கு வெளிவாரிக் கற்கை நெறிகள் மூலமாக திறமையுள்ள, அறிவு பூர்வமான மற்றும் தொழில் புரியக்கூடிய பட்டதாரிகள், டிப்ளோமாதாரர்கள் மற்றும் சான்றிதழ் கற்கை நெறிதாரர்கள் ஆகியோர்களை உருவாக்கும் நோக்குடன் குறிப்பட்ட வழிகாட்டல்களை தயாரித்து உள்ளது. பல்கலைக்கழகங்கள் வெளிவாரிக் கற்கை நெறிகளை வினைத்திறனாக மற்றும் விளைதிறனாகவும் கையாளுவதற்காக ஒரு தனியான நிர்வாக கட்டமைப்பை நிறுவுமாறு கோரப்பட்டுள்ளன, இது கற்கைத்துறைப் பிரிவுகள் மற்றும் பீடங்கள் ஆகியவற்றின் வேலைச்சுமையை குறைக்கின்றது. வெவ்வேறான பீடங்கள் வெளிவாரிக் கற்கை நெறிகள் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறிகளை சான்றிதழ் மற்றும் டிப்ளோமா மட்டங்களில் வழங்கி வருகின்றன.

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக தொலை மற்றும் தொடர் கல்வி நிலையம் (தொ. தொ. க. நி) ஆனது வெளிவாரி கற்கை நெறிகளுக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக தாபிக்கப்பட்ட சுயாதீன நிர்வாக அமைப்பாகும். தொ. தொ. க. நி ஆனது பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்துடன் ப.மா.ஆ இன் 932 ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கு இணங்க (155 ஆவது பேரவைக் கூட்டம்) 24 ஆம் திகதி ஐப்பசி 2011 அன்று தாபிக்கப்பட்டது. தொ.தொ.க.நி ஆனது அன்று முதல் 31ஆம் திகதி பங்குனி 2014 வரை பிரயோக விஞ்ஞான பீடத்தில் தொழிற்பட்டு வந்தது. 01ஆம் திகதி சித்திரை 2014 இலிருந்து தொ. தொ. க. நி ஆனது பிரதான நிர்வாக கட்டட வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

தொ. தொ. க. நி இன் தூர நோக்கு


"தொலை மற்றும் தொடர் கல்வியில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நிலையமாக விளங்குதல்"

தொ. தொ. க. நி இன் பணிக் கூற்று

"அனைத்து வயது தரப்பிலும் உள்ள புலமைதாரர்களின் உயரிய கேள்தகவு உடைய உயர்கல்வி கற்கை நெறிகளை அணுக வழிசெய்தல் மற்றும் அறிவு பூர்வமாக தூண்டும் கல்விச் சூழலில் தொழில் முன்னேற்றத்துக்காக உயர்கல்வியை தேடுகின்ற பயிலுனர்களின் தேவைகளை வழங்குதல் என்பவற்றின் ஊடாக அறிவு பூர்வமான சமூகம் ஒன்றின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்"

ப.மா.ஆ இன் வழிகாட்டல்களுக்கு அமைவான தொ.தொ.க.நி இன் நிர்வாக கட்டமைப்பு ஆனது கீழே தரப்பட்டுள்ளது.

தொ.தொ.க.நி இன் நிர்வாக கட்டமைப்பு



*எதிர்வரும் காலத்தில் இந்த பதவிகள் தொ.தொ.க.நி இன் மேலான விரிவாக்கத்தின் போது நிரப்பப்படும்.

2. தொ.தொ.க.நி இன் முகாமைத்துவக் குழு

2021 ஆம் ஆண்டில் இரண்டு முகாமைத்துவக் குழு கூட்டங்கள் பின்வரும் திகதிகளில் நடைபெற்றன.

1. 33ஆம் முகாமைத்துவக் குழு கூட்டம் 23.02.2021 அன்று நடைபெற்றது.
2. 34ஆம் முகாமைத்துவக் குழு கூட்டம் 18.08.2021 அன்று நடைபெற்றது.

3. தற்போது உள்ள கற்கை நெறிகள்

தொ இல	கற்கை நெறி
01	விஞ்ஞான இளமாணி (உயிரியல் விஞ்ஞானம்) வெளிவாரிப் பட்ட கற்கை நெறி
02	விஞ்ஞான இளமாணி (பௌதிக விஞ்ஞானம்) வெளிவாரிப் பட்ட கற்கை நெறி
03	வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரிப் பட்ட கற்கை நெறி
04	ஆங்கில மொழி டிப்ளோமா (விரிவாக்கல்) கற்கை நெறி
05	உயர்மட்ட ஆங்கில மொழி சான்றிதழ் (விரிவாக்கல்) கற்கை நெறி
06	தமிழ் மொழி டிப்ளோமா (விரிவாக்கல்) கற்கை நெறி
07	தமிழ் மொழி சான்றிதழ் (விரிவாக்கல்) கற்கை நெறி
08	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா (விரிவாக்கல்) கற்கை நெறி
09	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் (விரிவாக்கல்) கற்கை நெறி
10	சூழல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா (விரிவாக்கல்) கற்கை நெறி

B. அடைவுகள்

- **தொ. தொ. க. நி இற்கான புதிய கட்டடத் தொகுதி**
  தொ.தொ.க.நி இற்கான புதிய கட்டடத் தொகுதி ஆனது அநுராதபுர நகரில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

- **பொலன்னறுவையில் கற்கை நிலையத்துக்கான நிலத் தொகுதி**
  பொலன்னறுவையில் கற்கை நிலையத்தை அமைப்பதற்காக ரஜரட்ட பல்கலைக்கழகத்துக்கு பொலன்னறுவையில் உள்ள புதிய நிலப் பகுதி கையளிக்கப்பட்டது.

- **தொ. தொ. க. நி இற்கான வலைத்தளம்**
  தொ.தொ.க.நி இற்கான வலைத்தளமானது உருவாக்கப்பட்டு வருகின்றதுடன் 2021 ஆம் ஆண்டின் முறபகுதியில் ஆரம்பித்து வைப்பதற்கு திட்டம் இடப்பட்டு உள்ளது.

- **வெளிவாரிக் கற்கை நெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட்டமை**
  வெளிவாரிக் கற்கை நெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகளை கோவிட் 19 நோய்த்தொற்று நிலையில் கூட கால தாமதம் இன்றி வெளியிட்டு உள்ளது.

- **வெளிவாரிக் கற்கை நெறிகளை நடாத்துதல்**
  கோவிட் 19 நோய்த்தொற்று நிலையில் பெரும்பாலான வெளிவாரிக் கற்கை நெறிகள் இணைய வழிமூலமாக நடாத்தப்பட்டது.

- **தொ. தொ. க. நி இற்கான புதிய கட்டடத் தொகுதி**
  தொ. தொ. க. நி இற்கான புதிய கட்டடத் தொகுதி அநுராதபுர நகரில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

- **பொலன்னறுவையில் கற்கை நிலையத்துக்கான நிலம்**
  தொ. தொ. க. நி இன் கற்கை நிலையத்தை பொலன்னறுவையில் அமைப்பதற்காக பொலன்னறுவைப் பிரதேசத்தில் புதிய நிலத் தொகுதி ஆனது இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கப்பட்டு உள்ளது.

- **தொ. தொ. க. நி இற்கான வலைத் தளம்**
  தொ. தொ. க. நி இற்கான புதிய வலைத் தளம் அமைக்கப்பட்டது.

- **வெளிவாரிக் கற்கை நெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன**
  வெளிவாரிப் பட்ட கற்கை நெறிகள் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறிகள் ஆகியவற்றின் அனைத்துப் பரீட்சைப் பெறுபேறுகளும் கோவிட் 19 நோய் தொற்று நிலைமைக் காலக்கேடான சூழ்நிலையின் போதும் கூட அதிக காலதாமதம் இன்றி வெளியிடப்பட்டன.

- **வெளிவாரிக் கற்கை நெறிகள் நடாத்தப்பட்டன**
  பெரும்பாலான வெளிவாரிக் கற்கை நெறிகள் கோவிட் 19 நோய் தொற்று நிலைமைக் காலக்கேடான சூழ்நிலையின் போதும் கூட இணைய வழி மூலமாக நடாத்தப்பட்டன

C. 2021 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

- கோவிட் 19 நோய்த்தொற்று நிலை காரணமாக வெளிவாரிக் கற்கை நெறிகளை கொண்டு நடாத்துவதில் மெதுவான போக்கு காணப்பட்டது.
- தொ. தொ. க. நி இன் திறனான தொழிற்பாட்டுக்கு தேவையான பௌதிக மற்றும் மனித வளங்கள் போதாமை. ப.மா.ஆ வின் 932 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட பதவிகளின் அடிப்படையில் நிர்வாக, நிதி, செயலக மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை கொண்டிராமை.
- சுயமாக வினைத்திறனான மற்றும் உற்பத்தி வாய்ந்த ஒரு நிலையமாக செயற்படுவதில் உள்ள தடைகள்.
- பிற கற்கை நிலையங்களினால் ஏற்படுத்தப்படும் சவால்கள்.
- தொ.தொ.க.நி, கற்கை சபை மற்றும் கற்கை நெறிக்கான ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு இடையில் உன்னத ஒருங்கிணைப்பு இன்மையால் ஏற்படும் சவால்கள்.

D. எதிர்காலத் திட்டங்கள்

- ப. மா. ஆ இன் தர உத்தரவாத அலகின் கீழான வெளிவாரிக் கற்கை நெறிகளுக்கான கற்கை நெறி மீளாய்வை மேற்கொள்ளல்
- கற்கை நெறிகளுக்கு வசதிப்படுத்தும் வகையில் நன்றாக தொழிற்படும் பூரண நிர்வாக அலகாக தொ.தொ.க.நி இனை விரிவுபடுத்தல்.
- வெளிவாரிக் கற்கை நெறிகளின் பாடவிதானங்களை மீளாய்வு செய்தல்
- விரிவுரை மண்டபங்கள் மற்றும் வெளியக கற்கை நிலையங்கள் என்பவற்றின் வசதிகளை மேம்படுத்தல்.
- தொ.தொ.க.நி இற்கான தரவுத்தள முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல்
- தொ.தொ.க.நி, கற்கை சபை மற்றும் கற்கை நெறிக்கான ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்கு இடையில் ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தல்.
- தொ.தொ.க.நி இனால் ஈட்டப்பட்ட பணத்தை வினைத்திறனன மற்றும் உற்பத்தி வாய்ந்த முறையில் பயன்படுத்தல்.
- தொ.தொ.க.நி இன் மாணவர் வழிகாட்டி கையேட்டினை மேம்படுத்தல்.
- தொ.தொ.க.நி அலுவலர்களுக்கான (நிர்வாக & முகாமைத்துவ உதவியாளர்) பயிற்சிப் பட்டறை நிகழ்வை நடாத்துதல்.

27. அலுவலர் அபிவிருத்தி நிலையம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் அலுவர் அபிவிருத்தி நிலையம் (அ. அ. நி) ஆனது ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் அனைத்து வகையான உத்தியோகத்தர்களின் திறமைகளை விருத்தி செய்தல் மற்றும் தொழில் விருத்தியை அதிகரரித்தல் ஆகிய நோக்கங்களோடு 2005 ஆம் ஆண்டில் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டது. அ. அ. நி இன் பிரதான இலக்கு பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்க, மிகப் பொருத்தமான, மாணவர் மையப்படுத்தப்பட்டதாக அமைத்தல் மற்றும் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு புத்தாக்க கற்பித்தல் முறைகள் தொடர்பாக சர்வதேச தரத்தை எட்டும் நோக்கத்தோடு தொழிற்பயிற்சியை வழங்குவதற்கு விசேட அழுத்தம் கொடுத்தல் என்பதாகும். இவற்றுக்கு மேலாக அ. அ. நி ஆனது பல்கலைக்கழகததின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கு இடையிலும் வித்திறன் மற்றும் விளைதிறன் மிக்க செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான திறமைகள் மற்றும் திறன்களை விருத்தி செய்தலை மேம்படுத்துதலில் ஈடுபட்டு உள்ளது.

தூர நோக்கு

அலுவர் அபிவிருத்தி நிலையத்தின் தூரநோக்கு தொழில்சார் அபிவிருத்தியின் உன்னத மையமாக இருத்தல் ஆகும்.

பணிக் கூற்று

ஈடுபாடு மிக்க, ஊக்கமுள்ள மற்றும் திறன்மிக்க தொழில்வாண்மையாளர்களாக வருவதற்கு உத்தியோகத்தர்களுக்கு முறையான தொழிற்பயிற்சிகளை வழங்குதல் மற்றும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் என்பது அலுவர் அபிவிருத்தி நிலையத்தின் பணிக் கூற்று ஆகும்.

இலக்கு

பல்கலைக்கழத்தினுள் அனைத்து வகையான உத்தியோகத்தர்களினதும் தேவைசார் கற்றல் மற்றும் தொழில்வாண்மை விருத்திக்கான சந்தர்ப்பங்களை தொடர்ச்சியாக வழங்குதல்.

நிலைய உத்தியோகத்தர்கள்

- கலாநிதி லலித் சேனாரத்ன – பணிப்பாளர்
- செல்வி. ஏ. ஜீ. எஸ். என். அபேக்கோன் - தற்காலிக செய்முறைப் பயிற்றுவிப்பாளர்
- திருமதி. கே. எம். எஸ். கே. சமரக்கோன் - முகாமைத்துவ உதவியாளர்
- திரு. டீ. எஸ். ரத்னசூரிய – அலுவலக உதவியாளர்

B. அடைவுகள்

<u>பூர்த்தியடைந்த நிகழ்ச்சித் திட்டங்கள்</u>

a) <u>உயர்கல்வி கற்பித்தலுக்கான சான்றிதழ் (உ. க. க. சா)</u>

கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான அலுவர் அபிவிருத்தி நிலையம் வருடாந்தம் பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான நிகழ்சசியை வழங்கி வருகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பயிற்சிநெறி கைந்நூலினை அடிப்படையாகக் கொண்டு இந் நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இப் பயிற்சி நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்கையில் பங்குபற்றுனர்களுக்கு உயர்கல்வி கற்பித்தலுக்கான சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இந்த முன்மொழியப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் எட்டு பிரதான பகுதிகளை பூர்த்தி செய்யும் வகையில் தனித்தனியான பிரிவுகளில் ஒழுங்குபடுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டம் சித்திரை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆவணி மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டது. முப்பது (30) பங்குபற்றுனர்கள் பதிவு செய்யப்பட்டு இப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளனர். இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தில் இருந்து 26 பங்குபற்றுனர்களும் இலங்கை பிக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து

மூன்று பங்குபற்றுனர்களும் மற்றும் ஐ. டீ. எம் சர்வதேச பல்கலைக்கழகத்தில் இருந்தும் பங்குபற்றியிருந்தனர்.

b) கணிமடல நிகழ்ச்சித் திட்டம்

அ. அ. நி ஆனது பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் அலகுடன் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்காக தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் அவர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்காக ஒரு பயிற்சி நெறியை நடாத்தியது.

இந்த பயிற்சி நெறியானது பங்குனி மாதம் 29 ஆம், 30 ஆம் & 31 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன் 63 உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

c) கற்கைத் துறைப் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கான தொழிற் பயிற்சி

அ. அ. நி. ஆனது பல்கலைக்கழக நிதியியல் மற்றும் நிர்வாக செய்முறைகள் தொடர்பாக நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் கற்கைத் துறைப் பிரிவுகளின் தலைவர்கள் ஆகியோர்களுக்கான தொழிற் பயிற்சி ஒன்றினை அறிமுகப்படுத்தியது. இந்த தொழிற் பயிற்சி 8 தொகுதி அமர்வுகளைக் கொண்டதுடன் ஐந்து வாரங்களில் வாரம் ஒன்றுக்கு ஒரு நாள் வீதம் நடாத்தபட்ட ஐந்து நாள் தொழிற் பயிற்சி ஒன்றாகும். 2021 ஆம் ஆண்டில், கார்த்திகை மாதத்தில் இந்த தொழிற் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது மற்றும் 35 உத்தியோகத்தர்கள் இந்த தொழிற் பயிற்சியில் பங்கு பற்றினார்கள். இந்த தொழிற் பயிற்சியை வருடாந்த தொழிற் பயிற்சியாக தொடர்ந்து நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

d) சாரதிகளுக்கான தொழிற்பட்டறை

இத் தொழிற்பட்டறையானது பிரதானமாக இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற சாரதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் பிரதான நோக்கமானது பங்குபற்றுனர்களை தொழில்சார் சாரதிகளாக பயிற்றுவிப்பதாகும். 2021 ஆம் ஆண்டின் தை மாதம் 06 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன் 21 பங்குபற்றுனர்கள் பங்குபற்றியிருந்தனர்.

C. தோல்விகளும் நியாயங்களும்

- நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் நிறைவு செய்வதில் கால தாமதம் ஏற்பட்டமை – விஷேடமாக கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான அறிமுக தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் பயணக் கட்டுப்பாடு மற்றும் காலக்கேடு காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டமை
- காலக்கேடு காரணமாக தொழிற் பயிற்சி நெறிகளுக்கான வளவாளர்களை கொண்டு வருவதற்கு கடினமாக இருந்தமை ஒரு சவாலாகக் காணப்பட்டது. திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் சில இதன் காரணமாக நடாத்தப்பட முடியவில்லை.

D. எதிர்காலத் திட்டங்கள்

கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக இரண்டு வருடாந்த தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்.

அடுத்த வருடத்துக்குள் அனைத்துப் பிரிவு உத்தியோகத்தர்களையும் கருத்திற் கொண்டு அதிகமான தொழிற் பயிற்சிகளை நடாத்துதல்

எதிர்காலத்தின் உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி செயற்பாடுகளை நடாத்துவதற்காக வருமானத்தை திரட்டக்கூடிய வகையில் ஏனைய பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்களையும் அனுமதிக்கக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல்

28. தகவல் தொடர்பாடல் நிலையம்

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பாடல் நிலையமானது பட்டதாரி மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தும் நோக்கோடு 1996 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோதே நிறுவப்பட்டது. இந்நிலையமானது நேரடியாக உபவேந்தரால் நிர்வகிக்கப்படுவதோடு, இதன் தொழிற்பாடுகள் உபவேந்தரால் நியமிக்கப்பட்ட நிலையத்தின் தலைவரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் நிலையமானது முகாமைத்துவ கற்கைகள் பீடத்தினதும் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடத்தினதும் மாணவர்களுக்காக அடிப்படை கணினி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஆரம்பத்தில் முதன்மையாகக் கொண்டிருந்தது. பல்கலைக்கழகம் விரிவுபடுத்தப்பட்டது போலவே, இத் தகவல் தொடர்பாடல் நிலையமானது பல்கலைக்கழகத்திற்குரிய முதன்மையான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை வழங்குனராகும். நிலையம் ஆரம்ப காலத்திலிருந்தே விரிவுபடுத்தப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாகப் பழுவைக் குறைப்பதற்காக, பல்கலைக்கழக பேரவையால் கல்வி மற்றும் நிர்வாக விடயங்களை பார்ப்பதற்காக பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சிறந்த அறிவுடைய ஒரு கல்விசார் அங்கத்தவர் ஆவார். பணிப்பாளரின் பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும்.

இந் நிலையம் வார நாட்களில் மு. ப 8.00 மணி முதல் பி. ப 6.00 மணி வரையும் சனிக் கிழமைகளில் மு. ப 8.00 மணி முதல் பி. ப 4.00 மணி வரையும் திறந்திருக்கும். சாதாரணமாக திறக்கும் நேரங்கள் தவிர உபவேந்தரின் அனுமதியுடனான விசேட வேண்டுகோள்களின் பொருட்டும் பரீட்சை விடுமுறைக் காலங்களிலும் பரீட்சை காலங்களிலும் நிலையமானது பி. ப 8.00 மணி வரையும் திறந்திருக்கும். தகவல் தொடர்பாடல் நிலையத்தின் அலுவலர்களாக ஒரு கணினி தொழில்நுட்ப போதனாசிரியர், ஒரு கணினிப் பொறிமுறை பகுப்பாய்வாளர், ஒரு உதவி வலையமைப்பு முகாமையாளர், ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒரு ஆய்வுகூட உதவியாளர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

B. 2021 ஆம் வருடத்தின் அடைவுகள்

தகவல் தொடர்பாடல் நிலையம் மிஹிந்தலை வளாகத்தில் உள்ள பீடங்களினது இவ் வருடத்தின் அனைத்து கல்விசார் நடவடிக்கைகளுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக அமைந்தது.

1. இணைய வழங்கி அறையை நிர்வாகக் கட்டடத் தொகுதியில் இருந்து தற்போது ஸ்தாபிக்கப்பட்ட தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்திற்கு மாற்றி அமைப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது.
2. த. தொ. நிலையத்துக்கான தனியான நுழைவாயில் அமைக்கப்பட்டது.
3. பல்கலைக்கழகத்துக்கான புதிய வலைத்தளம் உருவாக்கப்பட்டது.
4. மாணவர் விடுதிகளின் 90% பகுதிகளின் வை - ∴பை வசதிகள் வழங்கப்பட்டு இருக்கின்றது.

C. எதிர்காலத் திட்டங்கள்

பல்கலைக்கழகத்தின் மற்றைய இடங்களுக்கும் இணைய வசதியை ஏற்படுத்திக் கொள்ளல்

29. தர உத்தரவாதத்துக்கான நிலையம்

A. அறிமுகம்

உள்ளக தர உத்தரவாதம் (உ. த. உ) ஆனது தர உத்தரவாத நிலையம் (த. உ. நி) மற்றும் உள்ளக தர உத்தரவாத அலகு (உ. த. உ. அ) ஆகியவற்றின் கீழ் வினைத்திறனாக்கப்படுகின்றடன் உ. த. உ. கையேட்டிற்கு (2013) அமைய உ. த. உ செயற்பாடுகளுக்கான துணைச் சட்டங்களினால் வழிப்படுத்தப்படுகின்றது. உ. த. உ. நி ஆனது தரத்தினை மேம்படுத்தும் பார்வையுடன் சாத்தியம் உடைய அனைத்து செயற்பாடுகளின் ஊடாக அதன் தொழிற்பாட்டை விரிவுபடுத்துகின்றது. ஒவ்வொரு செயற்பாடும் உ. த. உ. அ இன் அங்கத்தவர் ஒருவரின் பொறுப்பாகக் காணப்படுகின்றது. அத்துடன் அவள்/ அவன் பீடம் அல்லது தொ. தொ. க. நி இனால் நியமிக்கப்பட்ட சபை வேலைக் குழு ஒன்றுடன் இணைந்து உ. த. உ இன் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள பல உத்தியோகத்தர்களை உள்ளடக்குவதுடன் மிக வினைத்திறனாகவும் செயற்படும் வகையில் தொழிற்பாடுகளை செய்ய வேண்டும். த. உ. நி ஆனது தர உத்தரவாதம் மற்றும் விரிவாக்கல் கொள்கை, பாடவிதான விருத்திக் கொள்கை, மனித வள விருத்திக் கொள்கை, மாணவர் மதிப்பீட்டுக் கொள்கை போன்ற பல்வேறு கொள்கை ஆவணங்களை தயாரிப்பதில் தலைமை வகித்து வருகின்றது. இது ஏனைய பல கொள்கை ஆவணங்களையும் தயாரித்து வருகின்றது. த. உ. நி ஆனது வெளியக தர உத்தரவாத (வெ. த. உ) செய்முறைகளுக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. பீடங்களின் உ. த. உ. இற்கு த. உ. நி இன் பீட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பீடங்களின் பீடாதிபதிகள் ஆகியோர் பொறுப்பாகக் காணப்படுகின்றனர். பீடாதிபதிக்குப் பதிலாக தொ. தொ. க. நி. இன் பணிப்பாளரைக் கொண்ட தொ. தொ. க. நி இன் உ. த. உ. நிலையமும் அவ்வாறே தொழிற்படுகின்றது. முகாமைத்துவக் குழுவானது உபவேந்தரினால் தலைமைப்படுத்தப்படுகின்ற த. உ. நி இன் மூதவைக்குரிய நீடித்து நிற்கும் குழுவாக மாற்றப்பட்டது. உ. த. நி இன் செயற்பாடுகள் மூதவையின் ஒரு தனியான ஒரு தலைப்பாக காணப்படுவதுடன் இது பல்கலைக்கழகத்தின் நிலையம் மற்றும் அலகுகளின் கீழ் ஆவணப்படுத்தப்படுகின்றது.

B. அடைவுகள்

ப.மா.ஆ இன் த .உ. அ இனால் நடாத்தப்பட்ட கற்கைநெறி மீளாய்வுக்காக பெறப்பட்ட தரங்கள் பின்வருமாறு:

மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி பட்டம் (எம். பி.பி. எஸ்) - B தரம் (நன்று)
விவசாய இளமாணிப் பட்டம் - B தரம் (நன்று)

த. உ. அ இன் வெளியக மீள்பார்வைக்காக சுய மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது

நி. மீ / க. நெ. மீ.	கற்கை நெறி/ தொகுதியின் பெயர்	சு. ம. அ. சமர்ப்பிக்கப்பட்ட திகதி
க. நெ. மீ.	வியாபார நிர்வாக இளமாணி (பொது) வெளிவாரி பட்டம், 2021	31.01.2022
க. நெ. மீ.	**உயிரியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டம்**, 2021	31.01.2022
க. நெ. மீ.	**பௌதிக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டம்**, 2021	31.01.2022

C. தோல்விகளும் நியாயங்களும்

பௌதிகமாக நடாத்த திட்டமிடப்பட்ட அனைத்துக் கூட்டங்கள், தொழிற்பட்டறைகள் மற்றும் தொழிற் பயிற்சி நெறிகள் கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காரணமாக நிறுத்திவைக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டுக்கான பிரயோக விஞ்ஞான கற்கை நெறிகளின் மீள்பார்வைக்காக திட்டமிடப்பட்ட வருகை ஆனது கோவிட் 19 நோய்த் தொற்று நிலை காரணமாக ப. மா. ஆ இனால் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

D. எதிர்காலத் திட்டங்கள்

2022 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மீண்டெழும் செலவினங்கள்

இல.	செயற்பாடுகள்	காலம்	பயன் பெறும் குழுவினர்	செயற்பாடு	தொகை (ரூ.)
1.	"நிறுவன மீளாய்வு அறிக்கையை எழுவது எப்படி" எனும் தலைப்பில் தொழிற் பட்டறை	முழு நாள்	கல்விசார் உத்தியோகத்தர்	தொழிற் பட்டறை	100,000.00
2.	இணைய வழி கற்றல் தொழில்நுட்ப மையப்படுத்தப்பட்ட கற்றல் எனும் தலைப்பில் தொழிற் பட்டறை	முழு நாள்	கல்விசார் உத்தியோகத்தர்	தொழிற் பட்டறை	80,000.00
3.	கொள்முதல் செய்தல், விலைமனுக் கோரல், மனுக் கோரலின் செயன்முறைகள் எனும் தலைப்பில் தொழிற் பட்டறை	முழு நாள்	நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள்	தொழிற் பட்டறை	60,000.00
4.	தொழிற் பட்டறைகள் / கருத்தரங்குகள் / மாநாடுகளில் பங்குபற்றல் - உ.த.உ.அ இன் பணிப்பாளர்/ பீட ஒருங்கிணைப்பாளர்கள்	-	பணிப்பாளர்/ த. உ. அ மற்றும் பீடங்களின் ஒருங்கிணைப்பாளர்கள்	-	100,000.00
5.	ஒன்றுகூடல்களுக்கான சிற்றுண்டிச் செலவுகள்/ எழுதுகருவிகள் மற்றும் நுகர்பொருட்கள்	-		-	60,000.00
மொத்தம்					**400,000.00**

30. பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு

A. அறிமுகம்

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) இன் சுற்றறிக்கை இல. 10 /2016 இற்கு அமைவான ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உலக வங்கியின் நிதி உதவியுடன் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குகின்ற இலங்கை அரசினால் இயக்கப்படுகின்ற உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்தல் திட்டத்தின் நிதி உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. இவ் அலகு துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றது. இது பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் அதாவது அனைத்து பீடங்களும் இலகுவாக அணுகக் கூடிய வகையில் அமைந்துள்ளது. பிரதான கட்டடத் தொகுதியின் அடித் தளத்தில் தொ. தொ. க. நி இற்கு அடுத்ததாக அமைந்துள்ளது. இந்த அலகானது பணிப்பாளர், முகாமையாளர், ப. வ. இ. அ. இன் அறிவுரைக் குழு மற்றும் ஒவ்வொரு பீடத்தில் இருந்தும் ஆதரவு வழங்கி வருகின்ற ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்களின் கீழ் நன்றாக இயங்கி வருகின்றது.

ப. வ. இ. அ இன் தற்போதைய பணிப்பாளர் பேராசிரியர் (திருமதி) ஜீ. ஏ. எஸ். கினிகத்தர மற்றும் அவரின் கீழ் ஒரு ப. வ. இ. அ இன் முகாமையாளர் திருமதி. ஈ. என். லியனகே மற்றும் ப. வ. இ. அ இன் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஒரு பயிலுனர் செல்வி. எம். டீ. ஹரிஸ்சந்திரா ஆகியவர்கள் அலகின் உத்தியோகத்தர்களாக கடமை புரிந்து வருகின்றனர்.

ப. வ. இ. அ இன் பணிப்பாளர் அவர்களின் வழிகாட்டல் உடன் ஒவ்வொரு பீடத்தில் இருந்தும் ஆறு பீட ஒருங்கிணைப்பாளர்கள் ப. வ. இ. அ உடன் ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் தொடர்பாடலை மேற்கொள்ளல் என்பவற்றை இலகுவாக்குவதற்காக காணப்படுகின்றனர். துணைவேந்தர், தொழிற்துறை நிபுணர்கள் மட்டுமன்றி பீடத்தின் பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோரை கொண்ட ப. வ. இ. அ இன் அறிவுரைக் குழு ஆனது ப. வ. இ. அ இற்கு அறிவுரை வழங்குவதற்காக உள்ளது.

B. 2021 ஆம் ஆண்டின் அடைவுகள்

குணவர்த்தன ஆயர்வேத ஹோல்டிங்க்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது உடன் ஒன்றிணைந்து செயற்படுதல்

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் உயிர்செய்முறைத் தொழில்நுட்ப கற்கைத் துறைப் பிரிவு ஆனது குணவர்த்தன ஆயர்வேத ஹோல்டிங்க்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது உடன் ஆய்வு மற்றும் வணிகமயமாக்கல் நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து கொண்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் - நிகழ்நிலைக் கண்காட்சி

உ. க. வி. அ செயற்திட்டம் மற்றும் இ. வ. ச. ஆகியன ஒன்றிணைந்து வெவ்வேறு தொழிற்துறைகளை நோக்காகக் கொண்டு நிகழ்நிலை கண்காட்சிகளை வருடம் முழுவதும் நடாத்த தலைமை வகித்தன.

எ.ஃப். ஐ. சீ. சீ. ஐ கண்காட்சி

இ. ர. ப பங்குபற்றியதுடன் அதன் உற்பத்திகள் எ.ஃப். ஐ. சீ. சீ. ஐ கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன.

C. எதிர்காலத் திட்டங்கள்

- பல்கலைக்கழக முன்னெடுப்பு செயற்பாடுகளை விரிவாக்குதல்
- மேலும் தொழிற்துறை நிறுவனங்களுடன் இணைப்புக்களை ஏற்படுத்தல்
- இ. ர. ப இன் ஆய்வு உற்பத்திகளை வர்த்தகமயப்படுத்தல்
- பல்கலைக்கழகம் மற்றும் ப. வ. இ. அ என்பவற்றின் நீடித்து நிலைப்பதற்காக ப. வ. இ. அலகின் ஊடாக வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளை நடாத்துதல்

31. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பாகம் III இல் 17(d) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால திட்டங்களின் அறிக்கை

நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட எதிர்கால திட்டங்களின் அறிக்கை

1. தற்போது பல்கலைக்கழகம் சுத்திகரிக்கப்பட்ட (பக்கமாறான பிரசாரண முறை மூலம்) குடிநீரை அனைத்து மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்குகின்றது. மேலும், பக்கமாறான பிரசாரண வடிகட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் கிடைப்பனவை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் என்பவற்றின் அனுசரனையுடன் கழிவகற்றல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய பல்கலைக்கழகம் கழிவுகளை வேறு பிரிக்கும் செயற்திட்டத்தை ஏனைய பீடங்கள், மாணவர் விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் அலுவலகங்கள் ஆகிய இடங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

3. கழிவு நீரை சூழலுக்கு நேயமான முறையில் வெளியேற்றும் வகையில், கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக 200 மில்லியன் ரூபா மதிப்புள்ள செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

4. பசுமைப் பல்கலைக்கழக எண்ணக்கருவுக்கு அமைய, ஒரு பசுமைப் பல்கலைக்கழகத்தை பராமரித்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட மழை நீரினை பசுமைச் சூழலைப் பேண பயன்படுத்துதல்.

5. சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் மற்றும் விவசாய பீடம் ஆகியவற்றினால் நீடித்து நிலைத்து நிற்கும் சூழலை உருவாக்குவதற்காக மர நடுதை நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்வதற்கு எதிர்பார்த்தல்.
6. பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் நியாயமான முறையில் மற்றும் தரமான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து பெண் மற்றும் ஆண் ஆகிய இரு தரப்பினராலும் சமமான முறையில் அணுகக் கூடியதாக இருப்பதை உறுதி செய்தல்.
7. பல்கலைக்கழக கற்கைக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களில் திறமையுள்ள, அறிவாற்றல் மிக்க மற்றும் தொழில் புரியக் கூடிய பட்டதாரிகள், டிப்ளோமாதாரர்கள் மற்றும் சான்றிதழ் கற்கையை பூர்த்தி செய்தோர்களை உருவாக்குவதற்காக வெளிவாரிக் கற்கை நெறித் திட்டங்களுக்கு அதிகளவு மாணவர்களை அனுமதித்தல்.

8. முகாமைத்துவ கற்கைகள் பீடம் மற்றும் சமூக விஞ்ஞான மற்றும் மானிடவியல் பீடம் ஆகிய பீடங்களினால் வழங்கப்படும் பட்டப்பின் பட்ட கற்கை நெறிகள் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகள் போன்றவற்றை தொடர்வதற்கு அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை அனுமதித்தல் மற்றும் பால் சமத்துவத்தை உறுதிப்படுத்தல்.

9. வட மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக உயிரியல், கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், த. தொ. தொ மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் பயிற்சிப் பட்டறையை அப் பகுதியில் உயர்தர கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடர்ந்து ஒழுங்குபடுத்துதல்.

10. ஆறு பீடங்களினாலும் நடாத்தப்பட்ட அறிவைப் பரப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து நடாத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

32. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 106 (1) மற்றும் 107 (b) உப பிரிவுகள் மற்றும் அதில் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைய மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைய 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி உள்ளவாறானது ரூபா இல்	குறிப்பு	2021	2020
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	2	165,369,678	118,835,657
முதலீடுகள் - ஏனைய நிதிகள்	3	296,667,813	289,095,311
முற்பணங்கள் - விநியோகம் மற்றும் சேவைகள்	4	12,659,522	11,322,935
முற்பணங்கள் - வேறு	5	2,390,417	1,392,551
உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள்	6	269,600	249,450
உத்தியோகத்தர்களுக்கான கடன்கள்	7	7,599,991	16,783,823
ஏனைய பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பட வேண்டிய பணம்	8	1,799,000	10,680,816
கிடைக்கப்பட வேண்டிய வட்டிகள்	9	2,970,812	2,112,675
சரக்குகள்	10	41,239,241	43,450,050
முற்கொடுப்பனவுகள்	11	832,331	2,034,605
ஆய்வு முற்பணங்கள்	12	2,521,122	2,662,323
பத்திர மீறல் மூலம் பெறப்பட வேண்டியவைகள்	13	69,717,263	45,838,543
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**604,036,790**	**544,458,729**
நிலையான சொத்துக்கள்			
உத்தியோகத்தர்களுக்கான கடன்கள்	7	15,156,537	8,699,076
முதலீடு – மட்டுப்படுத்தப்பட்ட நிதி	3	5,263,472	4,854,742
உயிரியல் சொத்துக்கள்	14	3,673,818	3,939,970
அசையும் முற்பணங்கள்	15	216,224,799	278,456,724
நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள்	15	649,849,925	335,529,262
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்	16	5,705,701,790	6,047,025,487
மொத்த நிலையான சொத்துக்கள்		**6,595,870,341**	**6,967,600,572**
மொத்தச் சொத்துக்கள்		**7,199,907,131**	**7,222,963,990**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வேறுபட்ட வைப்புக்கள்	17	10,800,268	11,014,577
கடனாளிகள்	18	176,488,064	261,987,059
இணைந்த செலவுகள்	19	120,531,016	111,043,844
ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்	20	16,414,707	16,115,837
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**324,234,055**	**400,161,317**
நிலையான பொறுப்புக்கள்			
ஓய்வின் போதான கொடுப்பனவுகள்	21	206,223,007	205,174,358
மொத்த நிலையான பொறுப்புக்கள்		**206,223,007**	**205,174,358**
மொத்த பொறுப்புக்கள்		**530,457,062**	**605,535,675**
தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**6,669,450,069**	**6,617,628,315**
மூலதன நிதிகள்			
மூலதன மானியம் - செலவழிக்கப்பட்டவை		5,693,499,959	6,013,653,368
மூலதன மானியம் - நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளுக்காக செலவழிக்கப்பட்டவை		649,849,925	335,529,262
மூலதன மானியம் - நிர்மாணிப்புக்களுக்காக செலவழிக்கப்படாதவை	22	84,792,983	110,584,697
புனரமைப்பு மானியம் - புனரமைப்பு வேலைகள்	23	25,277,099	48,237,465
மூலதன மானியம் - உபகரணங்கள், தளபாடங்கள், நூலக புத்தகங்களுக்காக செலவழிக்கப்படாதவை	24	64,052,273	33,267,893
மூலதன மானியம் - தொழில்நுட்ப பீடம்	25	19,826,231	24,983,038
மூலதன மானியம் - மனித மூலதன விருத்தி	26	13,808,015	13,808,015
மூலதன மானியம் - ஏனைய மானியம்	27	31,191,110	15,191,085
		6,582,297,596	**6,595,254,824**
ஒதுக்கப்பட்ட நிதி			
நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		28,980,803	28,980,803
மூலதன ஒதுக்கம்		218,432,934	218,432,934
பொது ஒதுக்கம்		(775,712,007)	(766,817,570)
		(528,298,270)	**(519,403,833)**
வேறு சமப்படுத்தற் கூறுகள்			
ஏனைய நிதி	28	580,266,453	515,359,977
நன்கொடை நிதி	29	7,175,949	6,896,876
ஆய்வு மானியம்	30	28,008,342	19,520,471
விசேட ஒதுக்கம்			
		615,450,753	**541,777,324**
மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**6,669,450,069**	**6,617,628,315**

இந்த நிதிக் கூற்றின் ஒரு முக்கிய பாகமாக பக்கம் 13 முதல் 18 வரையுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்கம் 18 முதல் 34 வரையான கணக்கீட்டுக்குரிய குறிப்புரைகள் இந்த நிதிக்கூற்றுக்களின் இணைந்த பாகமாக அமைகின்றது. இந்த நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பன பல்கலைக்கழக பேரவையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டவர்களினால் பேரவையின் சார்பாக கையொப்பம் இடப்படுகின்றது.

…….	…….	…….	…….	…….
டீ. டீ. உபநந்த நிதியாளர்	என். சீ. எஸ். சேனக பதிற்கடமைப் பதிவாளர்	பேராசிரியர். (திருமதி) ஜீ. ஏ. எஸ் கினிகத்தர உபவேந்தர்	ஆர். ஜீ. ஜயசேகர பேரவை அங்கத்தவர்	எஸ். பீ. கே. குணரத்ன பேரவை அங்கத்தவர்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
நிதி செயற்றிறன் அறிக்கை

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி உள்ளவாறானது ரூபா இல்	*குறிப்பு*	2021	2020
வருமானம்			
அரச மானிய வருமானம் - மீண்டெழும்		2,033,000,000	1,874,500,000
மாணவர் உதவிப் பணத் தொகை		52,996,000	75,364,600
அரசாங்கம் அங்கீகரித்த மானியம்		510,967,837	526,425,218
		2,596,963,837	**2,476,289,818**
வேறு வருமானங்கள்			
பராமரிப்புக்கான புனரமைப்பு மானியம்		140,270	1,628,153
முதலீடுகளின் வட்டி		19,411,174	20,081,149
உத்தியோகத்தர் கடன்களின் வட்டி		1,047,918	1,056,835
சொத்துக்களில் இருந்தான வாடகை		1,317,210	1,114,577
நிலையான சொத்துக்களின் விற்பனை		673,678	242,915
பதிவுக் கட்டணம் (உள்வாரி பட்டக் கல்வி)		4,749,369	2,331,566
விநியோகஸ்தர்களின் பதிவுக் கட்டணம்		1,330,675	1,334,000
பட்டமளிப்பு விழா கட்டணம் மற்றும் நன்கொடை		3,521,350	-
பரீட்சைக் கட்டணம் (உள்வாரி பட்டக் கல்வி)		332,325	107,155
விலை மனுக் கட்டணம்		954,848	587,400
தண்டப்பணம் மற்றும் நூலகத்துக்கான கட்டணம்		150,771	593,895
பிற நிறுவனங்களுக்கு வழங்கும் சேவை		2,730,318	2,500
மாணவர் விடுதி கட்டணம்		884,447	1,826,925
சான்றிதழ் கட்டணம்		90,860	203,785
ஆய்வுகூட கட்டணங்கள்		1,015,801	2,123,220
சேதாரங்களுக்கான கட்டணங்கள்		2,315,285	89,125
நீச்சல் தடாக அங்கததுவ கட்டணம்		-	4,700
சூரிய கல மின் வலு வருமானம்		1,525,872	653,300
விரிவாக்கல் கற்கை நெறிகளின் மூலமான வருமானம்		69,261,421	21,066,665
வேறு வருமானங்கள்		10,032,470	5,816,357
		121,486,062	**60,894,222**
		2,718,449,899	**2,537,184,040**
செலவுகள்			
தனிநபர் ஊதியம்	31	1,765,944,698	1,739,629,220
பிரயாணங்கள்		1,661,208	1,228,192
விநியோகம்		44,335,516	51,679,393
பராமரிப்பு		12,826,239	16,377,306
ஒப்பந்த சேவைகள்		203,297,725	226,290,874
வேறு செலவுகள்		57,159,230	46,829,777
அபிவிருத்தி நிதிகளுக்கு மாற்றப்பட்டவை		69,261,421	-
மாணவர்களுக்கான நிதி உதவிகள்		52,996,000	75,370,300
தேய்மானம்		507,415,102	520,074,524
		2,714,897,138	**2,677,479,585**
இவ்வருடத்தின் தேறிய நிறை /குறைவு		**3,552,761**	**(140,295,545)**

செம்மையாக்கல் கணக்கு

மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது ரூபா இல்	*2021*	*2020*
இவ்வருடத்தின் தேறிய நிறை (குறைவு)	3,552,761	(140,295,545)
முந்நைய ஆண்டில் இருந்து கொண்டு வரப்பட்ட மீதி	(766,817,570)	(598,218,478)
	(763,264,809)	(738,514,023)
குறை :		
முந்நைய ஆண்டுகளுக்கான சரியாக்கம்	(12,447,198)	(28,303,547)
கொண்டு செல்லப்பட்ட மீதி	(775,712,007)	(766,817,570)

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

காசுப் பாய்ச்சல் கூற்று

மார்கழி மாதம் 31ஆம் திகதியில் உள்ளவாறானது ரூபாவில்	2021	2020
செயற்படும் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
சாதாரண செயற்பாடுகளில் இருந்தான மிகை / குறை	3,552,761	(140,295,545)
காசு அல்லாத அசைவுகள் /சீரமைப்புக்கள்		
குத்தகை வட்டி சீரமைப்பு		-
தேய்வுகள்	514,862,879	520,074,524
பணிக்கொடை ஒதுக்கம்	5,781,213	80,058,586
பொது ஒதுக்கம் மற்றும் வேறு சீரமைப்புக்கள்	50,797,137	68,062,651
கடன் மற்றும் முதலீடுகளில் இருந்தான வருமானம்	(20,459,092)	(21,137,984)
மூலதன & ஏனைய மானியங்களின் தேய்மானப் பெறுமதிகள்	(511,108,107)	(549,120,036)
செயற்படும் மூலதன மாற்றங்களுக்கு முன்னரான மிகை /(குறை)	**43,426,791**	**(42,357,804)**
செயற்படும் மூலதன மாற்றங்கள்		
சரக்குகள் மீதான அதிகரிப்பு /குறை	2,476,961	(1,283,770)
பெறுவனவுகள் மூலம் ஏற்பட்ட அதிகரிப்பு /குறை	(27,071,310)	3,661,248
முற் செலுத்தப்படவேண்டியவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு /குறை	1,202,274	(306,440)
தேறிய செலவுகளில் அதிகரிப்பு /குறை	9,487,172	48,758,890
ஏனைய வைப்புக்கள் & கட்டப்பட வேண்டிய கட்டணங்களின் அதிகரிப்பு /குறை	84,561	-
கடனாளிகளின் மற்றும் தக்க வைத்திருப்பவைகளின் அதிகரிப்பு /குறை	(85,498,995)	-
உத்தியோகத்தர்களின் முற்பணங்களில் அதிகரிப்பு /குறை	121,051	5,481,351
வேறு பல்கலைக்கழகங்கள் /நிறுவனங்கள் இலிருந்து பெற வேண்டிய காசு	8,881,816	1,168,884
செயற்படும் மூலதன மாற்றங்களுக்கு பின்னரான செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	**(46,889,679)**	**15,122,359**
பணிக்கொடை செலுத்துதல்கள்	(4,732,564)	(6,688,922)
செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு	**(51,622,243)**	**8,433,437**
முதலீட்டு செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல்		
சொத்து, ஆலை மற்றும் உபகரணம் கையகப்படுத்தல்	(58,949,194)	(125,932,829)
கட்டுமாணங்கள் & மீள்புதுப்பித்தல்களுக்கான கொடுப்பனவுகள்	(385,279,082)	(140,643,758)
நடப்பு முற்பணங்களுக்கான கொடுப்பனவுகள்	(18,824,117)	(163,831,453)
ஆய்வு & மனித வள அபிவிருத்திக்கான கொடுப்பனவுகள்	(3,108,290)	(200,000)
உத்தியோகத்தர் கடன்களில் இருந்தான காசு	2,726,361	2,264,239
முதலீடுகளில் இருந்தான வட்டி	20,459,092	21,137,984
நிலையான வைப்பு முதலீடுகளில் இருந்தான பணம்	76,680,053	79,432,864
நிலையான வைப்புகளில் முதலீடு	(50,067,782)	(105,670,744)
முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(416,362,959)**	**(433,443,697)**
நிதி செயற்பாடுகளில் இருந்து காசுப்பாய்ச்சல்		
கிடைக்கபெற்ற மூலதன மானியம்	412,595,804	358,773,551
கிடைக்கபெற்ற புனரமைப்பு மானியம்	28,250,000	62,188,000
ஆய்வு மற்றும் வேறு நிதிகளின் அதிகரிப்பு	73,673,419	24,173,719
நிதி செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்	**514,519,223**	**445,135,270**
பணம் மற்றும் பணஈடுகளின் பாய்ச்சலில் தேறிய அதிகரிப்பு	46,534,021	20,125,000
ஆண்டின் தொடக்கத்தில் இருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை	118,835,657	98,710,657
ஆண்டின் இறுதியில் இருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவை	**165,369,678**	**118,835,657**

இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம்

சமப்படுத்தலில் மாற்றங்களுக்கான கூற்றுக்கள்

முடிவடைந்த ஆண்டுக்கானது ருபாவில்	*குறிப்பு*	*மூலதன நிதி*	*மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்*	*மூலதன ஒதுக்கம்*	*பொது ஒதுக்கம்*	*மட்டுப்படுத்தப் பட்ட மற்றும் ஏனைய அபிவிருத்தி நிதிகள்*	*ஆய்வு மற்றும் அன்பளிப்பு நிதிகள்*	*மொத்தம்*
2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்வவாறான மீதி		6,625,527,873	28,980,803	218,432,934	-598,218,478	487,189,606	30,414,285	**6,792,327,023**
சொத்துக்களின் மீதான முதலீடுகள்		494,889,542	-	-	-		-	494,889,542
வருமானத்துக்கான சேர்க்கப்பட்ட கடன்		-520,074,524	-	-	-		-	-520,074,524
சுயமாக ஈட்டப்பட்ட நிதி & நிதிகளுக்காக பெறப்பட்ட மானியங்கள்		-	-	-	-			-
ஆண்டுக்கான மிகை / குறை		-	-	-	-140,295,545		-	-140,295,545
செம்மைபாக்கம்		-5,088,067	-		-28,303,547	28,170,371	-3,996,938	-9,218,181
2020 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்வவாறான மீதி		**6,595,254,824**	**28,980,803**	**218,432,934**	**-766,817,570**	**515,359,977**	**26,417,347**	**6,617,628,315**
சொத்துக்களின் மீதான முதலீடு		494,457,874	-	-	-		-	494,457,874
வருமானத்துக்கான சேர்க்கப்பட்ட கடன்		-507,415,102	-	-	-		-	-507,415,102
ஏனைய மானியங்களுக்கான நிதி		-	-	-	-	-4,354,945	8,766,943	4,411,998
ஆண்டுக்கான மிகை / குறை		-	-	-	3,552,761		-	3,552,761
பல்கலைக்கழக அபிவிருத்தி நிதிக்கு மாற்றப்பட்ட சுயமாக ஈட்டப்பட்ட நிதி						13,564,995		13,564,995
துணை வேந்தர் நிதிக்கு மாற்றப்பட்ட சுயமாக ஈட்டப்பட்ட நிதி						3,933,886		3,933,886
பீட/ கற்கை/ உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதிக்கு மாற்றப்பட்ட சுயமாக ஈட்டப்பட்ட நிதி						51,762,540		51,762,540
செம்மைபாக்கம்			-	-	-12,447,198			-12,447,198
2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதியில் உள்வவாறான மீதி		**6,582,297,596**	**28,980,803**	**218,432,934**	**-775,712,007**	**580,266,453**	**35,184,290**	**6,669,450,069**

01. நிதிநிலை கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1.1 நிறுவன தகவல்கள்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசுக்கு முழுமையாக சொந்தமான ஒரு உயர்கல்வி நிறுவனம் ஆகும். இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் தற்போது ஆறு பீடங்களுடன் செயற்பட்டு வருவதுடன் இது இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது.

1.2 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிதிநிலை கூற்றுக்கள் வேறுவிதமாக கூறப்படாவிட்டால், சம்பள அடிப்படையில் மற்றும் வரலாற்று செலவு மாநாட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதி கூற்றுக்கள் பல்கலைக்கழக தொழிற்பாட்டு மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாணயமாகிய இலங்கை ரூபாயில் (ரூ) வழங்கப்படுகின்றன. இது மற்றும் அனைத்து மதிப்புக்களும் அருகிலுள்ள பெறுமான ரூபாய் மதிப்புக்கு அண்ணளவாக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

முக்கிய கணக்கியல் கொள்கைகள் இக் குறிப்பின் 1.3 மற்றும் 1.4 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளன.

நிதிநிலை கூற்றுக்கள், நிதி செயல்திறன் கூற்றுக்கள், பங்கு மாற்றங்களிலான கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் ஆகியவை கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ஆகியவற்றுடன் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ்) மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டமும் அதன் திருத்தங்களும் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றன.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் சாதாரண வணிகத்தின் நிகர நிதி மற்றும் முடிவு நிதி செயல்திறன் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலை கூற்றில் காட்டப்பட்டுள்ளன. மேலும் காசுப்பாய்ச்சல் கூற்றானது பல்கலைக்கழகத்தின் பண வடிவிலான கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கி காட்டுகின்றது.

1.3 கணக்கியல் கொள்கைகள்

1.3.1 எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ் இன் பிரயோகங்கள்

2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூற்றுக்களை தயாரித்து வழங்கும் போது பல்கலைக்கழகம் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளை (எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ்) பின்பற்றியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் சட்டப்பூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ் தரநிலைகளும் வேறுவிதமாகக் கூறப்படாத சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்டுள்ளன.

1.3.2 கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்கள்

வேறுவிதமாக கூறப்படாத சந்தர்ப்பங்களில், பல்கலைக்கழகத்தின் நிதி நிலை கூற்றினை தயாரித்து வழங்கும் போது பல்கலைக்கழகம் பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளையே கருத்தில் கொண்டு தயாரித்தது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கணக்கியல் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

1.3.3 முக்கிய கணக்கியல் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

பல்கலைக்கழகத்தின் நிதி நிலை கூற்றுக்களை தயாரிப்பதற்கு நிதி ஆண்டு முடிவில் வருமானம், செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான கடன்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை பாதிக்கக்கூடிய தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகத்தினால் மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகின்றது. கணக்கியல் கொள்கைகளைப் பிரயோகிக்கும்போது, எதிர்கால மதிப்பீடுகள் மற்றும் பிற அம்சங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட முக்கிய அனுமானங்கள் கீழே விவாதிக்கப்படுகின்றன.

1.4 முக்கிய கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

1.4.1 வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள் மற்றும் நிலுவைகள்

அனைத்து வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளும் பரிவர்த்தனைகள் நிகழும் நேரத்திலான நாணய மாற்று விகிதங்களுக்குரிய தொழிற்பாட்டு நாணய விகிதங்களில் அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. வெளிநாட்டு நாணய விகிதத்தில் பரிந்துரைக்கப்பட்ட பண சொத்துக்களும் பொறுப்புக்களும் 31/12/2021 ஆம் திகதி அன்று நிலவும் மாற்று விகிதத்திற்கு சமமான தொழிற்பாட்டு நாணயத்திற்கு (ரூபாய்) மாற்றப்பட்டு இருந்தன. வதிவிட வெளிநாட்டு நாணய (வ. வெ. நா) கணக்குகளின் அறிக்கையிடப்படும் திகதியிலான நிலுவையானது அதே திகதியிலான விகித மாற்றங்களின் தொழிற்பாட்டு நாணயத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் இனங்காணப்பட்ட ஆதாயம் மற்றும் இழப்பு ஆனது வெவ்வேறாக குறிப்பு 31 இல் காட்டப்பட்டுள்ளதுடன் நிகர விளைவு அந்தந்த நிதிக் கணக்கில் தனித்தனியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

1.4.2 வரி

வருமான வரி

தற்போது நடைமுறையில் உள்ள வரி விதிமுறைகளின் படி வணிகத்தின் சாதாரண மூல காரணமாகிய வருமானத்தின் மீதான வருமான வரியை செலுத்த வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழகத்திற்கு இல்லை.

செலுத்துவோர் வரி

பல்கலைக்கழகம் தற்போது வருமான வரி செலுத்துவதற்கு கடமைப்பாடு உள்ள ஊழியர்களின் மாத சம்பளத்தில் இருந்து அவர்களினால் எழுத்து மூலமாக தரப்பட்ட சம்மதக் கடிதத்துடன் வருமான வரியை கழித்து ஊதிய வரியை பல்கலைக்கழகம் தற்போது செலுத்துகின்றது.

1.4.3 சொத்து, ஆலை மற்றும் உபகரணம் (சொ. ஆ. உ)

எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ் இன் தரநிலை 07 க்கு அமைய குறைந்த பட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் திகதியிலும் மீதமுள்ள மதிப்பு மற்றும் ஒரு சொத்தின் பயனுள்ள வாழ்க்கை காலம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வது ஒரு நிறுவனம் என்ற வகையில் தேவைப்படுகிறது. மேலும், முந்தைய மதிப்பீடுகளிலிருந்து எதிர்பார்ப்புக்கள் வேறுபட்டால் மாற்றம்(கள்) இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் இதை மாற்றமாக் கருத்திற் கொண்டு எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ் இன் தரநிலை 3, கணக்கியல் கொள்கைகள் கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் ஆகியவற்றின் படி ஒரு கணக்கியல் மதிப்பீட்டை நிர்ணயிக்கிறது.

தேய்மானம்

தேய்மானம் ஆனது அனைத்து சொத்து, கட்டடம் மற்றும் உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் காலச்சுவடுகள் மற்றும் பட்டமளிப்பு மேலங்கிகள் என்பவற்றின் விலை அல்லது மீள்மதிப்பீட்டு பெறுமதியில் பின்வரும் விகிதங்களில் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்துவதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

சொத்துக்களின் வகைகள்	%
கட்டடங்கள்	5%
உட்கட்டமைப்புச் சொத்துக்கள்	5%
ஆலை, இயந்திரங்கள் & உபகரணங்கள்	10%
மோட்டார் வாகனங்கள்	20%
தளபாடங்கள் &பொருத்துக்கள்	10%
அலுவலகம் & ஏனைய உபகரணங்கள்	20%
ஆய்வுகூடம் & கற்பித்தல் உபகரணங்கள்	20%
நூலக புத்தகங்கள் & காலச்சுவடுகள்	20%
பட்டமளிப்பு மேலங்கிகள்	20%

சொத்து, இயந்திரங்கள் மற்றும் உபகரணம் என்பவற்றின் தேய்மானம் பற்றிய மேலதிக விபரங்கள் குறிப்பு 16 இல் காட்டப்படடுள்ளது.

.

1.4.4 உயிரியல் சொத்துக்கள்

உயிரியல் சொத்துக்கள் தொடர்பான மதிப்பாய்வு இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் விவசாயத் துறைக்குரிய எஸ். எல். பீ. எஸ். ஏ. எஸ் இன் தரநிலை 18 இற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழக உயிரியல் சொத்துக்கள் ஒரு தனிச் சொத்தாக நிதி நிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. நியாயமான மதிப்பை நம்பத் தகுந்த முறையில் அளவிட முடியாத சந்தர்ப்பங்கள் தவிர, உயிரியல் சொத்துக்கள் ஆரம்ப

அங்கீகாரத்தில் மதிப்பிடப்படுவதுடன் மற்றும் அடுத்தடுத்த அறிக்கையிடல் திகதிகளில் நியாயமான மதிப்பில் குறைவான விற்பனை மதிப்பிடப்பட்ட புள்ளியில் அளவிடப்படுகின்றன. நியாயமான மதிப்பில் உயிரியல் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகாரத்தின் ஆதாயம் மற்றும் இக் காலகட்டத்தில் உயிரியல் சொத்தின் நியாயமான மதிப்பில் மாற்றமானது நிகர உபரி/பற்றாக்குறையாகக் கொள்ளப்படும்.

1.4.5 குறுகிய கால முதலீடு

பல்கலைக்கழகம் அதன் ஆராய்ச்சி, திட்டங்கள் மற்றும் பிற துணை நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டு பயன்படுத்தப்படாத நிதிகளை தற்காலிகமாக அரச வங்கிகளில் கால வைப்புக்களில் முதலீடு செய்துள்ளது. அதற்கான திரட்டப்பட்ட வட்டி அந்தந்த லெட்ஜர் கணக்குகளுடன் சரிசெய்யப்பட்டு நிதிச் செயல்திறன் அறிக்கைகளில் வருமானமாக காட்டப்பட்டுள்ளது. இவ்வாறே, புலமைப்பரிசில் உதவித்தொகை மற்றும் பதக்க விருது வழங்கல் என்பவற்றுக்காக பெறப்பட்ட நிதிகள் அரச வங்கிகளில் கால வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், முதலீடுகள் மற்றும் முதலீடுகளின் வட்டி வருமானம் பற்றிய விபரங்கள் குறிப்பு 03 இல் காட்டப்பட்டுள்ளது.

1.4.6 சரக்குகள்

2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி அன்றைய நிலவரப்படி பல்கலைக்கழக இருப்புக்கள் பௌதிக ரீதியாக சரிபார்க்கப்பட்டு மற்றும் முதலில் கொண்டு வரப்பட்டது முதலில் வெளியேற்றப்படல் (எ.்.ப். ஐ. எ.்.ப். ஓ) எனும் கொள்கை அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் சரக்குகள் முக்கியமாக எழுதுகருவிகள், கட்டுமாண பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் மற்றும் பிற சரக்குகள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஆராய்ச்சி மானியங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனங்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்களின் விலையானது வாங்கும் நேரத்திலான செலவாக குறிப்பிட்ட ஆராய்ச்சி மானியங்களுக்கு கீழ் முழுமையாக வசூலிக்கப்படுகின்றது. எனினும், பௌதிக ரீதியான சரிபார்ப்பு அறிக்கைகளின்படி ஆண்டின் இறுதியில் காணப்படும் பொருட் சரக்குகளின் நிலுவையானது சம்பந்தப்பட்ட அந்தந்த கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

சரக்குகள் பற்றிய மேலதிக விபரங்கள் கணக்கின் குறிப்பு 10 இல் காட்டப்பட்டுள்ளது.

1.4.7 வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள்

எஸ். எல். பி. எஸ். ஏ. எஸ் 01 இன் படி வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் மதிப்பிடத்தக்க தொகையில் குறிப்படப்பட்டுள்ளன. இது அறிக்கை இடப்பட்ட திகதியின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் பெறப்பட உள்ளது. மோசமான மற்றும் சந்தேகத்திற்கு இடமான பெறத்தக்கவைகள் மற்றும் கொடுப்பனவுகள் என்பவற்றுக்கு எந்த விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

1.4.8 பணம் மற்றும் பண ஈடுகள்

நிதி நிலை அறிக்கையில் பணம் மற்றும் பணஈடுகள் வெளிப்படுத்தப்படுவதோடு காசுப் பாய்ச்சல் கூற்று ஆனது தற்போதைய மற்றும் வதிவிட வெளிநாட்டு நாணய (ஆர். எப். சி) கணக்குகளின் நிலுவையை உள்ளடக்குகின்றது. பணம் மற்றும் பண ஈடுகள் பற்றிய மேலதிக விபரங்கள் கணக்கு அறிக்கையின் குறிப்பு இல 2 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.4.9 பணிக்கொடை

நிதி நிலை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு, நிதி நிலை அறிக்கையின் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கு அமைவாக கணக்கிடப்படும் வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமையின் தற்போதைய மதிப்பு ஆகும். நிதி நிலை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு என்பது, எஸ். எல். பி. எஸ். ஏ. எஸ் 19, பணியாளர் பலன்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்ட யூனிட் கிரெடிட் முறையின்படி கணக்கிடப்பட்ட பணிக்கொடை கடமையின் தற்போதைய மதிப்பாகும். ஆணைக்குழு சுற்றறிக்கை 05/2019 க்கு அமைவாக 31/12/2021 திகதியில் உள்ளவாறான பணிக்கொடை கொடுப்பனவை வழங்குவதற்காக கல்வி கொடுப்பனவு மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவு ஆகியன பரிசீலிக்கப்படுகின்றன. 1983 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி பணிக்கொடை செலுத்தப்படுகிறது.

1.4.10 பல்கலைக்கழக வருங்கால வைப்பு நிதி மற்றும் பணியாளர் நம்பிக்கை நிதி

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பல்கலைக்கழக வருங்கால வைப்பு நிதி (யு. பீ. எப்) பங்களிப்புக்கள் மற்றும் பணியாளர் நம்பிக்கை நிதி (ஈ. ரி. எப்) பங்களிப்புக்கள் என்பவற்றிற்கு அந்தந்த சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் ஏற்ப உரிமை உண்டு. வெளிவாரியாக இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கும் ஊழியர்களின் நம்பிக்கை நிதிக்கும் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் குறிப்பிடப்பட்ட சதவீதங்களை முறையே (15%) மற்றும் (3%) இனை பல்கலைக்கழகம் வழங்குகின்றது.

	உப தொகை	**229,205,010.00**	**87,743,409.55**	**50,781,907.38**	**939,004.28**	**1,538,446.18**	**45,872,931.93**	**16,422,025.92**	**203,297,725.24**	**25,907,284.76**
ஏனைய மீள் செலவினங்கள்										-
901	பல்கலைக்கழக பிரயாண மானியங்கள்	1,000,000.00	-	-	-	-	-	-	-	1,000,000.00
902	விசேட சேவை – பேரவை & பொது	4,000,000.00	**1,843,613.85**	69,500.00	-	-	-	-	1,913,113.85	2,086,886.15
903	விசேட சேவை – நிபுணத்துவம் &	5,999,000.00	**3,255,112.84**	574,206.84	12,000.00	212,832.00	-	-	4,054,151.68	1,944,848.32
904	தொழிற்பட்டறை, கருத்தரங்குகள்	1,500,000.00	**48,335.00**	58,545.00	-	-	-	-	106,880.00	1,393,120.00
905	கல்விசார் ஆய்வு	3,000,000.00	**74,621.17**	1,074,405.80	-	-	-	-	1,149,026.97	1,850,973.03
906	உத்தியோகத்தர் அபிவிருத்தி	2,500,000.00	**204,224.50**	394,500.00	-	110,441.00	-	-	709,165.50	1,790,834.50
907	பட்டப்பின் ஆய்வுகள	-	**750**	10,455.00	-	-	-	-	11,205.00	-11,205.00
908	மாணவர்களுக்கான கற்கை கையேடுகள்	2,000,000.00	-	-	-	-	-	-	-	2,000,000.00
909	தொழில் நிறுவன உள்ளகப் பயிற்சிகள், செய்முறைகள	4,500,000.00	-	240,002.94	-	9,000.00	-	-	249,002.94	4,250,997.06
910	மாணவர் விருத்தி, உத்தியோகத்தர்	2,500,000.00	**65,445.00**	62,138.00	-	32,650.00	-	-	160,233.00	2,339,767.00
911	பல்கலைக்கழக விளையாட்டு செயற்பாடுகள்	2,000,000.00	-	-	-	2,654,265.00	-	-	2,654,265.00	-654,265.00
912	மாணவர் நலன்புரி, உத்தியோகத்தர் நலன்புரி	2,000,000.00	**135,760.75**	27,750.00	-	42,090.87	-	24,400.00	230,001.62	1,769,998.38
913	ஒன்றியத்துக்கான திட்டமிடல்	750,000.00	-	-	-	-	-	-	-	750,000.00
914	ஏனைய நிறுவனங்களுக்கான மானியங்கள்	100,000.00	-	-	-	-	-	-	-	100,000.00
915	விடுமுறை நாள் பயணச் சீட்டுக்கள்	1,000,000.00	**32,670.00**	24,080.00	-	58,220.00	-	-	114,970.00	885,030.00
916	உல்லாச செலவினங்கள்	4,500,000.00	**1,120,781.93**	3,050,297.38	160,521.29	59,439.22	-	13,035.00	4,404,074.82	95,925.18
917	வங்கிக் கட்டணங்கள்	40,000.00	**64,200.00**	11,500.00	-	-	-	-	75,700.00	-35,700.00
918	விருதுகள் & இழப்பீடுகள்	-	**15,000.00**	15,200.00	7,500.00	-	2,500.00	-	40,200.00	-40,200.00
919	பங்களிப்பு & அங்கத்துவ கட்டணம்	151,000.00	**153,000.00**	-	1,250.00	1,500.00	-	-	155,750.00	-4,750.00
920	பட்டமளிப்பு விழா	3,500,000.00	**237,775.00**	728,611.00	-	-	-	-	966,386.00	2,533,614.00
921	பரீட்சை செலவினங்கள்	20,000,000.00	-	35,750,775.16	-	-	-	-	35,750,775.16	-15,750,775.16
922	வேறு – செய்திதாள்கள், சஞ்சிகைகள்	1,001,000.00	**123,550.00**	49,410.00	-	2,520.00	-	45,350.00	220,830.00	780,170.00

925	சொத்துக் கடன் வட்டி	4,000,000.00	273,168.75	3,329,410.78	264,906.13	138,904.28	136,051.59	48,385.74	4,190,827.27	-190,827.27
	உப தொகை	**66,041,000.00**	**7,648,008.79**	**45,470,787.90**	**446,177.42**	**3,321,862.37**	**138,551.59**	**131,170.74**	**57,156,558.81**	**8,884,441.19**
மாணவர்களுக்கான நிதி உதவி										-
1001	மகாபொல நம்பிக்கை நிதியம் மூலம்		-	-	-	-	-	-	-	-
1002	ப.மா.ஆ மூலமான மகாபொல நிதி		-	-	-	-	-	-	-	-
1003	புலமை நிதிக´(பேர்சரி) கொடுப்பனவு		-	-	-	52,996,000.00	-	-	52,996,000.00	
	உப தொகை	-	-	-	-	**52,996,000.00**	-	-	**52,996,000.00**	-
நிலையான சொத்துக்களில் தேய்மானம்										
1801	கட்டட தேய்மானம்		314,986,740.27	-	-	-	-	-	314,986,740.27	
1802	தளபாட தேய்மானம்		35,996,248.04	-	-	-	-	-	35,996,248.04	
1803	மீன் சாதன தேய்மானம்		-	-	-	-	-	-	-	
1804	நீர் வழங்கல் தொகுதி தேய்மானம்		-	-	-	-	-	-	-	
1805	ஆலை & இயந்திர தேய்மானம்		11,279,538.53	-	-	-	-	-	11,279,538.53	
1806	அலுவலக உபகரண தேய்மானம்		49,927,490.29	-	-	-	-	-	49,927,490.29	
1807	நூலக புத்தக தேய்மானம்		8,246,371.00	-	-	-	-	-	8,246,371.00	
1808	மோட்டார் வாகன தேய்மானம்		1,719,630.17	-	-	-	-	-	1,719,630.17	
1809	ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரண தேய்மானம்		84,716,393.57	-	-	-	-	-	84,716,393.57	
1810	பட்டமளிப்பு மேலாடை தேய்மானம		542,690.00	-	-	-	-	-	542,690.00	
1811	கால்நடை தேய்மானம்		-	-	-	-	-	-	-	
	உப தொகை	-	**507,415,101.87**	-	-	-	-	-	**507,415,101.87**	-
	மொத்தத் தொகை	**2,116,041,010.00**	**756,192,549.13**	**1,583,844,626.90**	**76,977,291.84**	**95,091,271.45**	**102,009,323.68**	**31,520,628.07**	**2,645,635,691.07**	**30,816,420.80**

33. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் பற்றி 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் 108 (01) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைந்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான கேள்விகள் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. ANP/E/ RUSL/21/AQ-10 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 2022 මැයි 31 දින

RAJARATA UNIVERSITY OF SRI LANKA
08 JUN 2022
Vice Chancellor's Office

උපකුලපති
ශ්‍රී ලංකා රජරට විශ්වවිද්‍යාලය
මිහින්තලේ.

ශ්‍රී ලංකා රජරට විශ්වවිද්‍යාලයේ 2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව

යථෝක්ත වාර්තාව මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී. වික්‍රමරත්න
විගණකාධිපති

පිටපත්:- 1. ලේකම්,අධ්‍යාපන අමාත්‍යාංශය
2. ලේකම්, මුදල් අමාත්‍යාංශය
3. සභාපති, විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

අංක 306/72, පොළ්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

உபவேந்தர்
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
மிகிந்தலை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைந்த ஏனைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1. தரமான கருத்துரைகள்

நிதி செயற்றிறன் அறிக்கை, பணத்தில் மாற்றங்களுக்கான அறிக்கை, முடிவடைந்த ஆண்டுக்கான பணப் பாய்ச்சல் அறிக்கை, முக்கிய கணக்கீட்டு நியமங்களுக்கான சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கமான தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்களின் கணக்காய்வானது, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அமைப்பின் 2018 ஆம் ஆண ்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 154 (1) ஆம் பகுதியின் ஏற்பாடுகளுக ்கு அமைய, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் எனது வழிகாட்டலில் நடாத்தப்பட்டது. நான் பல்கலைக்கழக சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக பல்கலைக்கழகத்தின் அவதானங்களையும் எனது கருத்துக்களையும் வருடாந்தம் முன்வைப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன். ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவுக்கு அமைவாக இவ் அறிக்கையானது உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் நிரற்படுத்தப்படும்

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ரஜரட்ட பல்கலைக்கழக நிதிக்கூற்று, நிதி செயற்றிறன் அறிக்கை மற்றும் முடிவடைந்த ஆண்டுக்கான பணப் பாய்ச்சல் கூற்று என்பன உண்மை என்பதும், எனது அறிக்கையில் உள்ள தரமான கருத்துரைகளுக்குரிய அடிப்படைகளில் விளக்கமளிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட விடயங்கள் தவிர இலங்கை பொது கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்கும் வகையில் காட்டப்பட்டு உள்ளது என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

1.2. தரமான கருத்துரைகளுக்கான அடிப்படைகள்

A. இலங்கை கணக்கியல் தரநிலை இல 07 இன் 65 ஆம் பிரிவுக்கு அமைவாக, வருடாந்த அசையாச் சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்படவில்லை. ரூ. 879,604,581 பெறுமதியுடைய தேய்மானத்தை கொண்ட 12 சொத்துக்கள் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே மதிப்பிடப்பட்ட வழு ஆனது

இலங்கை கணக்கியல் தர நிலைகள் இல 03 இற்கு அமைவாக மீள்பார்வை செய்யப்படவில்லை.

B. சொத்துஇ ஆலை மற்றும் உபகரணங்களின் கிரயங்கள் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மதிப்பிலும் குறைவாக காட்டப்பட்டள்ளமையால் மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூ.10,893,922 மொத்தப் பெறுமதியுடைய 4 கட்டுமான திட்டங்கள்இ நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கிலருந்து தொடர்புடைய சொத்து கணக்குகளுக்கு மாற்றப்படவில்லை.மேலும் கணக்கிடப்படாத மேற்கூறிய சொத்தக்களின் ரூ.406இ566 தேய்மான பெறுமதி மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் உபரியாக மேற்குறிப்பிடப்பட்டதற்கு சமமாக மிகைப்படுத்தப்பட்ட பெறுமதியாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட மூலதனமாக்கப்படாத கட்டிடம் அல்லாத சொத்துக்கள் மீது செலவிடப்பட்ட ரூ.15,767,310 நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கிலிருந்து தொடர்புடைய சொத்து கணக்குகளுக்கு மாற்றப்படவில்லை.எனவே ஒரே பெறுமதியுடைய சொத்துக்களின் கிரயங்கள் முறையே அதிகமாகவும் குறைவாகவும் காட்டப்படுகிறது.

C. 2015 தொடக்கம் 2021 வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமில்லாத நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட 2 கட்டிடங்களுக்கான செலவு ரூ.1,027,676,497 மூலதனமாக்கப்பட்டது.மேலும் மேற்கூறிய காலப்பகுதியில் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட ரூ. 23,999,000 மீது தொடக்கத்திலிருந்து தேய்மானமிடப்பட வேண்டிய ரூ. 16,799,300 தேய்மானத் தொகை கணக்கிடப்படவில்லை.

D. காலாவதியடைந்த மற்றும் பயன்பாட்டுக்கு உகந்ததல்லாத ரூ. 5,730,583 மொத்தப ˙ பெறுமதி உடைய இருப்புக்களானது இறுதி இருப்புக்களின் பெறுமதியில் சேர்க்கப்பட்டுள்ளதோடு மதிப்பீட்டு ஆண்டின் மிகை மற்றும் நடைமுறைச் சொத்தக்கள் சம மதிப்பால் மிகைப்படுத்தப்பட்டுள்ளன.

E. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஒப்பந்த மீறல் கடன்பட்டோர் கணக்கு மீதி ரூ. 69,717,263 உடன் ரூ.3,784,401 பெறுமதியான ஒப்பந்தம் மதிப்பீட்டு ஆண்டில் உள்ளடக்கப்பட்டு 2023 வரை புதுப்பிக்கப்பட்டது. ஆனால் மேற்கூறிய தொகை கடன்பட்டோர் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்க வேண்டும.அவ்வாறு இடம்பெறாமையால் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மதிப்பீட்டு ஆண்டின் மிகை மற்றும் ஒப்பந்த மீறல் கடன்பட்டோர் கணக்கு மீதிகள் சம மதிப்பால் மிகைப்படுத்தப்பட்டுள்ளன.

F. 01 மற்றும் 05 ஆண்டுகளுக்கு இடையில் பெறப்பட்ட ரூ.2,711,041 தொகை அடையாளம் காணப்படவில்லை ஆனால் இதர வைப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

G. 2017 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் 2253 புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கான நன்கொடைகள் ரூ.1,791,447, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கணக்கிடப்படவில்லை.

H. பல்கலைக்கழக மானியக் குழுவின் 25 நவம்பர் 2019 தேதியிட்ட 09/2019 சுற்றறிக்கையின் படி, குடியிருப்புகளை வழங்கப்பட்ட ஊழியர்களின் சம்பளத்தில் 10% கழிக்கப்பட வேண்டும்,இருப்பினும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பதிவாளருக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளில் இருந்து வரவேண்டிய ரூ.274,210 மீளப்பெறப்படவில்லை மற்றும் அதற்கேற்ப கணக்கீடு செய்யப்படவில்லை. எனவே மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டின் மிகை மற்றும் 2021 டிசம்பர் 31ஆம் திகதியின் நடைமுறை சொத்துக்கள் சம அளவால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

I. மதிப்பாய்வு செய்யும் ஆண்டில், ரூ.262,772,409 கணக்கிடத்தக்க மதிப்பின் 03 பரிவர்த்தனைகளுக்கான விரிவான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

J. 31 டிசம்பர் 2021இல் உள்ளவாறான இருப்பு சரிபார்ப்பு அறிக்கைகளின்படி, இருப்பு மீதி மற்றும் அன்றைய திகதியில் நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள இருப்பு மீதிகளக்கிடையிலான ரூ. 211,700 வேறுபாட்டிற்குரிய காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்க கணக்காய்வு நடாத்தப்பட்டது. இக் கணக்காய்வு தரநிலைகளின் கீழ் பொறுப்பானது, மேலும், நிதிக்கூற்றின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்களுடன் விளக்கப்படுகின்றது. எனது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் ஆண்டறிக்கை 2021 தரமான கருத்துரைகளுக்கு அமைவாக பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானதாகவும் சரியாகவும் உள்ளது.

1.3. 2021ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

கணக்காய்வு அறிக்கைக்குரிய திகதியின் பின்னர் எனக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் ஏனைய தகவல்கள் ஆக கருதப்படுவதுடன் அவை நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. இந்த ஏனைய தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பு.

ஏனைய தகவல்கள் ஆனது நிதிநிலை அறிக்கைகள் தொடர்பாக கொடுக்கப்பட்ட எனது கருத்தை உள்ளடக்கியதாக இல்லை அத்துடன் அவை குறித்த எந்த கருத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது கூறவோ இல்லை. நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வின்படி, பெறப்பட்ட, அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் வாசிப்பதும், அவ்வாறு செய்வதன் மூலம் பிற நிதிநிலை அறிக்கை, கணக்காய்வு அல்லது பிற வழிமுறைகள் வழியாக பெறப்பட்ட அறிவு மூலம் அளவுகளின் பொருத்தமான தன்மைகளை பார்ப்பதே எனது பொறுப்பாகும்.

பல்கலைக்கழக ஆண்டு அறிக்கை 2021 இனைப் பார்க்கும் போது, தரமான பிழைகள் இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த விஷயங்களைத் திருத்துவதற்காக கட்டுப்பாட்டு அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், அந்த பிழைகள் திருத்தம் இல்லாமல் இருப்பின், அவை இருக்கும் அரசியலமைப்பின் 154 (6) க்கு இணங்க உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் சேர்க்கப்படும்.

1.4. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் நிர்வாகத்தினரதும் பொறுப்புக்கள்

முகாமைத்துவமானது இந்த நிதிக் கூற்றுக்களினை இலங்கை பொது கணக்கியல் தரநிலைகளுடன் இணங்கும் வகையில் தயாரித்தல் மற்றும் சரியான விளக்கப்படுத்துகை என்பவற்றுக்கு பொறுப்பாகும். மோசடி அல்லது பிழை காரணமாக விளக்கம் அளிக்கப்பட்ட கூற்றுக்கள் அற்ற, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

நிதிநிலை கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பல்கலைக்கழகத்தை தொடர்ந்து பராமரிப்பதா என்பதை தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதற்கான மாற்றுவழி இல்லாதபோது ரஜரட்ட பல்கலைக்கழகத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என நிர்வாகத்தின் கருத்து இருந்தால், அது தவிர, கணக்குகள் தொடர்ச்சி அடிப்படையில் பேணப்பட வேண்டியதுடன் பல்கலைக்கழகத்தை தொடர்ந்து பராமரிப்பதா என்ற விடயத்தை வெளிப்படுத்த வேண்டியதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழக நிதி அறிக்கையிடல் செய்முறையின் பொறுப்பு ஆனது பல்கலைக்கழகத்தின் ஆளுகின்ற அதிகாரத்தினால் ஏற்கப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (i) உப பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலக்கிரம நிதிக் கூற்று தயாரிப்பதற்கு வழி வகுக்கும் வகையில், பல்கலைக்கழகம் பதிவேடுகளை பேணுவதுடன் அனைத்து

வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன பதியப்படல் வேண்டும்.

1.5. நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்தலுடன் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒரு கணக்காய்வாளர் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டவை மற்றும் பெறுமானங்கள் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய செயன்முறைகளில் ஈடுபடுவர். மோசடி மற்றும் பிழைகள் காரணமாக நிதிக்கூற்றுகள் உண்மையான மற்றும் நியாயமான அபிப்பிராயத்தை பிரதிபலிக்காததால், நியாயமான கருத்தை வழங்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு அமைவாக கணக்காய்வு செய்யும்போது, நிதிக்கூற்றுக்கள் குறித்த தரமான வெளிப்பாட்டினை உறுதிப்படுத்தக்கூடும் என எப்போதும் கருத்திற் கொள்ளலாகாது. மேலும், இந்த அறிக்கையை பின்பற்றுவதன் மூலம் எடுக்கப்பட்ட பொருளாதார முடிவு நிச்சயமாக அவர்களின் முடிவை பாதிக்கும்.

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு அமைவாகவே, நான் கணக்காய்வை தொழில் வல்லுனர்களின் தீர்ப்பு மற்றும் சந்தேகங்களுடன் மேற்கொண்டேன்.

- மேலும்,மோசடி அல்லது பிழை திருத்தம் காரணமாக அபாய மதிப்பீடு, நிதிக்கூற்றுகளின் பொருள் தவறாக மதிப்படப்படுவதற்கான அபாய மதிப்பீடுகள் உட்பட போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அல்லது பெறுவதன் மூலம் இது நிறுத்தப்படலாம்.

- தவறான அறிக்கைகளை தருவதால் ஏற்பட்ட சேதத்தை விட நிதி காரணமாக ஏற்படும் சேதம் அதிகமாக உள்ளதை புரியக் கூடியதாகவுள்ளது.

- பொருத்தமான காலக் கிரமத்துடனான கணக்காய்வு முறைமையை திட்டமிடும் பொருட்டு, பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாடுகள் பற்றிய ஆய்வுக் கற்கை நடாத்தப்பட்டது. ஆனால், உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறன் பற்றிய கருத்து பெறப்படவில்லை.

- பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் அத்துடன் சம்பந்தப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் என்பவற்றுக்கு ஏற்ப இணங்குதல் முகாமைத்துவத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

- பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் ஊடாக காரண காரியங்களின் பொருட்டு, பல்கலைக்கழக செயற்பாடுகளின் தொடர்ச்சியைக் கருத்திற் கொண்டு கணக்கியலுக்கான தொடர் செய்முறைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்த

தீர்மானிக்கப்பட்டு உள்ளது. தொழிற்பாடுகளின் தொடர்ச்சி பற்றிய சந்தேகங்கள் காணப்படும் இடத்தில், அவை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதோடு கணக்காய்வாளரின் அபிப்பிராயத்துக்கு போதுமானதாக இல்லாவிடில் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டும். எனினும், எதிர்கால சம்பவங்கள் மற்றும் நிலைமைகளின் பொருட்டு, செயற்பாட்டின் தொடர்ச்சியானது மூடப்படலாம்.

- நிதிக் கூற்றில் விளக்கிக் காட்டப்பட்டுள்ள கட்டமைப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

இனங்கண்ட முக்கிய கணக்காய்வு அவதானங்கள், உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள பிரதான தவறுகள் மற்றும் ஏனைய பலவீனங்கள் என்பன செயற்பாடுகளை கட்டுப்படுத்துவோருக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

2 ஏனைய சட்ட மற்றும் விதிகளின் தேவைப்பாடுகளுக்கான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (A) பிரிவின் பிரகாரம், எனது அறிக்கை கருத்துரைகளுக்கான அடிப்படையினை வழங்குவற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதோடு பல்கலைக்கழகமானது ஒழுங்கான நிதி அறிக்கையை பேணுகின்றது என்பது எனது கருத்தாகும்.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (B) (iii) பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தால் அனுப்பப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டுடன் ஒத்ததாக காணப்படுகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (ii) (C) (iv) பிரிவின் பிரகாரம், எனது அறிக்கையின் தகுதிவாய்ந்த கருத்து 1.2 (A) மற்றும் (B) பிரிவுகளின் அடிப்படையில் அவதானிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, முந்தைய ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயல்முறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் முக்கிய விடயங்களுக்கான வரையறைகள் போன்றவை காரணமாக கீழே உள்ள எவற்றையும் குறிப்பிடுவதில் கவனம் எடுக்கப்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (D) பிரிவின் பிரகாரம் கீழுள்ள அவதானம் தவிர அல்லது சாதாரண செயற்பாடுகளில் இருந்து தொடர்புகள் விலகி இருப்பின் பல்கலைக்கழக பேரவை அங்கத்தவர் ஒருவர் நேரடியாக அதே ஒப்பந்தத்துடன் இணங்க முடியும்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (E) பிரிவின் பிரகாரம் கீழுள்ள அவதானங்கள் தவிர, சம்பந்தப்பட்ட எழுதப்பட்ட சட்டங்கள் அல்லது பல்கலைக்கழக பேரவையினால் வெளியிடப்பட்ட விசேட அல்லது பொது கட்டளைகள் என்பவற்றுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் தொடர்பானவை	அவதானங்கள்
(A) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1)(b)மற்றும் 38(2) பிரிவு	ஒவ்வொரு நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான ஆவணம் எழுதப்பட்ட நகலைக் கொண்டிருந்தாலும், அமைப்பின் செயல்திறனை மதிப்பாய்வு செய்வது அவ்வப்போது கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், இருப்பினும், அதன்படி செய்யப்படவில்லை.
(B) இலங்கை ஜனநாயக மீள்குடியேற்ற சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குமுறைகள் 571 (2)	நிதி ஒழுங்குமுறைகளுக்கமைவாக 2017 முதல் 2019 வரையான ரூ. 1,492,092 டெண்டர் வைப்பு மற்றும் 2016 முதல் 2019 வரையான ரூ. 1,729,464 பல்வேறு வைப்புத்தொகைகள் மற்றும் 2010 முதல் 2019 வரையான ஒப்பந்த மற்றும் இதர தக்கவைப்புத் தொகைகள் மொத்தம் ரூ. 137,470,912

(C) பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் XIX ஆம் பகுதியின்	
(i) 5.2.1 பந்தி	மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு பல்கலைக்கழகத்தில் உள்ள 81 ஊழியரடகளுக்கு குடியிருப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது, நிரந்தர வீடுகளை வைத்திருக்கும் திருமணமான அதிகாரிகளின் சம்பளத்தில் 12.5% மற்றும் நிரந்தர வீடுகளை வைத்திருக்கும் திருமணமாகாத அதிகாரிகளின் சம்பளத்தில் 7.5% திரும்பப் பெறப்பட வேண்டும். இருப்பினும முறையே ரூ 1,500 மற்றும் ரூ 750 மட்டுமே வீட்டு வாடகை சார்பில் வசூலிக்கப்பட்டுள்ளது.
(ii) 5.2.3 பந்தி	சாமரி வீடுகள் என்று பெயரிடப்பட்ட 31 குடியிருப்புகளின் பொருளாதார வாடகை மதிப்பிடப்படவில்லை மற்றும் குறைந்தபட்சம் ரூ. 400 முதல் அதிகபட்சம் ரூ. 750. மட்டுமே வீட்டு வாடகை சார்பில் வசூலிக்கப்பட்டுள்ளது.
(D) பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் XX ஆம் பகுதியின் 3.1 பந்தி	உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் வருகை மற்றும் புறப்படும் நேரத்தைக் குறிக்கப்பட வேண்டும் என்றாலும், கல்விசார் ஊழியர்களால் அவ்வாறு செய்யப்படவில்லை.
(E) இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக ஆராய்ச்சி கொடுப்பனவுகளுக்கான வழிகாட்டுதல்களின் பந்தி 2.1	ஆராய்ச்சி முற்பணப்பெறுகை 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்றாலும், 2008 முதல் 2021 வரை 9 அதிகாரிகளுக்கு முன்பணமாக வழங்கப்பட்ட ரூ. 1,008,427 மே 30, 2022 வரையிலும் செலுத்தப்படவில்லை.
(F) இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக ஆராய்ச்சி கொடுப்பனவுகளுக்கான	இறுதி ஆய்வுக் கட்டுரையை ஆய்வுக் குழுவிடம் ஒப்படைக்காத அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட

வழிகாட்டுதல்களின் பந்தி 3.3	முன்பணத்தை அவர்களது சம்பளத்திலிருந்து 4 தவணைகளில் வசூலிக்க வேண்டும் என்றாலும், 2017-2018 ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகளுக்காக அதிகாரிகளுக்கு 31 டிசம்பர், 2021 அன்று வழங்கப்பட்ட ரூ. 2,671,318 அவர்களின் சம்பளத்திலிருந்து வசூலிக்கப்படவில்லை. மேலும் அவர்களின் ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வுக் குழுவிடம் ஒப்படைக்கவில்லை
(G) நவம்பர் 25, 2019 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியக்குழுவின் 09/2019 ஆணையச் சுற்றறிக்கை	ஊழியர்குடியிருப்பு தொடர்புடைய தண்ணீர் கட்டணம், மின்கட்டணம் ஆகியவற்றை வீட்டின் பயனாளியே செலுத்த வேண்டும் என்றாலும், துணைவேந்தர் குடியிருப்புக்கான நீர் மற்றும் மின்சாரக் கட்டணமாக ரூ.197,917 பல்கலைக்கழகத்தால் செலுத்தப்பட்டடுள்ளது.
(H) பெப்ரவரி 11,2014 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 09/2019	ஆராய்ச்சி முன்மொழிவு செயற்பாட்டுத் திட்டத்தின் படி ˙இடைக்கால முன்னேற்ற ஆய்வு அறிக்கை, ஆராய்ச்சியின் தொடக்கத் திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், 2018 இல் அங்கீகரிக்கப்பட்டு தொடங்கப்பட்ட 08 ஆராய்ச்சிக்கான இடைக்கால முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு தொடங்கப்பட்ட ஒவ்வொரு ஆராய்ச்சிக்கான பயிற்சி முன்னேற்ற அறிக்கைகள் ஆராய்ச்சி முகாமைத்துவக குழுவிடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) ஆம் உப பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகம் ஆனது பல்கலைக்கழக அதிகாரம், செயற்பாடுகள் மற்றும் வலு என்பவற்றுக்கு அமைவாக தொழிற்படவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) ஆம் உப பிரிவின் பிரகாரம், பின்வரும் அவதானங்கள் தவிர பல்கலைக்கழகம் அதனுடைய வளங்களை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்தப்படவில்லை மற்றும் காலக்கிரமத்துக்குரியவாறான சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய கொள்வனவு செயற்பாடுகள் அவதானத்துடன் தொடரப்படவில்லை.

(A) விவசாய பீடத்தின் 50 மில்லி மீற்றர் தடிமன் கொண்ட பிரவேச சாலை அமைப்பிற்காக ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாக ரூ173,696 வழங்கப்பட்டுள்ளது.

(B) மிகிந்தலை வளாகத்தில் ஊழியர்களுக்கான 04 அலகு கொண்ட இரட்டை குடியிருப்புகளை நிர்மாணிபதற்கான திட்டத்தை பல்கலைக்கழகம் 2019 பெப்ரவரி 20 அன்று நிறைவு செய்தது. ரூ 3,952,742 ஆன செயற்றிறன் பத்திர தெகை 2018.02.12 அன்று காலாவதியானதுடன் ரூ10,540,647 முற்பணம் 2018.03.05 அன்று காலாவதியானது.மேலும் மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களை புதுப்பிக்க அல்லது பணமாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.எனவே ஒப்பந்ததாரரிடமிருந்து ரூ15,760,011 தொகையை ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட திகதியிலிருந்து வசூலிக்க பல்கலைக்கழகம் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

(C) பல்கலைக்கழகத்தில் 02-17 வருடங்களுக்கிடையே பதவி விலகிய இபணிநீக்கம் செய்யப்பட்ட மற்றும் ஓய்வூதியம் பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் கடன்தொகை ரூ 698,580 முறையாக வசூலிக்கபபடவில்லை.

(D) மொத்த மதிப்பீட்டில் ரூ 2,700,000 இருந்த அங்கீகரிக்கப்பட்டு ரூ 550,000 செலவில் 3 ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டன.மற்றும் மதிப்பிடப்பட்ட தொகையில் 20.3% ஆக அது பதிவு செய்யப்பட்டது.மேறப்டி ஆய்வுகள் டிசம்பர் 31,2021 க்குள் முடிக்கப்படாமையால் முறையாக செயற்படுத்த முடியவில்லை

(E) முகாமைத்துவ பீடத்திற்கு குளிரூட்டல் அமைப்பை நிறுவுவதற்கு ஒப்பந்த மதிப்பு ரூ 6,211,226 கொண்ட வழங்குனர் தேர்ந்தெடுக்க்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தாலும் ஒப்பந்த ஏற்பு கடிதத்தை அனுப்புவதில் சுமார் 2 மாத கால தாமதம் ஏற்பட்டதால் ஒப்பந்தக்காரர் மேற்படி கடிதத்தை நிராகரித்தார்.அதன்போதும் விலைமனு பாதுகாப்புப் பத்திரங்கள் காலாவதியானதால் பணமாக்குவதற்குமுடியாமலானது.

(F) ERP அமைப்பை மேம்படுத்துவதற்காக ஒப்பந்த மதிப்பு ரூ.17,500,000 கொண்ட தேர்ந்தெடுக்க்பட்ட் மனுதாரருக்கு ஒப்பந்தம் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது.இருப்பினும் ஒப்பந்ததாரரால் விலைமனு பாதுகாப்புப் பத்திரம் உரிய வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாதமைஇ கடந்த 5 வருடங்களில் முடிக்கப்பட்ட பிரதான 5 பணிகளுக்காக வழங்கல் மற்றும் பூர்த்தி கடிதங்கள் முறையாக சமர்ப்பிக்கப்படாதமை மற்றும் குறைந்தபட்ச சராசரி ஆண்டு வருமானம் ரூ 52.5 மனுதாரரால் பெறப்படாமை என்பவை கருத்திற் கொள்ளப்படாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததார் ERP

அமைப்பை பூர்த்தி செய்து 2021 டிசம்பர் 31 இல் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்திருக்க வேண்டும் என்றாலும் 02 மே 2022 வரையிலும் கூட அது பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்ப்படவில்லை.

2.3 உள்ளக கணக்காய்வாளரின் நோக்கில் உள்ளடக்கப்படாத விடயங்கள் உள்ளக கணக்காய்வாளரின் கடமைப் பட்டியல் மற்றும் உள்ளக கணக்காய்வுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.எனவே ஒவ்வொரு துறையினதும் உள்ளக கட்டுப்பாட்டை புகாரளிக்கும் பொறுப்பான உள்ளக கணக்காய்வாளரின் முக்கிய செயற்பாடு நிறைவேற்றப்படவில்லை.மேலும் உள்ளக கணக்காய்வாளரின் சுதந்திரமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்னே

கணக்காய்வாளர் நாயகம்

34. 2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்று குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் இடம்பெற்ற அவதானங்கள் பற்றிய பல்கலைக்கழக விளக்கங்களும் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மற்றும் அது குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் உப பிரிவின் தேவைக்கு அமைவான பிற சட்ட மற்றும் விதிமுறைகள்

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்று குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் இடம்பெற்ற அவதானங்கள் பற்றிய பல்கலைக்கழக விளக்கங்களும் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மற்றும் அது குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் உப பிரிவின் தேவைக்கு அமைவான பிற சட்ட மற்றும் விதிமுறைகள்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1. தரமான கருத்துரைகள்

1.2. தரமான கருத்துரைகளுக்கான அடிப்படைகள்

a) 2022 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோய் காரணமாக அவ்வப்போது பல்கலைக்கழகம் மூடப்பட்டதனால் இது தாமதமானது. 2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை அதற்கேற்ப உரிய மாற்றங்களுக்குட்பட்டு அனுப்பப்படும்.

b) 04 திட்டங்களில் இரண்டு திட்டங்களின் மதிப்பு ரூ. 1,007,740.00 கட்டிட சொத்துக் கணக்கில் 2021 ஆம் ஆண்டில் சரிசெய்யப்பட்டது.

சாலை கட்டுமானங்கள் மற்றும் ஆவியாதல் தட்டுகளுக்கான ரூ.15,767,310 ஐ கட்டிடக் கணக்கிலிருந்து உள்கட்டமைப்பு கணக்கிற்கு மாற்றம் செய்ய 2022 ஆம் ஆண்டில நடவடிக்கை எடுக்கப்படும்.

c) அநுராதபுரம் பொது வைத்தியசாலை மற்றும் பேராசிரியர் பிரிவுக்கு பாதுகாப்புக் குடில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2022 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழங்கல்கள் மூலம் பேராசிரியர் பிரிவுக்காக Eco – Cardiography இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. அனைத்து பராமரிப்பு சேவைகளும் அனுராதபுரம் பொது மருத்துவமனையினால் செய்யப்படும்.இது 2022 ஆம் ஆண்டில் அதற்கேற்ப சரி செய்யப்படும்.

d) இதற்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டு, குழு அறிக்கைகளை கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவுக்கு அனுப்பி, குழுக்களின் பரிந்துரைகளுக்கு பேரவையின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பேரவையின் முடிவுகள் 2022 ஆம் ஆண்டில் நிதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும்.

e) இது 2022 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும்.

f) இந்தக் கணக்கின் துல்லியமான வருமானத்தைக் கண்டறிந்த பின்னர் வருமானத்துடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

g) இந்த் புத்தகங்களின் இருப்புகள் 2022 ஆம் ஆண்டின் சொத்துக் கணக்கில் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

h) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் 09/2019 குறித்து ஆணைக்குழு விசாரித்தது, மேலும் பல்கலைக்கழக குடியிருப்பு குழுவின் முடிவின் அடிப்படையில் வீட்டு வாடகை வசூலிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி, குடியிருப்பு குழுவின் பரிந்துரையின் பேரில், திருத்தப்பட்ட வீட்டு வாடகைத் தொகைக்கு பல்கலைக்கழகம் ஒப்புதல் அளித்தது.

i) இது ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

j) வித்தியாசத்தை கண்டறிந்து அதற்கேற்ப சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3. பல்கலைக்கழக ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

1.4. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் நிர்வாகத்தினரதும் பொறுப்புக்கள்

1.5. நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்தலுடன் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

2. ஏனைய சட்ட மற்றும் விதிகளின் தேவைப்பாடுகளுக்கான அறிக்கை

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. பின்பற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் அல்லது அளவு சார் விடயங்களில் காணப்படும் வரையறைகள் போன்றவை காரணமாக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள கூற்றுக்களை மேற்கொள்வதற்கு எவ்விதமான சான்றுகளும் இல்லை.

2.2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (D) பிரிவின் பிரகாரம் கீழுள்ள அவதானம் தவிர அல்லது சாதாரண செயற்பாடுகளில் இருந்து தொடர்புகள் விலகி இல்லாவிட்டால் பல்கலைக்கழக பேரவை அங்கத்தவர் ஒருவர் நேரடியாக அதே ஒப்பந்தத்துடன் இணங்க முடியும்.

2.2.2.2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (E) பிரிவின் பிரகாரம் கீழுள்ள அவதானங்கள் தவிர, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக பேரவையினால் எழுதப்பட்ட சட்டங்கள் அல்லது வெளியிடப்பட்ட விசேட அல்லது பொது கட்டளைகள் என்பவற்றுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஒழுங்குமுறைகள்/ கட்டளைகளுக்கான குறிப்பு

a) பல்கலைக்கழகத்தின் அன்றாட நடவடிக்கைகள் தற்போது பல்வேறு தகவல் மற்றும் தொடர்பு அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் 2021 ஆம் ஆண்டில், இவ்வனைத்து அமைப்புகளும் ஒருங்கிணைந்த பல்கலைக்கழக முகாமை மென்பொருள் தீர்வு அமைப்பை (ERP அமைப்பு) நிறுவுவதற்கான ஆரம்ப கட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து, இந்த புதிய அமைப்பின் பயிற்சி அமர்வுகள் தொடங்கப்பட்டன. எனவே, ஆண்டின் உளளக கணக்காய்வுத் திட்டத்தில் பணி எண் 11-ன் கீழ், இது தொடர்பான மறுஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

b) இதை சரியாகக் கண்டறிந்து எதிர்காலத்தில் வருமானமாக எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்

c) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஸ்தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயம்.

i. பிரிவு 5.2.1

பல்கலைக்கழக மானியக் குழுவின் விசாரணையின்படி, பல்கலைக்கழகத்தின் இருப்பிடம் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழக வீட்டுவசதி குழு முடிவெடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, குழு உரிய திருத்தங்களைச் செய்துள்ளது. பேரவையின் துணைக் குழுவான வீட்டுக் குழுவால் இந்த உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு வீட்டு வாடகை வசூலிக்கப்படுகிறது.

ii. பிரிவு 5.2.3

பல்கலைக்கழக மானியக் குழுவின் விசாரணையின்படி, பல்கலைக்கழகத்தின் இருப்பிடம் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழக வீட்டுவசதி குழு முடிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, குழு உரிய திருத்தங்களைச் செய்துள்ளது. சபையின் துணைக் குழுவான வீட்டுக்

குழுவால் இந்த உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு வீட்டு வாடகை வசூலிக்கப்படுகிறது.

d) எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

e) இதுவரை 09 அதிகாரிகளில் ஐவரின் ரூ. 50000.00 முன்பணம் தீர்க்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தீர்க்கப்படாத முன்பணங்களுக்கு கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

f) தற்போது ஆய்வுக் குழுவால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

g) சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

h) 06 மாதங்களுக்குள் முன்னேற்றத்தைப் பெறுவதற்குத் தேவையான ஆலோசனைகள் ஆய்வுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளன. சரியான ஆய்வு நிகழ்நிலை அறிக்கை தராதமைக்கு நடவடிக்கை எடுக்க ஆய்வுக்குழு முடிவு செய்துள்ளது. கண்காணிப்புப் புள்ளிகள் சரியாக இருந்தன, எதிர்காலத்தில் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) ஆம் உப பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழக அதிகாரம், செயற்பாடுகள் மற்றும் வலு என்பவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

b.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) ஆம் உப பிரிவின் பிரகாரம், இக் காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட சட்டங்களின்படி பல்கலைக்கழகம் அதனுடைய வளங்களை அவதானமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் கொள்முதல் செய்து வருகின்றது அத்துடன் அதற்கேற்ப உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை.

a. மேற்கூறிய திட்டம் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மூலம் செய்யப்பட்டது. M/S Kasunsandu construction private Limited முதல் ஒப்பந்ததாரராக கொள்முதல் செயல்முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதிலும், நான்கு மாதங்களுக்கும் மேலாக ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை நிறைவேற்றாத காரணத்தால், பல்கலைக்கழகம் ஒப்பந்தத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தது. மறு கொள்முதல் மூலம், M/S திசாநாயக்க கட்டுமான நிறுவனம் மீதிப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது . முதல் ஒப்பந்ததாரர் இந்த சாலையில் நடைபாதை ABC மற்றும் ஒரு பக்க் டிஷ் வடிகால் கான்கிரீட் இடும்பணியை

முடித்தார். இந்த டிஷ் வடிகால்லுக்கு சரியான நீர்மட்டத்தைக் கொடுத்து சரியான தரத்துடன் நிலக்கீல் போடும் போது பிற்றுமின் அடுக்கின் தடிமன் 50 மி.மீ.தாண்டியுள்ளது. எனவே, இப்பணியில் ஏற்பட்ட தர இழப்பை இரண்டு ஒப்பந்ததாரர்கள் தவிர்த்துவிட்டு, தரமான பணிகளை மேற்கொள்ளச் சென்றதால், இந்த கூடுதல் தொகை செலவிடப்பட்டுள்ளதாக, மேற்கூறிய உண்மைகளின் மூலம், பல்கலைக் கழகம் முடிவு செய்கிறது.

b. 16.12.2016 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 20% முன்பணத் தொகையை இரண்டு தவணைகளில் செலுத்த பரிந்துரை செய்திருந்த போதிலும், 21.12.2016 அன்று நடைபெற்ற 213வது துறைசார் கொள்முதல் குழுவின் ஒப்புதலின் படி இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய 20% முன்பணத் தொகையை ஒப்பந்ததாரருக்கு ஒரே நேரத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.. கொள்முதல் வழிகாட்டுதல் விதிகளின் பிரிவு 2.5.1 பிரிவு 8.1.1 இன் படி துறைசார் கொள்முதல் குழுவின் முடிவு இறுதியானது. 21.12.2016 அன்று நடைபெற்ற 213வது துறைசார் கொள்முதல் குழுவின் முடிவு/அனுமதியின்படி 20% முன்பணத் தொகை மொத்தமாக செலுத்தப்பட்டதால், அதிக கட்டணம் எதுவும் செலுத்தப்படவில்லை. ஒப்பந்ததாரருக்கு 03 தவணைகளுக்கு பணம் செலுத்தப்பட்டு ரூ. 1,564,094.86 மொத்த முன்பணமான ரூ. 10,540,647.20. இருந்து மீட்கப்பட்டுள்ளது.

முன்கூட்டிய உத்தரவாதம் 05.03.2018 அன்று காலாவதியானதுடன் செயல்திறன் உத்தரவாதம் 12.02.2018 அன்று காலாவதியானது மற்றும் அந்த உத்தரவாதங்களின் காலத்தை நீட்டிக்க 17.04.2018 மற்றும் 24.04.2018 தேதியிட்ட கடிதங்கள் மூலம் ஒப்பந்தக்காரரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புகளின்படி, ஒப்பந்ததாரர் DFCC வங்கிக்கு 03.05.2018 அன்று அந்தந்த உத்தரவாதங்களின் காலத்தை நீட்டிக்குமாறு அனுப்பிய கடிதத்தின் நகல் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த குறிப்புக் கடிதத்தில் பணி வழங்குனராக உதவிப் பதிவாளர் மூலதன பணிகள் என பெயரிடப்பட்டிருந்ததால் 02.07.2018 அன்று மூலதன பணிகள் கிளையின் உதவிப் பதிவாளரால் ஒப்பந்ததாரருக்கு துணைவேந்தர் என்று சரி செய்ய கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், 24.04.2018 அன்று நடைபெற்ற முன்னேற்ற ஆய்வுக் குழுவில் மீதமுள்ள பணிகளை முடிக்கவும், நீட்டிக்கப்பட்ட உத்தரவாதங்களை வழங்கவும் ஒப்பந்ததாரர் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், 18.06.2018 அன்று நடைபெற்ற பல்கலைக்கழகத்துக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையே நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், ஒப்பந்ததாரர் உரிய உத்தரவாதங்களின் காலத்தை நீட்டித்து பல்கலைக்கழகத்துக்கு வழங்க ஒப்புக்கொண்டதுடன், 225வது பேரவை கூட்டத்தில் அதே தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தின்படி அதே ஒப்பந்ததாரர் நிறுவனம் மூலம் இந்த திட்டத்தை முடிக்க

பல்கலைக்கழகத்தின் முயற்சி இருந்தது. இருப்பினும், 20.02.2019 அன்று ஒப்பந்தம் முடிவடைந்ததால், ஒப்பந்த நிறுவனத்திடம் இருந்து நஷ்டத்தை வசூலிக்க ஒப்பந்தத்தின்படி சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 13.09.2017, 16.10.2017 அன்று பணிப் பொறியாளர் ஒப்பந்ததாரருக்கு அறிவித்தபடி, 28.11.2017 மற்றும் 14.02.2018 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட மதிப்பாய்வு மற்றும் 27.09.2017, 27.12.2017, 24.04.2018, 18.06.2018 மற்றும் 02.10.2018 கூட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்த ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தின் ஆரம்ப நிலையிலிருந்தே குறைவான முன்னேற்றத்தையே காட்டினார். 16.10.2017 மற்றும் 28.11.2017 தேதியிட்ட பணிப் பொறியாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, திட்டத்தின் பணிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ஒப்பந்தத்தின் ஆரம்ப நிலை 24.04.2018 அன்று நடைபெற்ற முன்னேற்ற ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இந்த குறைந்த முன்னேற்றம் குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. அங்கு ஒப்பந்ததாரர் இந்த திட்டத்தை முடிக்க நம்பிக்கை காட்டவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த கூட்டத்தில் கோரியபடி உத்தரவாதத்தை நீட்டிக்க வங்கியிடம் கோரிக்கையும் வைத்துள்ளார். 2018 இல் நடைபெற்ற முன்னேற்ற ஆய்வுக் குழுக் கூட்ட அறிக்கைகள், இந்தத் திட்டத்தை முடிக்கவும், வேறு ஒருவருக்கு இந்தத் திட்டத்தை வேறு ஒரு கொள்முதல் திட்டத்தின் மூலம் மாற்றவும் பல்கலைக்கழகத்திற்கு விருப்பம் இல்லை என்பதையும், இந்தத் திட்டத்தை முடிக்க இந்த ஒப்பந்ததாரர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பதையும் பிரதிபலிக்கிறது. ஆனால் ஒப்பந்ததாரரின் நிதிச் சிக்கல்கள் காரணமாக, இந்த ஒப்பந்தம் ஆகஸ்ட் 2018 க்குள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது, அதன் பிறகும், பல்கலைக்கழகம் கோரியபடி உத்தரவாதங்கள் நீட்டிக்கப்படவில்லை. எனவே, அப்போதைய நடைமுறை சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழக நிர்வாகம் சரியானது என்று கூறுகிறேன்

c. ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியை விடுவிக்கும்போது அந்தந்த கடன்களை வசூலிக்க ஏற்பாடு செய்யப்படும்.

d. பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இதனைப் பாதித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆனால் இனிமேல், ஆராய்ச்சி நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடரப்படும். அந்த அதிகாரிகளிடம் ஆய்வு நடத்தி பலவீனத்திற்கான காரணங்களை கேட்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

e. 20.08.2021 முதல் 01.10.2021 வரை நீடித்த கொரோனா தொற்றுநோய் காரணமாக நாடு முடக்கப்பட்டதால் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்படவில்லை.நாடு முடக்கப்பட்ட போது ஏல பாதுகாப்பு காலாவதியானதால், நீட்டிப்பைக் கோர முடியாது. மேலும், இந்த ஒப்பந்தம் வேறு ஒப்பந்தமாக மாற்றப்படாமல், மீண்டும் மனு கோரலுக்கு துறைசார் கொள்முதல் குழு முடிவு செய்துள்ளது.

f. எங்களால் வெளியிடப்பட்ட விலை மனு கோரல் ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எங்களால் கோரப்பட்ட செல்லுபடியாகும் காலம், மதிப்பு மற்றும் முறை ஆகியவை கோரப்பட்ட நடைமுறைகளின்படி வழங்கப்படுகின்றன மற்றும் வழங்கப்படும் மனு கோரல் பத்திரங்களின் விநியோகங்கள் (மதிப்புக் குறைப்புக்கான எழுத்துறுதி, செல்லுபடியாகும் எழுத்துறுதி மற்றும் நிபந்தனைகள் சமர்ப்பிப்பு) பாதுகாப்பு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் செல்லுபடியாகும் ஏலப் பாதுகாப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மனுதாரர்களிளும் முழுமையான முன் தகுதிகளை கொன்ட மனுதாரர் யாரும் இல்லை என்பதால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு விலை மனுக்களை சமர்ப்பித்தவர்களின் முன் தகுதிகளில் திருப்தி அடைந்ததுடன் அதன்படி மேலும் மதிப்பீட்டை மேற்கொண்டது. அதன்படி, இங்கு மிகவும் உகந்த தகுதியுடைய விலை மனு தேர்ந்தெடுக்கப்பட்டது.இணக்கமின்மை இருந்தபோதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரரை நிராகரிக்காமல் ஏலம் வழங்கப்பட்டது என்பதை பல்கலைக்கழகம் விலக்குகிறது. மேலும் இது ஒரு சிறந்த மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தமாகும், மேலும் இது மிகவும் பொருத்தமானதை உறுதிசெய்த ஒப்பந்ததாரருக்கு வாய்ப்பளிக்கிறது. மேலும் கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, சராசரி ஆண்டு வருமானம் 52.5 மில்லியன் ரூபாவை மதிப்பீட்டுப் புள்ளியாகப் பெற வேண்டும் என்றால், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, போட்டி மனுக்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்றும், எங்களின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட தொகை 17.5 மில்லியன் ரூபாய் என்றும் கருத்து தெரிவித்தது. ஆவணங்களில் 20 மில்லியன் வருவாய் கோரப்பட்டுள்ளதுடன் அனைத்து மனுதாரர்களும் இந்த அளவுருவைப் பூர்த்தி செய்துள்ளனர்.

கடந்த 05 ஆண்டுகளில் ஏலதாரர்களால் முடிக்கப்பட்ட ஐந்து முக்கிய ஒப்பந்தங்களின் விவரங்கள் ITB 11.1.5 விலைமனுத் தரவுத் தாளின் கீழ் கோரப்பட்டுள்ளன, ஆனால் ஒப்பந்ததாரர் எவரும் இந்தத் தகவலைச் சரியாக வழங்கவில்லை. இந்தத் தகவல் மதிப்பீடு மற்றும் தகுதி அளவுகோல்கள் அத்தியாயம் 03 இல் கூறப்பட்டுள்ளபடி மனுவை மதிப்பிடுவதற்கான அளவுகோல் அல்ல. இத் தகவல்கள்இ துறையில் மனுதாரர்கள் தொடர்ந்து இருப்பதைக் கண்டறிய கோரப்பட்ட தகவல் மட்டுமே. 17.08.2020 அன்று நடைபெற்ற தொழில்நுட்பக் குழு அறிக்கையின் எண் 08ன் கீழ் இது மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் கடந்த 05 வருட நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தாலும், மூன்று வருடங்களின் சராசரி வருமானம் மட்டுமே பத்திர மதிப்பீட்டு அளவுருக்களாகக் கருதப்பட்டது. அதன்படி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு முந்தைய மூன்று ஆண்டுகளின் சராசரி வருவாயை அண்மைய மூன்று ஆண்டுகளின் வெளியிடப்பட்ட நிதி அறிக்கைகளைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்தது. அதன்படி, இந்த மனுக்கள் அனைத்தும் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி வருமானத்திற்கான அளவுகோல்களை பூர்த்தி செய்ததால், இந்த மனுக்கள் தகுதியானவை என்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு முடிவு செய்தது.

சராசரி ஆண்டு வருமானத்தைக் கருத்தில் கொள்ளும் போது, வாங்குவதற்கு உத்தேசித்துள்ள பொருட்களின் விலை மற்றும் பொருட்களின் விற்பனை மீடிறன், பொருட்களின் தன்மை மற்றும் பொதுவாக விற்கப்படும் திறன் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுகின்றன. அமைப்பு வணிக ரீதியானது, குறைந்தபட்ச ஆண்டு வருமானம் மதிப்பிடப்பட்ட மதிப்பில் 4/3 ஆக இருக்க வேண்டும். அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஏலதாரர், ஏல ஆவணங்களில் கோரப்பட்ட ஆண்டு வருவாயை விட அதிகமாக ஈட்டும் நிறுவனமாக இருப்பதை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கவனித்தது. அதன்படி, இது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் சரிபார்க்கப்படவில்லை என்று நிராகரிக்கப்பட்டது.

01.01.2021 முதல் 30.06.2021 வரை நாட்டில் நிலவிய் கோவிட் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டதால் நிகழ்நிலைமுறை மற்றும் 50% குறைந்தபட்ச ஊழியர்களைப் பயன்படுத்தப்பட்டதால், இந்த அமைப்பின் வேலையைச் சரியாகச் செய்ய முடியவில்லை. மேலும் ஒப்பந்ததாரர் கோரியபடி 18.08.2021 அன்று நடைபெற்ற 225வது துறைசார் கொள்முதல் குழு ஒப்பந்த காலத்தை 31.12.2021 வரை நீட்டிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அமைப்பின் போது பல்வேறு தொகுதிகளில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்ததால் ஒப்பந்தக் காலத்தை மேலும் நீட்டிக்குமாறு ஒப்பந்ததாரர் கோரினார். இது கொள்முதல் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு 30.06.2022 வரை மற்றொரு நீட்டிப்பு பெறப்பட்டது. இக்காலத்திற்கு தாமதக் கட்டணம் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொள்முதல் வழிகாட்டுதல்களின் 2.8.4 படி இந்தக் கொள்முதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற கொள்முதல்களுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள், நிறுவனத்தின் தலைவரான துணைவேந்தரால் நியமிக்கப்பட்டு அந்த ஒப்புதலின் அடிப்படையில், இந்த கொள்முதலைக் கையாள்பவரான உதவி நிதி மேலாளர், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடன் சம்பந்தப்பட்ட குழு அதிகாரிகளுக்கு பணி நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.ஆவணங்கள் வழங்கப்பட்ட பிறகு, கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத் தரவு, டெண்டர் தரவு மற்றும் அறிவுறுத்தல்கள் மாற்றப்பட்டதை பல்கலைக்கழகம் ஏற்கவில்லை. துறைசார் கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை பல்கலைக்கழகம் வெளியிட்டு, அந்த அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் மட்டுமே கொள்முதல் செயன்முறை முடியும் வரை பின்பற்றப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கணக்காய்வு கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள துணை பரிமாணங்கள் மற்றும் துணை பரிமாணங்களுக்கான மதிப்பெண் முறை குறிப்பிடப்படவில்லை என்பதை பல்கலைக்கழகம் மறுக்கின்றது. அரசு கொள்முதல் வழிகாட்டுதல்கள் அத்தியாயம் 03 பந்தி 7.9.1 (a) இன் படி தகுதியான ஏலங்களை எவ்வாறு மதிப்பிடுவது என்பது பற்றிய மதிப்பீடு மற்றும் தகுதி துணை அளவுருக்களை தெளிவாகக் கூறுகிறது. மதிப்பெண் பெறும் விதம் ஏலத்தில் குறிப்பிடப்படவில்லை மற்றும் மதிப்பெண் நடைமுறை தெளிவாக மதிப்பெண் பட்டியலில் குறிப்பிடப்பட்டு, துறைசார் கொள்முதல் குழுவின் ஒப்புதலுடன் தரவரிசை

சமர்ப்பிக்கப்படுகிறது. இதனடிப்படையிலேயே கொள்முதலை பல்கலைக்கழகம் நடத்தியது. தேசிய கொள்முதல் முகமை SBD/01 படிவங்கள் தொடர்பான அனைத்து ஏல ஆவணங்களையும் தயாரித்தது, அதன்படி தேசிய கொள்முதல் முகமையிடம் மீண்டும் விசாரணை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று கருதப்பட்டது. SBD/01 ஏல ஆவணங்கள் மூலம் உருப்படிகளின் கீழ் வாங்கும் நோக்கம் கொண்ட ஒரு தகவல் அமைப்பு குறிப்பிட்டது மற்றும் சிக்கலான தகவல் அமைப்பு அல்ல என்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்தது. அதன்படி, துறைசார் கொள்முதல் குழு ஏல ஆவணங்களை அங்கீகரித்தது மற்றும் தொடர்புடைய ஒப்பந்ததாரர் பொருட்களின் கீழ் ஒரு குறிப்பிட்ட தகவல் அமைப்பாக தேவை, நோக்கம் மற்றும் குறிப்பு பொருட்களை தயாரிப்பார். மேலே குறிப்பிட்டுள்ள உண்மைகளின்படி, இந்த கொள்முதலுக்கு முன்வந்த இரண்டு மனுதாரர்களிடமிருந்து, 01 பணிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளுக்கு ஏற்ப, நிதி முன்மொழிவில் குறைந்தபட்ச முன்மொழிவைச் சமர்ப்பித்த தகுதியான மனுதாரரை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தேர்ந்தெடுத்து பரிந்துரைத்தது. மற்றும் துறைசார் கொள்முதல் குழுவின் ஒப்புதலுடன் தொடர்புடைய திட்டம் தொடங்கப்பட்டது.

2.3 ஏனைய விடயங்கள்

இது எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.

பேராசிரியர் G.A.S.கினிகத்தர

உபவேந்தர்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்